495
உமா
ஆசிரியர்: ஜி. உமாபதி
UMA
4 அணா
NOV '57 கார்த்திகை

அக்டோபர்
22ல்
முதல்
சென்னை
பாரகன்
பிராட்வே
மஹாலக்ஷ்மி
மற்றும்
தென்னாடெங்கும்
எஎல்எஸ் புரொடக்ஷன்ஸ்
அம்பிகாபதி
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
சங்கீதம்: ஜி. ராமனாதன்
ALS PRODUCTIONS
G.H. RAO
பூரண உரிமையாளர்: ராமநாதன் பிக்சர்ஸ். சென்னை-14.

divali greetings
துஷார்வனஸ்பதிநிராலாஸோப்
தயாரிப்பாளர்கள் அனைவருக்
கும் தங்கள் தீபாவளி வாழ்த்
துக்களைத் தெரிவித்துக் கொள்
கிறார்கள் !
Tushar
VANASPATI
Tushar
TUNGABHADRA INDUSTRIES, LTD.
KURNOOL.

உங்கள் அதிருஷ்டம் 1957-58க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1.25-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

Shree Swami SATNARAIN JYOTISH ASHRAM
(U. M.) HOSHIARPUR (Pb.)

இந்தியன் பாங்க் லிமிடெட்.,

ஸ்தாபி. 1907

தலைமை ஆபீஸ்:

"இந்தியன் பாங்க் பில்டிங்"

நார்த் பீச் ரோடு, மதராஸ்-1.

உள்ளூர் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், சௌகார்பேட்டை, சேத்துப்பட்டு, எழும்பூர், திருவல்லிக்கேணி, மவுண்ட் ரோடு, ராயப்பேட்டை, ஆள்வார்பேட்டை (தேனும்பேட்டை) மைலாப்பூர், காந்திநகர், தியாகராயநகர், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், சைதாப்பேட்டை, புரசவாக்கம், அயினுவரம், பெரியமெட் & ராயபுரம்.

தென்னுடு முழுவதிலும் பம்பாய், புதுடில்லியிலும் மற்றும் இந்தியா, சிலோன், மலேயா மற்றும் சிங்கப்பூரிலும் உள்ள பிரதான நகரங்களிலும் பிராஞ்சுகள் உள்ளன.

மூலதனம்:

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000/-
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000/-
செலுத்தப்பட்டது	...	ரூ.	65,85,415/-
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	90,50,000/-
டெபாஸிட்டுகள்	...	ரூ.	33·86 கோடிகள்

வெளிநாட்டுப் பரிவர்த்தனை உள்பட சகல விதமான பாங்க் அலுவல்களையும் கவனிக்கிறோம்.

டி. பி. பார்த்தசாரதி

காரியதரிசி



கலை அழகு மிகுந்து கவர்ச்சிகரமாகத் திகழ "பாக்கேஜிங்"

நீங்கள் தயாரிக்கும் சரக்குகளை விற்பனைக்கு அனுப்புவதற்கு முன்பாக, அழகுறச்செய்ய ஏன் "பாக்கேஜிங்" நிபுணர்களைக் கலந்து ஆலோசிக்கக்கூடாது?

உமா பிரிண்டர்ஸ் எந்தச் சரக்கிற்கும் ஏற்ற எழிலான தோற்றமும், பாதுகாப்புடன் கூடியதுமான, எல்லாவித அட்டைப் பெட்டிகள் தயார் செய்யத் தேவையான இயந்திர வசதி படைத்தவர்கள். நெடுநாளைய அனுபவம் உடையவர்கள். அவர்களைக் கலந்து ஆலோசியுங்கள். உங்கள் பணிபுரிய என்றும் உற்சாகத்துடன் இருப்பவர்கள்

உமா பிரிண்டர்ஸ்

ஸ்தாபிதம்: 1945

உமா இல்லம், சென்னை-1, (தமிழ்நாடு).

தென்னிந்தியாவில், அச்சிட்ட கலர் 'கார்ட்டன்'கள், அட்டைப் பெட்டிகள் தயாரிப்பதில் முதன்மையானவர்கள்.

எங்களிடத்தில் ஓவியம், பிளாக்குகள் மற்றும் அச்சுவேலைகளுடன், ஆப்செட் பகுதியும் உள்ளது.



EP

போன்: 2200. தபால் பெட்டி: 1377. தந்தி: ATTAPOTTY.

PRESIDENT
VEGETABLE
hair oil
MADRAS 1
PRESIDENT
BORATED
TALCUM POWDER
RATHOD TRADING CO
PRESIDENT
SNOW
பிரசிடெண்ட்
வெஜிடபில்
ஹேர் ஆயில்
ஸ்னோ
டால்கம் பவுடர்
மணத்திலும் குணத்திலும்
சிறந்தது.
RATHOD TRADING CO., MADRAS-1.
murli

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

பொருளடக்கம்

செடி 5 மலர் 7	நவம்பர், 57	ஏவிளம்பி-ஐப்பசி கார்த்திகை-மீ

வெற்றி வீரர்களைச் சந்திக்க வேலூருக்கு வாருங்கள்!	(தலையங்கம்)	....	9
கட்டபொம்மன் விழா		....	10
கீழத்தூவாலில் நீதிமன்ற விசாரணை தேவை!...			10
இந்தி மொழிச்சிக்கலிலே ராஜாஜியும் ம. பொ. சி-யும்!		....	11
இந்தியத் தாய்		....	12
உங்களுடன் ஒரு கணம்		....	13
வீரக் கட்டபொம்மன்...!		....	15
அழகேசன் — தேன்மொழி	(நாடகம்)	....	18
ஆலமரத்துப் பைங்கிளி!	(குறுநாவல்)	....	22
தீபாவளி	(கவிதை)	....	27
தீபாவளி வந்தது!		....	28
வாழ்க, நகையும் சுவையும்!	(சித்திரம்)	....	31
அஞ்சலி		....	32
பிரதிபலன்		....	41
இலக்கியச் சுவை	(கட்டுரைத் தொடர்)	....	42
"நீ ஒரு கோழை!"		....	47
பொம்மைப் பெண்		....	52
வாடா விளக்கு	(தொடர்கதை)	....	54
சந்தித்தோம்—சிந்தித்தோம்!		....	64
முதலாளி — அம்பிகாபதி	(விமரிசனம்)	....	74
மதிப்புரை		....	77
எங்கள் இதயங்கள் பேசுகின்றன:		....	78

உமா வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

19726

உமா ஆசிரியர்

வெற்றி வீரர்களைச் சந்திக்க வேலூருக்கு வாருங்கள்!

தமிழ்ப் பெரு மக்களே! தமிழரசு இயக்கம் கடந்த பத்து ஆண்டுகளில் சாதித்த வெற்றிகள் பல. இவ் வெற்றி விழாவினுக்கு அமைத்த வேள்விக்குத் துணை புரிந்தவை இரண்டு மாபெரும் சக்திகள். ஒன்று அன்பின் அறமும், இன்னொன்று பண்பின் குணமும். இவையே தமிழரசுக் கழகத்திற்கு வித்தூன்றிய வித்தகன் ஊழியர்களுக்குத் தந்த ஆயுதங்கள்: அதோடு தமிழ் நாட்டு மக்களுக்கு, 'செங்கோல்' தந்து அதன் மூலமாகச் செயலாற்றிய சாதனைகளை மனத்தில் கொண்டு, மேலும் தமிழகத்திற்கும் தமிழ் இனத்திற்கும் வாழ்வு தேட வேலைமாநகரிலே மாநாடு கூட்டி ஆக்க வேலைக்கு அஸ்திவாரம் அமைக்கப் போகிறார்.

ஆதலால், இதுவரையிலும் தமிழரசுக் கழகம் செய்த சேவைகளை அமைதியோடு கண்காணித்து வந்த புலவர் பெருமக்கள், தமிழகத்தின் தன்மானமுள்ள அரசியல்வாதிகள், தெய்வ பக்தியும் தேசப் பற்றும் கொண்ட சமுதாயப் பெரியவர்கள், எழுத்துலகச் சிற்பிகள், கலைஞர்கள், அறிஞர்கள் அத்தனை பேருமே இன்று பகிரங்கமாக வாழ்த்த ஆரம்பித்திருக்கின்றார்கள். ஆம்; அதன் சக்தியைவிட சாதித்த சாதனைகள் பெரிதல்லவா? என்ன சாதித்தார்கள் என்று மறந்துபோய் யாராவது எண்ணினால், இதோ மீண்டும் ஒரு முறை முக்கியமானவற்றைத் தொகுத்துத் தந்து ஞாபகப்படுத்துகிறேன்.

தமிழகத்தின் தலைநகர் சென்னையை தமிழ் இனத்துக்கே உரிமையாக்கினோம். ஆட்சி மொழி தமிழாக்கப் பாடுபட்டோம். தமிழகத்தின் எல்லைகளை மீட்டோம். தமிழ் இனத்தின் உத்தியோக உயர்வுக்காக போதனை மொழியும் தமிழாக்கப்பட வேண்டுமென்று குரல் கொடுத்து வருகிறோம். அனுசாரத்தை வளர்த்து வரும் வகுப்புவாதிகளின் துவேஷப் பிரசாரத்தை அடக்கியும், இன்னும் கலாசாரத்தையும், நமக்கே உரித்தான பண்பாட்டினைப் பாதுகாப்பதற்கும், மத்திய ஆட்சியினால் தமிழினத்துக்கு மேலும் நேரப் போகும் கெடுதிகளைத் தடுத்து நிறுத்தவும், மத்திய ஆட்சியின் அதிகாரங்களைக் குறைத்து மாகாண சுய ஆட்சியை உருவாக்கவும் வேலைமாநகரில் ஒன்று கூடப் போகிறோம்.

இனப் பற்றுக் கொண்ட தமிழ்ப் பெருமக்கள் யாவரும் வந்து கலந்திருந்து, இப்படி ஒரு உயர்ந்த சக்தியினை மேலும் பலப்படுத்தி, அது ஒரு அரசியல் ஸ்தாபனமாக உருப்பெற, ஒத்துழைக்க வாருங்கள் என்று அன்புடன் அழைக்கின்றார்—தமிழக வீரர்களுக்கு விழா துவக்கி, அவர்களின் சரித்திரங்களின் மூலமாக மறந்துபோன நம் வீரத்தைத் தட்டி எழுப்பிவரும் மாண்புமிக்க தமிழகத்தின் தலைவர் ம. பொ. சி. அவருடன் சேர்ந்து நானும் உங்கள் அனைவரையும் 'வருக! வருக!' என்று உரிமையுடன் அழைக்கிறேன்.

ஜி. உமாபதி

கட்டபொம்மன் விழா

வீரபாண்டியக் கட்டபொம்ம னின் வாழ்க்கைவரலாறுஉணர்ச்சி நிறைந்த ஓர் உயிர்க் காவியம். சுதந்திரப் போரை ஆரம்பித்து வைத்த முதல் தியாகி அவன். வீரபாண்டியன் நினைவு விழா தமிழ கத்தின் தலைநகரிலே வெகு சிறப் பாகக் கொண்டாடப் பட்டது.

கட்டபொம்மன் என்ற பெய ரைக் கேட்ட மாத்திரத்திலே அவ னுடைய வீரதீரப் பிரதாபங்களைப் பற்றி—அவனுடைய தேசபற்றைக் குறித்து-அவன் மனத்தில் இருந்த தெய்வ பக்தியைப் பற்றி இன்று பலர் சொல்லுவார்கள். அந்த அள வுக்குப் பாஞ்சைப் பதி மன்னனைத் தமிழ் மண்ணுக்கு அறிமுகம் செய்து வைத்து அவன் புகழைப் பரப்பிய முதற் பெருமையும் முதல் மரியாதையும் சிலம்புச் செல்வர் ம.பொ.சி அவர்களையே சேரும். இந்த உண்மை தமிழ் நாடு கண்ட முடிவாகும்.

பாஞ்சாலங் குறிச்சி அதிபதி சுதந்திரத்துக்காகப் போராடிய காலத்திலே குமரி முதல் இமயம் வரை வாழ்ந்த வெள்ளையர் ஒரே அணியில் இருந்தனர்; ஆனால் விடுதலைக்குபோராடிய வீரர்களோ பல அணிகளாகப் பிரிந்து இருந்த தால்தான் தோல்வி ஏற்பட்டது. இப்பாடத்தை யாரும் மறந்து விடக் கூடாது.

தேசபக்த பரம்பரையின் முதல்வனான வீரக் கட்டபொம்ம னின் விழா அரசாங்க விழாவாக நடைபெற வேண்டும். அடுத்த ஆண்டிலாவது இதற்கு ஏற்பாடு செய்யவேண்டியது நம் ஆட்சியின் பொறுப்பாகும். கட்சி பேதம் இல் லாமல் தமிழகமெங்கும் இவ்விழா கொண்டாடப் பட்டால்தான் நாம் நம் நன்றிக் கடனைச் சரிவர சமர்ப் பித்துக் கொண்டவர்களாக ஆவோம்!

கீழத்தூவலில் நீதி மன்ற விசாரணை தேவை!

இந்தியத் தலைவர்களின் கவ னத்தை ஒருமுகமாகக் கவர்ந்து அவர்களைக் கவலைகொள்ளச் செய்தன-தமிழ் நாட்டைச் சேர்ந்த முதுகுளத்தூர்ச் சுற்றுப் பகுதி களிலே நடந்த கொலைகள். பசும் பொன் முத்துராமலிங்க தேவர் அவர்கள் குற்றம் சுமத்தப் பெற் றுச் சிறைப்பட்டுள்ள இந்நேரத் திலேதான், நியாயத்துக்கு ஒவ் வாத வகையில் கீழத்தூவல் விசாரணையின் முடிவும் வெளியிடப் பட்டிருக்கின்றது.

மேற்படி பகுதிகளில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களைப் பற்றி விசாரணை செய்து அறிக் கைகள் சமர்ப்பித்துள்ளனர் திரு வெங்கடேஸ்வரனும் திரு தத்த ரும்! விசாரணை நடந்து கொண்டு இருக்கும் போதே, அமைச்சர்கள் குறிப்பாக ஒரு இனத்தின்மீது குறைசொல்லி வந்தால், அவர்கள் ஆணைக்கு எதிர்பார்த்து இருப்பவர் எப்படி மாறாக தீர்ப்புகூற முடியும்? இவ்விருவர் கருத்துக்களும் பொது மக்களின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலேதான் அமைந்துள்ளன. நீதியை நிலை நாட்டவேண்டியது ஆளுவோரின் பொறுப்பாகும்; ஆனால் பாரபட்ச மான நீதி கூடாது. நாட்டில் ஜன நாயக ஆட்சிதான் நிலவிவருகிறது என்பதை அனைவரும் உணர வேண்டுமானால், நீதி மன்ற விசார ணைக்கு வழி வகை செய்யப்பட வேண்டும். சட்டசபை அங்கத் தினர்கள் இந்த அநீதியைக் கண் டித்து வாதாடி நல்ல பலன் பெறு வர் என்று எதிர்பார்க்கிறோம். அப்போதுதான் முதுகுளத்தூர்ப் பகுதிகளிலே வீசிய சூறாவளி அடங் கும். தேவர் அவர்களின் விடுதலை யும் சமாதானத்தென்றலுக்கு உத வும் என்பதையும் சென்னை ஆட் சிக்கு ஞாபகப் படுத்துகிறோம்.

இந்தி மொழிச்சிக்கலிலே ராஜாஜியும் ம. பொ. சி—யும்!

இந்திப் பிரச்சினைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே பிள்ளையார் சுழியிட்டவர் ராஜாஜி. அந்த இந்தியை இப்போது எதிர்த்துப் பிரசாரம்செய்துவருபவரும் அதே ராஜாஜியேதான்! அன்றிருந்த நிலைமைக்கும் இன்றிருக்கும் போக்குக்கும் பாலமாக அமைந்திருக்கிறது ராஜாஜியின் பேச்சு. ''முன்னர் ஹிந்தியைப் படியுங்கள் என்றுதான் சொன்னேன்; இப்போதும் அந்தக் கொள்கையை நான் கைவிடவில்லை. தமிழகப் பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாக்கப் படவேண்டும்!'' என்று மாத்திரம் சொல்லிவிட்டு அவர் ஓய்ந்துவிடவில்லை. மத்திய அரசாங்க நிர்வாகம் — ராஜ்யங்களிடையே தொடர்பு முதலானவற்றிற்கு இந்தி மொழியையே பயன்படுத்த முற்பட்டுள்ள மேலிடத்தின் முடிவைக் கண்டித்தும் வருகிருர். இவ்விஷயம்தான் தமிழக மக்களின் கருத்துக்களைக் கவர்ந்துள்ளதாகும்.

மத்திய அரசின் நிர்வாகமொழி இந்தியாக அமைதல் கூடாது; இன்றுள்ள மாதிரி ஆங்கிலமே நிலவிவரவேண்டும் என்பது அவருடைய மையக் கருத்தாகும். ஆனல், கருத்துக்களை 'மையமாக'ச் சொல்வது அவர் வழக்கமல்ல; துணிந்து ஆணித்தரமாகக் கூறிவிடுவார்!

''ஹிந்தியை நாம் தமிழுக்குப் பதிலாகவாவது ஆங்கிலத்துக்குப் பதிலாகவாவது ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. சர்க்கார்பாஷை இங்கே தமிழாகவும், வெளியே ஆங்கிலமாகவும் இருப்பதுவே சௌகரியம்; நியாயம் என்கிருேம்.'' என்று கூறுகிருர் தலைவர் ராஜாஜி.

ஆனல், நம் தமிழ்நாட்டு அமைச்சரவையோ தம் கொள்கையை வரம்பிட்டுக் கூறத் தெம்மின்றி மதில்மேல் பூனையாக அமைந்துள்ளது. இந்த 'இரண்டுங் கெட்டான் நிலை' முதலில் மாற வேண்டும்.

இந்தி மொழிப் பிரச்னை விஷயத்தில் தமிழர்கள் ராஜாஜியின் தலைமையில் ஒன்றுபடவேண்டுமென்று கருதுகிருர் ம. பொ. சி. அவர்கள். இந்தியை மத்திய ஆட்சியின் அரசாங்க மொழியாகச் செய்யும் எத்தனத்தை காலவரையரையின்றித் தள்ளிப்போடுவது அவசியமெனவும், இடைக்காலத்திலே இந்தியைக் கற்றுக்கொள்ளுவதற்குத் தமிழ்மக்களை ஊக்குவிக்க வேண்டுமென்றும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்ருர் சிலம்புச் செல்வர்.

ஆகவே, இப் பிரச்சினையை ஒட்டிய மேற்படி கருத்துரைகளைத் தீர ஆலோசித்து, விரைவிலேயே ஒரு முடிவுக்கு வரவேண்டுவது நம் ஆட்சிப் பொறுப்பினர் கடமையாகும். இல்லையெனில், தமிழகத்தின் செல்வாக்கை அடியோடு இழக்க நேரிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

தீராத பிரச்னை என்றுதான் தீருமோ?

சிங்களத் தீவின் சரித்திரத்தில் முக்கியமான இடம் பெறத்தக்க ஒரு செய்தியைப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. திரிகோணமலையில் ஆங்கில ஆதிக்கத்தின் அடையாளமாக அமைந்திருந்த ஆங்கிலேயக் கடற்படைத்தளம் இப்போது இலங்கை ஆட்சி பீடத்தைச் சேர்ந்துவிட்டது. தங்களது உரிமையைக் காத்துக்கொண்ட மகிழ்ச்சியில் திரு பண்டார நாயகா திளைத்துக்கொண்டிருக்கும் இதே நேரத்திலே, இலங்கை வாழ் இந்தியத் தமிழர்கள் தங்கள் வாழ்வுப் பிரச்னையை எண்ணி எண்ணித் துயரக் கண்ணீர் வடித்துக்

கொண்டிருக்கிறார்கள். தோட்டங்களிலே பணியாற்றி வந்த தமிழ்ச் சகோதரர்களுக்கு இனி சிங்களத்தீவின் ஆட்சியில் வேலை கொடுக்கப்படமாட்டாதாம்! உழைப்பை உறிஞ்சிக் காலூன்றிக் கொண்ட இலங்கைக்கு இனி தமிழர்களின் வேர்வைக் காணிக்கை செலாவணியாகாத நாணயம் போலத்தான்! இலங்கைத் தோட்டங்களிலே இந்திய வம்சாவழி வந்தவர்கள் கிட்டத் தட்ட ஒன்பது லட்சம்பேர்கள் வேலைசெய்து வருகின்றார்கள்.

பல காலம் புயலைக் கிளப்பிவிட்டு வந்த பிரஜா உரிமை நல்ல பலன் காட்ட நம் பாரத அரசாங்கமும் தமிழக ஆட்சியும் போதிய ஒத்துழைப்பைக் கொடுத்திருந்தால், இலங்கையை விட்டு இந்தியத் தொழிலாளர்களையும் நம் உழைப்பாளித் தமிழர்களையும் விரட்ட சிங்களவர்கள் எப்படித் துணிவார்கள்?

தம் உரிமைகளைக் காப்பதில் கவனம் கொண்டுள்ள இலங்கை. இந்திய மண்ணைச் சார்ந்த தொழிலாளர் உரிமைகளையும் காத்துத் தர முன்வராதது விசித்திரம் தான். இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமை உருவாகியும் கூட, நேருஜி தக்க நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், அப்புறம் உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு குறையும்; நேருஜியின்மீது பொது மக்களுக்குள்ள மதிப்பும்குறைந்துவிடும். உறுதி! ஆம், சொந்த நாட்டில் மதிப்பு குறைய ஆரம்பித்தால், வெளிநாடுகளிலும் தானாகவே குறையவேண்டியதுதானே!

இந்தியத் தாய்

'மதர் இந்தியா' – 'இந்தியத் தாய்' என்ற இந்த ஹிந்திப் படமும் திரு மெஹ்பூப்பின் உழைப்பிற்கும் கலைப்பணிக்கும் பெயர் வாங்கிக் கொடுக்கும் வகையிலேயே அமைந்திருக்கின்றது.

ராதா என்னும் மாதரசிதான் இந்தியத் தாய். கோடானு கோடி ஏழை உழவர்களின் துயரத்துக்கு அவள் ஒரு பிரதிநிதி. இந்தப் பெண் தன் இன்பக் கணவனுடன் வயல்களில் வேலை செய்து பாடுபட்டு வாழ்க்கைத் தேரை உருட்டுகிறாள். இதற்கு முட்டுக் கட்டையாக வாய்க்கிறான் ஒரு சௌகார். அவன் செய்யும் அநியாயங்கள் எல்லை மீறுகின்றன; அதன் பலன், ஆதரிசத் தம்பதிகளுக்குத் தொல்லைகள் உண்டாகின்றன. விதியின் சதியும் சேருகிறது. வட நாட்டுக்குப் பழக்கப்பட்ட வெள்ளம் வருகிறது. குடும்பம் சீரழிகிறது. இரு பிள்ளைகளில் ஒருவன் 'காலி'யாகச் சுற்றுகிறான். தான் பெற்ற செல்வத்தைத் தன் கையாலேயே சுட்டு விடுகிறாள் இந்தத் தாய். சமூகம் ஒன்று தான் அவளுக்கு அப்போது உயர்வாகப் படுகிறது. உயர்ந்த முறையில் சித்தரிக்கப் பட்டிருக்கிறது இந்தக் கட்டம்.

'தோபிகா ஜமீன்' திரை உலக அரங்கில் புகழப்பட வில்லையா?

இலட்சியத் தாயாக, அன்னை பூமியின் விடி விளக்காகத் தோன்றும் ராதாவின் பாகத்தை திருமதி நர்கீஸ் ஏற்றிருக்கிறார். ராதாவாகவே உருமாறி விட்டார் அவர் என்று சொன்னால், இது மிகைப் படுத்திச் சொல்லிய முடிவன்று. உண்மை. சுனில்தத், ராஜேந்திர குமார், ஜிலூமா, ஷிலேநாய்க், ராஜ்குமார், கன்யாலால், சஞ்சல் போன்ற நட்சத்திரங்கள் வேஷங்களை ஏற்று உணர்ந்து நடித்துள்ளனர்.

நீதி புகட்டும் இம்மாதிரிப் படங்களை நாடு பூராவும் ஒவ்வொரு கிராமம் தோறும் திரையிடச் செய்ய அரசாங்கத்தினர் பொறுப்பேற்று விநியோகித்தால், நாட்டுப் பணியைச் சிறப்பாகச் செய்தவர்கள் ஆவார்கள்!

உங்களுடன் ஒரு கணம்...

தீபாவளிப் பண்டிகை கழிந்துவிட்டது. ஆனாலும், இவ்விதழ் 'உமா' உங்களுக்கு மீண்டும் தீபாவளி நினைவுகளைக் கிளறிவிடும் என்பது உண்மை. எண்ணி எண்ணி மகிழவேண்டிய நிகழ்ச்சிகள் பல தீபாவளித் திருநாளிலே நடந்திருக்கும் அல்லவா?— அவற்றை ஞாபகப்படுத்த உதவும் திரு மாதவன் வரைந்த ஓவியம்.

தமிழரசுக் கழகத் தலைவரின் கட்டுரையை வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம். தமிழ்ப் பேராசிரியரின் ஒவ்வொரு கட்டுரையிலும் ஒவ்வொரு புதிய ஆராய்ச்சி காணக் கிடக்கின்றது

கலைவாணர் ஜோடியின் பெயர்களைக் கொண்டே அவர்களுடைய உருவங்கள் வரையப்பட்டிருக்கின்றன.

'சந்தித்தோம்— சிந்தித்தோம்' பகுதி இனி எல்லோருடைய இலக்கிய மனங்களையும் அதிகமாய்க் கவரும். பேட்டி கொடுப்பவர்கள் விடைதரும் பதில்களுடன், கேள்விகளைத் தயாரிக்கும் நம் துணை ஆசிரியரும் தம் கருத்துக்களை வழங்கயிருக்கிறார். சூடும் இருக்கும்; சுவையும் காணமுடியும்.

வணக்கம். **ஆசிரியர்.**

உமா

1958

பொங்கல் மலர்

உண்மையான இலக்கியத் தொண்டு புரிந்து வரும் தமிழறிஞர்கள், என்றென்றும் நினைவில் தங்கக்கூடிய சிரஞ்சீவிக் கதைகளைப் படைப்பதில் கைதேர்ந்த கதாசிரியர்கள், 'நமக்குத் தொழில் கவிதை' என்று பெருமையுடன் கூறி அருமையாகக் கவிபுனையும் கவிஞர்கள், மூவண்ணச் சித்திரங்களை வரைந்து அவற்றுக்கு உயிர் கொடுத்துப் பேச வைக்கும் ஓவிய மன்னர், எண்ணி எண்ணிச் சிரிக்கவும் பார்த்துப் பார்த்து மகிழவும் செய்யும் பிரபல சித்திரக்காரர்கள் ஆகியோர் சந்திக்கும் இலக்கியக் கலைக் கூடம் எளிய முறையில் உருவாகிறது. விலை அணா எட்டு.

வடாற்காடு மாவட்ட தமிழரசுக் கழக 4-வது இலக்கிய—அரசியல் மாநாடுகள்

நவம்பர் 2, 3, தேதிகளில் வேலூர் டவுன் ஹாலில் நடைபெறும்

2–11–57 சனி காலை 9 மணிக்கு

இலக்கிய மாநாடு

திறப்பாளர் :

வித்வான் **கி. வா. ஜகன்னாதன்**

வரவேற்புரை :

கே. எஸ். கந்தசாமி

தலைவர் :

கா. அ. ச. ரகுநாயகம் எம். ஏ.

பேச்சாளர்கள் :

ப. ஜீவானந்தம், ந. சஞ்சீவி
கோ. கலிவரதன்

பிற்பகல் 3 மணிக்கு மேல்

'உமா' ஆசிரியர்

ஜி. உமாபதி தலைமையில்
படத் திறப்பு விழாக்கள்

3–11–57 காலை 8 மணிக்கு

கு. மா. பாலசுப்பிரமணியம்
தலைமையில் ஊர்வலம்

அரசியல் மாநாடு

கொடியேற்று விழா :

'ஔவை' **டி. கெ. சண்முகம்**

திறப்பாளர் :

கலைஞர் **ஏ. பி. நாகராஜன்**

வரவேற்புரை :

வி. கே. குப்புசாமி

தலைவர் :

மதுரை சா. கலியாணசுந்தரம் பி. ஏ.

பிற்பகல்

தமிழிசை மணி **ஜி. சாலமன்** குழுவினர்
இன்னிசை

மாலை 3 மணிக்கு

கவி கா. மு. ஷெரீப்
குடந்தை எஸ். டி. பாலு,
எஸ். கே. பாலசுப்பிரமணியம்
இதயவேந்தன், ஞானதாசன்,
ஈ. எஸ். தியாகராசன்,
கு. சா. கிருஷ்ணமூர்த்தி,
சேலம் மா. கோபால், எம். சி.,
பள்ளிகொண்டை சாம்பசிவம்,
வேலூர் கிருஷ்ணமூர்த்தி,
பெரம்பூர் அருமைநாதன்
ஆகியோர் பேசுவர்,

8 மணிக்கு

எம். ஏ. வி. பிக்சர்ஸ் உரிமையாளர்

திரு எம். ஏ. வேணு அவர்கள்

இயக்கக் கலைஞர்களுக்கு
கேடயங்கள் வழங்குவார்.

இரவு 9 மணிக்கு

ஏ. பி. நாகராஜன், எஸ். எஸ். கதிரேசன் நடிக்கும்

'கட்டபொம்மன்' ஓரங்க நாடகம்

குருவாயூர் பொன்னம்மாள் குழுவினர்
இயக்கப் பாடல்கள் பாடுவார்கள்.

இரண்டு நாள் மாநாடுகளிலும் மாலை 5 மணிக்கு

தலைவர் ம. பொ. சி.

சொற்பொழிவாற்றுவார்.

வீரக் கட்டபொம்மன்

சுத்தத் தமிழனே!

ம.பொ. சிவஞானம்

'கட்டபொம்மன் விழா' தமிழ் மண்ணுக்குப் புத்துணர்ச்சி யூட்டிக் கொண்டிருக்கிறது; அரங்கத்தின் வாயிலாகவும் புகழ் பரப்பப் படுகிறது. செந்தமிழ்ச் செல்வர் இக்கட்டுரையை ஏற்கனவே தம் பத்திரிகையில் எழுதியிருக்கின்றார். அற்புதமான கருத்துக்கள். 'உமா'வுக்கும் 'செங்கோலு'க்கும் ரத்தபாசம் மிகுதியல்லவா?

—ஆசிரியர்.

இந்திய மண்ணில் எத்தனையோ போராட்டங்கள் நடந்திருக்கின்றன. அவற்றைப் பற்றி படித்தாலும், படிக்கக் கேட்டாலும் உடல் சிலிர்க்கும்; உள்ளத்தில் வீர உணர்ச்சி பொங்கும்; கோல் பிடிக்கத் துணிவற்ற கோழையும் வாள் பிடித்துப் போர்க்களம் புகத் துடிப்பான்.

இராம – இராவண யுத்தம்.

பாண்டவர் – கௌரவர் போர்.

செங்குட்டுவன் – ஆரிய மன்னர் யுத்தம்.

இப்படி, எத்தனை எத்தனையோ யுத்தங்களை இலக்கியங்களில் படிக்கிறோம். போர்க்களத்தின் வருணனைகளைப் படிக்கும்போது கவிஞருடைய கற்பனைத் திறத்தைக்கண்டு வியப்படைகின்றோம்.

இலக்கியங்கள் கூறும் இந்த யுத்தங்கள் உண்மையில் நிகழ்ந்தனவா? அல்லது, முற்றிலும் கற்பனையா? உண்மையில் நடந்தவையானால், ஒரு சிறு சம்பவத்தை — யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு கற்பனைசக்தியில் காப்பியம் எழுதப்பட்டதா? – இவ்வாறு கேள்விகள் எழுகின்றன.

காப்பியத்தில் வரும் யுத்த வீரர்கள் கடவுள் அவதாரமாகவும் கூறப்படுகின்றன. இதனாலும், அறிவு ஒன்றைமட்டுமே பிடித்துக் கொண்டு கற்பனையைச் சுவைக்கப் பயிற்சி பெறாத உள்ளம் ஐயமென்னும் படுகுழியில் விழுந்து அல்லல் படுகின்றது.

இவையெல்லாம் இலக்கியங்களில் கூறப்படும் யுத்தங்களைப் பற்றியவை.

18-ம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு மகாயுத்தம் துவங்கியது. ஆம்; ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இந்தியமக்கள் சார்பில் துவக்கப்பட்ட விடுதலைப் போரையே இங்கு குறிப்பிடுகின்றேன். அந்தப் போர் 1792-ல் துவங்கியது. துவக்கி வைத்த

> நண்பர்களின் உறவே மிக்க உயர்ந்த அறிவு. அதன் ஆதரவு இல்லாதவன் வெகு விரைவில் தன் நிலை தவறி எதிரியின் பிடியில் விழுந்து விடுவான்.
>
> —பஞ்சதந்திரம்.

மாவீரன் பாஞ்சைப் பதி மன்னன் வீரபாண்டியக் கட்டபொம்மனுவான். இந்த யுத்தம் நடந்ததா, இல்லையா என்ற ஐயப்பாடு எவருக்கும் இல்லை. நடந்தது நிச்சயம்

இராம – இராவண யுத்தம் ஒரு சில மாதங்களே நடைபெற்றது.

பாண்டவர் — கௌரவரிடையே நடந்த போர் 18 நாட்களே நிகழ்ந்தது.

சேரன் செங்குட்டுவன், ஆரிய மன்னருடன் நடத்திய போர் 18 மணி நேரத்திலேயே முடிந்துவிட்டது.

ஆனல், வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வீரபாண்டியன் துவக்கிவைத்த போர் 155 ஆண்டுகள் வரை நடைபெற்று, 1947 ஆகஸ்டு 15-ல் முடிவுற்றது. அதனுற்றான் அதை வெறும் விடுதலைப் போர் என்று சொல்லாமல் மகா யுத்தம் என்கின்ருேம்.

இலக்கியங்கள் கூறும் யுத்தங்கள் எல்லாம் துவக்கம் முதல் இறுதிவரை மன்னர்களின் தலைமையிலேயே நடைபெற்றன.

ஆனல், பாஞ்சைப் பதியில் துவங்கிய பாரதநாட்டின் விடுதலைப்போர் மன்னர் தலைமையில் தான் துவங்கியது. வீரபாண்டியன் பாஞ்சாலங் குறிச்சி மன்னன் என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும், மக்கள் மனவழித்தான் அவன் போர்க்களம் புகுந்தான். போரில் தற்காலிகமாகத்தோல்வியுற்று 16–10–1799-ல் தூக்கு மேடையில் மாண்டான்.

மன்னன் கட்டபொம்மன் தலைமையில் துவங்கிய விடுதலைப் போர் மகாத்மா காந்தி யடிகளின் தலைமையில் வெற்றியோடு முடிந்தது. இந்த இரு தலைவர்களுக்கு இடையிலுள்ளது ஒன்றரை நூற்ருண்டு காலம். அந்தக் காலத்தில், ஊமைத் துரை, மருதுபாண்டியர், தளவாய் வேலுத்தம்பி, ஜான்சி ராணி, தாந்தியா தோபே, நானு சாகிப் போன்ற மாவீரர்கள் பலர் மக்களுக்குத் தலைமை தாங்கினர். போரில் கட்டபொம்மனுக்கு நேர்ந்த முடிவே அவனுக்குப் பின் தலைமை தாங்கிய வீரர்களுக்கும் நேர்ந்தது.

1885-ல் யுத்தத்தின் நடைமுறை மாறியது. ஆனல், லட்சியம் மாறவில்லை. புதிய நடைமுறைக்கு திலகர், காந்தியடிகள் ஆகிய தலைவர் பலர் பொறுப்பேற்றனர். இது வரலாறு.

சுருங்கச் சொன்னல், இந்திய விடுதலைப் போர், 1792ல் தெற்கே துவங்கியது; 1947-ல் வடக்கே முடிந்தது. போரைத் துவக்கிவைத்தவன் மண்ணுளும் மன்னன். அதை முடித்து வைத்தவர் கோடானுகோடி மக்களின் மனதை ஆளும் மகாத்மா.

இராமாயணப் போரில் தலைமை தாங்கிய இராமனும். பாரதப் போரில் வழிகாட்டியாக இருந்த கண்ணனும் நம்மைப்போன்ற மனிதர்களா?—அல்லது, கடவுளின் அவதாரங்களா என்ற ஆராய்ச்சி காரசாரமாக நடைபெற்று வருகின்றது.

இராமனும் கண்ணனும் தெய்வங்கள் என்பர் ஒரு சாரார்.

இல்லை; மண்ணுண்ட மன்னர்கள் அதாவது, நம்மைப்போன்ற மனிதர்கள் என்பார் மற்ருெரு சாரார்!

இந்த ஆராய்ச்சி இன்னமும் முடியவில்லை. இனியும் முடியப் போவதில்லை.

இதேபோல, கட்டபொம்மன் தமிழனு, அல்லது ஆந்திரனு?— என்று ஓர் ஆராய்ச்சி நடக்கின்றது. இந்த ஆராய்ச்சியாளர்க

ளுக்கு தி. மு. க. தலைவர் அண்ணாத்துரை தலைமை தாங்குகின்றார்.

விடுதலைப் போரில் பங்கு கொண்ட தேசபக்தர்கள், அப்போரைத் துவக்கி வைத்தவன் கட்டபொம்மனா, அல்லவா என்பது பற்றி ஆராய்கின்றனர். விடுதலைப் போர் துவங்கிய இடம் வட இந்தியாதான் என்கின்றனர் டில்லி பெருமக்கள்.

இல்லை; தளவாய் வேலுத்தம்பி துவக்கிவைத்த போர்தான் தொடர்ந்து நடைபெற்று ஆகஸ்டு 16-ல் வெற்றியில் முடிந்தது என்கிறார் கேரள முதலமைச்சர் நம்பூதிரி பாத்.

விடுதலைப் போரைத் துவக்கி வைத்தது கட்டபொம்மனாகவே இருக்கட்டும். வெறிவழி பலாத்கார ரீதியில் போரிட்ட அவனுக்கு அகிம்சையில் பற்றுள்ள காந்திய வாதிகள் அஞ்சலி செலுத்த முடியுமா?—ஒரு சாரார் எழுப்புகின்ற கேள்வி இது.

இந்த விவாதங்களும், வேற்றுமைகளும் கொள்கை வழிப்பட்டவை. லட்சிய வளர்ச்சிக்கு, அரசியல் வாழ்வின் தூய்மைக்கு இத்தகைய வாதங்கள் தேவைப்படுகின்றன. விவாதிப்போர் பண்புடையவர்களாயின் விவாதத்தால் கேடு நேராது.

ஆனால், அன்பர் அண்ணாத்துரை அரசியல் கண்கொண்டு கட்டபொம்மனைக் காணவில்லை. காண முடியாதுதான். ஏனெனில் அவர்கள் அரசியல் சரித்திரம் அப்படி!

கட்டபொம்மனின் வீர சாகசங்களைப் பற்றியும் அவர்கள் ஆராயவில்லை. வழக்கம்போல பிறப்பு வழி கட்டபொம்மன் இனத்தைப் பற்றி ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

அரசியலிலே சாதிவழி ஆராய்ச்சிகள் நடத்தி, அதற்கெனக் கட்சி நடத்தி வருபவர்கள், கட்டபொம்மன் இனத்தைப்பற்றி ஆராய்வதில் ஆச்சரியமில்லை.

பாஞ்சைக் கட்டபொம்மன் தமிழன் என்பதற்காக மட்டுமே, அவ்வீரனுக்குத் தமிழரசுக் கழகத்தார் வணக்கம் செலுத்தவில்லை. அவன் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் விரோதி; விடுதலை வேட்கை கொண்ட தேச பக்தன்; போரில் புறமுதுகு கொடாது மாண்ட மாவீரன். இந்தக் காரணங்களுக்காகவும் வீரபாண்டியனுக்கு விழா எடுக்கிறோம். அவன் தமிழ்நாட்டானாகவும் இருப்பது நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஒருகால், அவன் ஆந்திரனாகவோ, கேரளனாகவோ, அல்லது குசராத்தியாகவோ இருந்திருப்பானாயின், அப்போதும் அவனுக்கு விழா எடுக்கத் தவறமாட்டோம்.

ஏனெனில், இந்தியா முழுவதும் ஒரே ஐக்கியமாக இருக்க வேண்டும்; இந்தியர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தேசிய உணர்ச்சி வளர வேண்டும் என்று எண்ணுபவரன்றோ தமிழரசுக் கழகத்தார். அதுபோல தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளைப் பேசுவோர் ஒரேதிராவிடஇனத்தவர். சிதைக்க முடியாத — சிதைக்கவும் கூடாத ஒரே நாடு திராவிடம் என்று பேசுவோர் திராவிடருக்குள்ளே ஆந்திரர், தமிழர் என்று பேதம் பார்ப்பானேன்?

கட்டிவைத்த வீட்டுக்குக் குற்றம் சொல்வது ஒரு சிலருடைய சுபாவம். அவர்கள் வீடு கட்டும்போது கை கொடுக்க மாட்டார்கள். கட்டியவனுக்கு நன்றி செலுத்தும் பண்பும் இல்லாதவர்கள். அவர்களைப்போலமறைந்து கிடந்தகட்டபொம்மன் புகழை மக்கள் மத்தியில் பரப்ப முன்வராதவர்கள், அவனுடைய தேசபக்தி உணர்ச்சிக்குப் பிரதிநிதிகளாக இருக்க முடியாதவர்கள், அம்மாவீரனின் உடம்பைப் பற்றி — பிறப்பைப் பற்றி ஆராய்ச்சி நடத்துகிறார்கள்; நடத்தட்டும். அந்த அளவிலேனும் ஒரு தேசபக்தனைப்பற்றி எழுதவும், பேசவும் வாய்ப்புத் தேடிக் கொடுத்த பெருமை நம்முடையது தானே...! ★

'ஜாதி ரோஜா' நவீனத்தில் அறிமுகப் படுத்தாத புதுப் பாத்திரம் இந்தத் தேன்மொழி. நாடகத்தில் அரங்கேறி ஆடுகிருள். நல்ல பெண்மணி. இரு துருவங்களாக அமைந்துள்ள பகுதிகள் இவை. அழகேசனைத்தான் உங்களுக்குப் பழக்கம் உண்டே! ஆர்வமுள்ள நண்பர்கள் பலர் கேட்டுக் கொண்டார்கள். அண்மையில் மேடையேற இருக்கும் நாடகத்தின் உதிரிப் பூக்கள் இவை. கட்டாயம் மணம் பரப்பும்.

—பூவை

அழகேசன்

ஒன்று

[மைலாப்பூரில் அழகேசன் பவனம்; ஹால். படங்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன; நிலா மலர்ந்த இரவு.]

'கலீர், கலீர்' என்ற ஓசையுடன் மெல்லிய குரல் கேட்கிறது. அழகேசன் அழகாக உடை உடுத்துக்கொண்டு சிகரெட்டும் கையுமாக நாற்காலியில் அமர்ந்திருக்கிருன். அவன் முன்னே தேன்மொழி நடனமாடிக்கொண்டிருக்கிருள்.

[பாட்டும் நடனமும் முடிகின்றன. ஆவலுடன் தேன்மொழியை நெருங்குகிருன், அழகேசன்.]

அழகேசன் : தேன்மொழி! உன் ஆட்டம் முடிந்துவிட்டதா? பாட்டுக்கு மங்களம் பாடிவிட்டாயா? இன்னும் ஒரு முறை ஆடமாட்டாயா? மீண்டும் உன் கனி இதழ்களைத் திறந்து அமுதகானத்திற்கு வழி விடமாட்டாயா? உன்னுடைய அங்கயற் கண்கள் இரண்டும் ஏன் அப்படி ஊடல் வசப்பட்டிருக்கின்றன?....ஓஹோ, சங்ககாலத் தலைவன் — தலைவியரின் காதல் விளையாட்டுக்கள் உனக்கும் தெரியுமா? முன்னறிவிப்பு எதுவுமில்லாமல் நீ ஆட்டத்தையும் பாட்டையும் நிறுத்திவிட்டதற்குக் காரணம் புரிகிறது. என் உள்ளமும் உயிரும் உன் பாட்டிலும் கூத்திலும் லயித்திருந்ததைக் காண உன் நெஞ்சு பொறுக்கவில்லை போலும்! பேதை நீ! உன்னுடைய போதையில் என் நெஞ்சை உன் பாதங்களிலே தஞ்சமடையச் செய்திருக்கின்றேனே, இன்னுமா நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லை....? தேன்மொழி!— பெயரிட்டவர்களுக்குக் கொம்புத் தேனைப் பார்த்துத்தான் பரிசு வழங்கவேண்டும். என்ன அப்படிப் பார்க்கிருய்? ஓஹோ, நீயேதான் இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்துப்புனைந்துகொண்டாயா? பேஷ்!......தேன்சொட்டும் பெயரைக் கேட்டதும், நான்கூட அப்படி நினைத்ததுண்டு. ஆனால் ஒரு விண்ணப்பம் — நீ என்வரை கொம்புத் தேனைக ஆகிவிடமாட்டாயல்லவா? நான் அதிருஷ்டசாலி. பேசாத அந்த விழிகளும் பேசிக்கொண்டிருக்கும் இந்த இதழ்களும் எனக்கு நல்வாக்குக் கொடுத்துவிட்டன! ஆஹா, நான் பாக்கியம் செய்தவன்!

[தேன்மொழி 'கட கட' வென்று சிரிக்கிருள்]

அழகேசன் : சிரி, இன்னும் சிரி! உன்னுடைய சிரிப்பு என் நெஞ்சில் எதிரொலிக்கிறது. ஆகவே, நன்ருகச் சிரி!

தேன்மொழி : (கலவரத்துடன்)....... அன்பரே!....

அழகேசன் : அன்பைத் துண்டிக்கக்கூடாது. வாய்திறந்துசொல்; இதயம்திறந்துபேசு, தேன்மொழி!

தேன்மொழி : அன்பரே, இன்று என்னைச் சிரிக்கச்சொல்லி, நாளை என்னை அழச் செய்துவிடமாட்டீர்களே?

அழகேசன் : (சிரித்தபடி) ஹ...ஹ்... ஹா! பெண்களோடு நாணம் மாத்திரமல்ல, இம்மாதிரியானசந்தேகமும் உடன் பிறந்ததுதான் என்பதை நான் அறியாதவனல்ல, தேன்மொழி! மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, கண்ணே, மணியே, கற்கண்டே, தேன்குழலே என்று கரும்பாகப் பேசி மலரின் மதுவைச் சுவைத்தபின் வேம்பாகி மறையும் கயவர்களின் பட்டியலில் என்னையும் சேர்த்துவிடாதே, தேன்மொழி! என்னை நம்பு. ஏனென்ருல் நான் உன்னை நம்புகிறேன். உன் ஐயமெல்லாம் அழ

கியைப் பற்றித் தானே?....அவள் இப்போது என்னுடைய கூண்டுக் கிளி!

தேன்மொழி: (பதறியவாறு) உங்களுடைய தங்கமான இதயக் கூண்டிலா?

அழகேசன்: சொற் சிலம்பங்களைத் திரைப்படங்களில் கேட்ட தன் விளைவு இது. படம் பார்த்து முடிந்தவுடன் அவற்றையெல்லாம்

தேன்மொழி!

அப்படியே மறந்து விடவேண்டும், தேனே! தேன் நிலவிலே, தேன் மொழி உதிர்த்து என்னை மயக்கும் மகுடியாகி நீ புன்னகைவராளி இசைப்பதைவிட்டு, எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏன் மனத்தைப் புண்படுத்திக்கொள்ளுகிறாய்? நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் தெரியாதா உனக்கு? மறந்திருந்தால் மறுபடியும் நினைத்துப் பார்!...நீ என் மாதவி!

தேன்மொழி: அப்படியென்றால், அழகி கண்ணகியா? ஒருவேளை அந்தப் பாண்டியனைப் பழிவாங்கி ஆலவாய் நகரைத் தீக்கிரையாக்கியதுபோல...?

அழகேசன்: பயப்படாதே! பயம் உன் எழிலின் மாற்றைக் குறைத்துவிடும். அழகி சாதாரணப் பெண். இந்த இருபதாம் நூற்றாண்டுப்பாவை. உறுதியாகச் சொல்கிறேன். இந்த அழகேசன் பவனத்திலே இளங்கோவின் கண்ணகிக்கு வேலையே கிடையாது! நீ என்னுடைய மாதவி....!

தேன்மொழி: (பெருமூச்சு) உங்கள் அப்பா....?

அழகேசன்: (நையாண்டிச் சிரிப்பை உதிர்த்து) அவர் மரணப்படுக்கையில் ஊசலாடிக்கொண்டிருக்கிறார். அவர் நல்லவர். என்னை மாலையும் கழுத்துமாகக் காண வேண்டுமென்று, கருணை வள்ளலான தர்மராஜனிடம் மனுப் போட்டு, 'டைம்' வாங்கிக்கொண்டு, என்னுடைய திருமணத்தைக் கண்டு களித்தார். அவர் கனவு நிறைவேறிவிட்டது. ஆகவே என்னுடைய கனவுகளில் குறுக்கிடாமல் இனி அவர் ஓய்வுபெற்று விடுவார்....!

தேன்மொழி: (மெய்ம்மறந்து) ஆண்டவனே, நீ நல்லவன்!....... ரொம்ப ரொம்ப நல்லவன்!

அழகேசன்: (கேலியாக) அப்படியென்றால் நான்...?

தேன்மொழி: நீங்கள் தானே என்னுடைய ஆண்டவன்!

[ஜோடிச் சிரிப்பு!]



இரண்டு

[தேன்மொழியின் வீடு; இரவு; கார் ஒலியும் சதங்கை ஒலியும் இணைகின்றன.]

அழகேசன் எரிந்த சிகரெட்டை வீசி எறிந்துவிட்டு, தேன்மொழியை அண்டுகிறான். கொண்டுவந்த பரிசுகளை ஒவ்வொன்றாக நீட்டுகிறான்.

தேன்மொழி: எனக்குத்தேவைப்பட்ட ஒரு பொருளை நீங்கள் வைத்துக்கொண்டு, எனக்குத் தேவையில்லாத இந்த நகை நட்டுக்களையும் துணிமணிகளையும் தருகிறீர்களே, அன்பரே!

அழகேசன்: (வினயம் புரியாமல்) நீ என்ன சொல்லுகிறாய், கற்கண்டே!

தேன்மொழி: உங்களை எனக்குத் தாருங்கள் என்று சொல்கிறேன், கட்டெறும்பே!

அழகேசன்: சாவியையே உன் வசம் ஒப்படைத்து விட்டபோது, இரும்புப் பெட்டியைப் பற்றிக் கவலை கொள்ளக் கூடாது, தேவி!

தேன்மொழி: (நகை விளங்க) சும்மா, பரீட்சை பண்ணிப் பார்த்தேன்...!

அழகேசன்: பாஸ்தானே....?

தேன்மொழி: ஓ...!

அழகேசன்: ம்!....நேரமாகிறது. நீ மண்ணில் ஆடு, தேன்மொழி!... நான் விண்ணிலே ஆடுகிறேன்....!

தேன்மொழி : ஆடட்டுமா?

அழகேசன் : ம்!

தேன்மொழி : பாடட்டுமா?

அழகேசன் : ம்!...

[அழகேசன் நெருங்குகிறான்.]

தேன்மொழி : இந்தக் கிணற்று நீரைக் கொண்டுபோக எந்த வெள்ளமும் வரமுடியாது. முதலில் இப்படி உங்கள் முகத்தைக் காட்டுங்கள்!

[தன் முகத்தை அவள் முகத்தின் முன் வெறியுடன் நகர்த்துகிறான்.]

அழகேசன் : என் தேன்மொழியாளுக்கு இங்கிலீஷ் படம்தான் ரொம்பப் பிடிக்கும்போலிருக்கிறது!

தேன்மொழி : நீங்கள் அவசரக்காரர்!

அழகேசன் : அல்ல, தேன்மொழி!....நான் உணர்ச்சி வசப்பட்டவன்!

தேன்மொழி : அதையும்தான் சொல்லயிருந்தேன்!

அழகேசன் : என் ராணிக்கு ஜோஸ்யம் கூடத் தெரியும்போலிருக்கிறதே?

தேன்மொழி : ஆமாம்...ஆமாம்! இதைப் பாருங்கள்!

[டப்பாவிலிருந்த ஏதோ மையைக் காட்டுகிறாள்.]

அழகேசன் : மயக்கும் மை!

தேன்மொழி : அல்ல, மணக்கும் மை!... உங்கள் நெற்றியில் இட்டுப் பார்க்க ஆசையாக இருக்கிறது! இதைப் பாருங்கள்!

[மையை அவன் நெற்றியில் இட்டவாறு, ரோஜாவைக் காட்டுகிறாள்.]

அழகேசன் : முள் ரோஜா!

தேன்மொழி : இந்த ரோஜாவில் முள் இல்லை! இந்தாருங்கள்!.... ரோஜா மணத்தை நுகருங்கள்!

[அவன் வெறியுடன் நுகர்கிறான்]

அழகேசன் : ம்!...ஆடு...கண்ணே! ஆடு...!

[தேன்மொழி ஆடுகிறாள்; பாதி ஆட்டத்தில் அழகேசன் வெறிகொண்டு பேசுகிறான்.]

அழகேசன் : ஆமாம்...ஜவுளிக் கடையில் பணம் கொள்ளைபோனதாகக் கொடுத்த கேஸ் பச்சைப் பொய்!...அழகி!...உன்னை நான் சும்மா விடவேமாட்டேன்!....நினைவில் எழுதி வைத்துக்கொள்!...நீ முள் ரோஜாவாக இருந்தாலும் சரி, உன்னை நுகராமல் என் உயிர் பிரியாது!....இது சத்தியம்!.... சோமநாதரே!....அழகியை அடைவதில் நீர் குறுக்கிட்டால், உம்மை என் அப்பா என்றும் பாராமல், விண்ணுலகிற்குப்போக டிக்கெட்டு கொடுத்துவிடுவேன்! ஹஹ்ஹா! ஹஹ் ஹா...!

[அவன் மயங்கித் தரையில் சாய்கிறான்]

தேன்மொழி : அற்புதம்!....அற்புதம்!....கஜேந்திரன் கெட்டிக்காரர்தான்! அவர் தந்த உபாயங்கள் பலித்துவிட்டன!....இனி அழகேசன் என் கைப்பிடிக்குள் அடக்கம்!

[அழகேசன் சுய நினைவு மீண்டு எழுகிறான்.]

அழகேசன் : ரவிவர்மா ஓவியமே! நான் இந்நேரம் எங்கேயிருந்தேன்...?

தேன்மொழி : சொர்க்கத்தில்!

அழகேசன் ; நீ பூலோகத்தில் நிற்கிறாயே?

தேன்மொழி ; எனக்கு 'பாஸ்போர்ட்' கிடைக்கவில்லை, கண்ணாளா!

[கேலியாகச் சிரிக்கிறாள்]

அழகேசன் : ஏன் இப்படிச் சிரிக்கிறாய், தேன்மொழி?

தேன்மொழி : உங்களைச் சிந்திக்க வைப்பதற்கு!...அன்பரே! வந்த உம்மை வெந்த மனத்தோடு அனுப்ப விரும்பவில்லை. இன்று

இரவு முழுதும் இங்கே நீங்கள் தங்கலாம். ஏனென்றால் நான் உங்கள் மாதவியல்லவா?.... இனி நான் சொல்லப்போவதை தயைசெய்து கவனமாகக் கேளுங்கள். வஞ்சத்தைத் தோழியராக்கி, வஞ்சிக்கொடியான அழகியை நீங்கள் உங்களது பஞ்சணைப்பாவையாக்கக் கனவு கண்டீர்கள். ஆண்டு ஒன்றாகியும் உங்கள் கனவு பலிக்கவில்லை!.... ஆனால் என் கனவு பலித்துவிட்டது!...கடந்த கதையைப்பற்றி எண்ணிப்பேசவில்லை. இனி நடக்கப்போவதைப் பற்றி—நடக்கவேண்டியதைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். ஏழைப் பெண் அழகி வடித்த கண்ணீர் என் கண்களைத் திறந்துவிட்டன!...உங்கள் நாடகத்தை அங்கம் அங்கமாக நான் படித்துத் தெரிந்துகொண்டேன். ஆகவே, நீங்கள் இனி என்னிடமிருந்து தப்பமுடியாது! என்னிடமிருந்து தப்ப நினைத்தால், இதோ பாருங்கள் இவைஇரண்டும் உங்களைச் சந்தி சிரிக்கவைத்துவிடும்! அன்பு காட்டிய வள்ளலே! உங்களிடம் உங்கள் மாதவி ஒரு வரம் கேட்கப் போகிறாள்...ஐயா! தயவுசெய்து அழகியை வாழவிடுங்கள்; அத்துடன் நீங்களும் வாழவேண்டும் அழகியுடன்!...உங்கள் தாலியைத் தாங்கியிருக்கும் அழகியிடம் போங்கள்; போய் மன்னிப்புக் கேளுங்கள்! அப்போதுதான் ஆண்டவன் உங்கள் தவறுகளை மன்னிப்பான்!.... அப்போதுதான் நீங்கள் மனிதராக உலவமுடியும்!.... சரி என்று சொல்லுங்கள்! அடியாள் தேன்மொழி சிரிப்பேன்! அபலை அழகி சிரிப்பாள்! உங்கள் அப்பா சிரிப்பார்! விதி சிரிக்கும்! தெய்வமும் சிரிக்கும்?.... அன்பரே!

அழகேசன் : (தழுதழுக்க) ச...ரி!

தேன்மொழி : (விம்மலுடன்) நீங்கள் மறந்துவிடாதீர்கள்....நான் உங்கள் மாதவி! ஆனால், இந்தக் கோவலனுக்கு இங்கே வேலையில்லை— நாளையிலிருந்து!... ஆமாம், நாளையிலிருந்து!.... வாருங்கள் உள்ளே!.... இன்று நம் கடைசி இரவு!

[விளக்கு அணைக்கப்படுகிறது.] ★

ஆலமரத்துப் பைங்கிளி

நான் பேசுகிறேன்:

தீபாவளிக்கு ஊருக்குப் போய் வந்தேன். அந்தச் செய்தி இப்போது யார் கவனத்தையும் கவர்ந்தால், அதற்கு நான் பொறுப்பு அல்ல. ஆனால், நான் ஊர் சென்றிருந்த தருணத்திலே நடந்த அந்தச் சம்பவம் என்னை இழுக்கவில்லை; சிந்தையை ஆகர்ஷித்தது. நான் சொல்லப் போகும் இந்தக் கதை உங்களைத் திருப்திப் படுத்தினாலும், படுத்தாமற் போனாலும் அதற்கும் அடியேன் காரணம் அல்ல.

எனக்காக எழுதிக் கொண்ட கதை இது – அல்ல, நான் கண்டேன்; கண்ணீர் சொரிந்தேன். என்னையறியாமலே கண்ணீர்க் கறையில் உருவாகி விட்ட நிகழ்ச்சிச் சித்திரம் இது.

என்னை நம்பாதிர்கள்; தயை உண்டு உங்களுக்கு. நான் ஜடம்! இதோ, என்னை ஆட்டுவிக்கும் குரல்கள் சில கேட்கின்றன.

கிளியின் இதயம்

ஆவி யுலகத்தில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?.... ஐயோ,

பூவை



பாவம்!....இந்த எழுத்தாளரைச் சட்டை செய்யாதீர்கள், ஐயா! பாம்பின் சட்டைக்கும் இவருடைய உடற் கூண்டுக்கும் நூலிழைகூட வித்தியாசம் கிடையாது!

ஆலமரத்துப் பைங்கிளி நான். ஆனால் உங்களுக்கு உண்மை என்னவென்று தெரியுமா? உங்களைப்போல எனக்குப் பொய்ப் பேசிப் பழக்கம் கிடையாது!... உண்மை இதுதான். 'ஆலமரத்துப் பைங்கிளி' என்னும் பட்டப் பெயர் பொன்னிக்கு உரித்தானது. பொன்னன் அப்படித்தான் அவளைக் கூப்பிடுவான். இப்படிக் கூவி அழைப்பதைக் கேட்டு நான் கூட பலமுறைஏமாந்திருக்கிறேன். என் மூக்குச் சிவப்பு ரத்தச் சிவப்பாகிக் கன்றிவிடும். எனக்கே புரியாத எங்கள் 'ரங்கா' மொழியில் நான் பேசிக் கொள்வேன். ஆனால் அந்தக் காதலர்கள் வாய் ஓயாமல் பேசித் தீர்த்த பேச்சுக்கள்—அவை தூவிய சம்பவங்கள் எல்லாம் ஒன்று பாக்கியில்லாமல் என் மனசுக்கு அத்துபடி.

"ஓ, மச்சான்!" என்பாள்— அன்புகாட்ட உரிமை பூண்டவள்.

"ஆ, பொன்னி!" என்பான்— நேசம் நிறைந்த மனம் கொண்டவன்.

அவள் சிரிப்பு மாதிரி நானும் சிரிக்க வேண்டுமாம்! — என்னவள் சொல்லுகிறாள். ஆனால், இந்தப் பொன்னி எவ்வளவு அந்தமாகச் சந்தம் கூட்டி இளநகை புரிகிறாள் என்கிறீர்கள்!......பார்த்துக் கொண்டேயிருக்கலாம்; கேட்டுக் கொண்டேயிருக்கவேண்டும்.

இதே ஆலமரத்து நிழலில்தான் அவர்களுடைய காதல் பிறந்தது; வளர்ந்தது.

ஆலமரப் பைங்கிளியே, அழகுள்ள
தாழம்பூவே!
காலமெல்லாம் நீ சிரிப்பாய்; காத்திருப்
பேன் உனக்காக!
ஆலமுண்ட ஐயன் அவன், அன்பு நிறை
ஜோதியவன்!
பாலமொன்று கட்டிடுவான், காதலராம்
நமக்காக!

இந்தப் பாட்டுக்கூட எனக்கு மனப்பாடம் ஆகிவிட்டது. இது என் துணைக்கும் பொருந்துவதாதலால், பாட்டு புனையும் ஒரு வேலை எனக்கு மிச்சம். என் நன்றி இவ்வூர் ஆசிரியருக்கு உண்டு.

ஆஹா, இந்தக் காதலர்கள் உண்மையிலேயே பாக்கியம் செய்தவர்கள்தாம்! இப்படிப்பட்ட அதிர்ஷ்டம் ஆயிரத்தில் ஒரு ஜோடிக்குக் கூடக் கிடைக்காதே...!

என்ன சத்தம் அது? ஓ, நீயா? ம்....பேசம்மா, பேசு!

செல்லத் தேவன்
ஊருணி—பராக்!

ஆலமரத்துப் பைங்கிளி சொல்வது படிக்குப் பாதி வாஸ்தவம் தான். ஆனாலும், அது உங்கள் முன் வைத்த நிகழ்ச்சிகள் அதிகம் இல்லை. ஆனால், என் மடியிலே

பொன்னனும் பொன்னியும் வளர்ந்த விதமே அலாதி. அவர்களுடைய காதலுக்கு அன்பு என்ற பெயர் சூட்டக் கற்றுக் கொடுத்தவளே நான்தான். நான் பெண் அல்லவா? பூமிதேவிக்குச் சொந்தக்காரியாயிற்றே! பொன்னியின் மனம் எனக்கு புரியாதா?

பொன்னன் – பொன்னி யார்? சொல்ல வேண்டாமா?

சோறுபடைத்த சோழ வளநாட்டுக் காவிரியோடு கலந்து உறவாட எனக்கு வாய்ப்பு ஏற்படா விட்டாலும், அதன் எல்லைக்குள்ளாவது தலை சாய்த்து 'பூந்து' படுக்க முடிகிறதே, அந்த மட்டும் நான் பாக்யவதி. என் அரவணைப்பிலே நித்தம் நித்தம் ஆடிப்பாடித் தொட்டு மகிழ்ந்து விளையாடிய இந்த இணையின் இன்பம் எனக்கு அளவுகடந்த ஆனந்தம் நல்கும்.

பூவைமாநகர் என்ற பெயர்தான் உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டுமே? ஊர்பேர் தெரியாமல் இருந்த ஊர், ஊர்பேர் தெரிந்த ஊராகப் பழகிப்போய் விட்டதே! அந்த ஊரிலே பிறந்தவர்கள்தாம் பொன்னனும் பொன்னியும்.

ஆணிப் பொன் நிறம் அவள்' அவனும்கூடத்தான். ரதியும் மன்மதனும் அவர்கள்முன் தோன்றியது கிடையாது. ஆனாலும், நாலு பேர் அவர்களைப் பார்க்கும்போது சொல்லிக் கொள்ளுவார்கள். ''பொன்னியும் பொன்னனும் போலத்தான் அந்த ரதியும் மன்மதனும் இருப்பார்கள் போலிருக்கிறது.'' என்று. அளவெடுத்துச் செதுக்கிய ஆண் – பெண் சிலைகளையும் மிஞ்சிவிடும் அழகு கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட காதலர்களை எனக்குத் கண்டால் கொள்ளை மகிழ்ச்சி ஏற்படும். 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய், இறைவா?' என்று எனக்கு நானே கேட்டுக்கொள்ளுவேன். என் இதயம், அல்லது என்மனத்திலுள்ள பொருள் அவர்களுக்கும் புரியுமோ, என்னவோ? உடனே 'களுக்'கென்று சிரிப்பார்கள். என் சல சலப்பை மறந்து நோக்குவேன். செந்தாமரை மலரை நாடி ரீங்காரப் பண்பாடி வரும் வண்டின் தரிசனம்தான் எனக்குக் கிட்டும்.

உதயத்தின் தங்கரேக்கு நிறம் அவர்கள் மேனிகளில் பல்லாங்குழி விளையாடும். நிலவின் கீற்றுக்களின் இடைவெளியிலே இடைச் செருகல் கவி மாதிரி பால் வெள்ளம் பாய்ந்தோடும். அந்தி சந்தி எப்போதும் அவர்கள் என்னைக் கண்டார்கள்: எனக்கு எதுவுமேதெரியாது என்று நினைத்திருப்பார்கள், பாவம்!

வசந்த பைரவி

—'பூவை'—

விலை : 50 நயா பைசா

உமா :: சென்னை-1.

"மச்சான் !"

"என்ன...பொன்னி !"

"வந்து....வந்து!"

அவள் நாணிக் கோணிவிடுவாள். அவன் அவள் பூங்கரம் பற்றி நிற்பான். அவளது போதையை, அவனது போதை அறியாமல் இருக்க முடியுமா ?

சாதாரணமாகக் கதைகளிலே இம்மாதிரி உள்ளம் ஒருமித்த காதலர்களுக்கு ஒரு எதிரி மச்சானே, அல்லது அவர்களது கலியாணத்தை விரும்பாத அப்பனே அல்லது, பொருந்தாத ஜாதகக் குறிப்போ எழுதப்பட் டிருக்கும். ஆனால், இவர்களுக்குக் குறுக்கே யாரும் இல்லை. ஆண்டவன்கூட அனுசரணை புரிந்தான்.

ஆனால்....!

இந்த ஆனாலில்தான் பாக்கிக் கதையே அடங்கிக் கிடக்கிறது. அதை இப்போது நினைத்தாலும் எனக்கு அழுகை அழுகையாக வருகின்றது !

ஆலயம் சிந்திக்கின்றது :

புனிதம் மண்டிய என் உள்ளத்துக்குத் தெரியாமல் உலகத்தில் எந்த ஒரு சிறு சம்பவமும் நடக்க முடியாது. அந்தச் செல்லதேவன் ஊருணியின் கண்கலக்கம் எனக்குப் புலனாகாமலா போய்விடும் !

ஆம் ; பொன்னி – பொன்னன் காதலர்கள் எத்தனை நாட்களுக்குத்தான் காத்திருப்பார்கள்....? கட்டுதிட்டங்கள் இல்லை ; பருவமும் வயசும், நிலவும் தென்றலும் அவர்களைச் சோதித்தன. ஆனால், அவர்கள் இருவரும் உயிர்விட்டு உயிர்மாற்றிக்கொண்டு அமைதியான ஆரவாரத்துடன் நிலவி வந்தார்கள். என் சந்நிதியையும் அவர்கள் மறந்துவிடவில்லை.

"இந்த ஆனந்த நடராசருக்குப் பொதுவா நான் உனக்குத்தான்!.. நீ எனக்குத்தான் !" என்று 'கையடித்துக்' கொடுத்தான் இளைஞன்.

அவள் மெய்யம் மறந்து போனாள். விம்மினாள் ; 'ஆனந்தக் கண்ணீர்' என்றாள்.

"என்ன பொன்னி ?"

"என்னமோ, பயமாயிருக்குது...!"

"அப்பிடியா ?"

"ஆமா !"

"ஆத்தாடி !... சரி, சரி !.... வா, போகலாம் !....இன்னிக்கே உன் கழுத்திலே தாலிகட்டிப்பிட்றேன். நல்ல நாள்தான் !" என்று சொல்லி 'பர பர' வென்று இழுத்துக்கொண்டு ஓடினான். மங்கல நாண் பூட்டினான். ஒரே மூச்சு !

"அத்தான், நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள் ? ஐயோ, நீங்கள் எனக்கல்லவா சொந்தம் ?..." என்ற ஒரு புதிய பெண் குரல் பொன்னனைச் சாடியது.

"ஓ....பொன்னி ! நீ இங்கேயா இருக்கே ?....அட கடவுளே, நீ என் சொத்தாச்சுதே ! வா !" என்ற நூதனமான ஆண் குரல் எதிரொலி பரப்பிற்று.

ஆவிகள் இரண்டும் பிறகு சிரிக்கத் தொடங்கி விட்டன !

(அடுத்த மாதம் தீர்ப்பு : '**கிளி**')

தீபாவளி



வையத் திருளென்ற
  வன்மை அரக்கனை
வாழிய செங்கதிர்
  சக்கரம் விட்டுயிர்
நையத் தொலைத்துயர்
  நாக ரிகமெனும்
நாளை நிறுவிட
  நாம்புன லாடினோம் !

பொய்கைக் கரைதொறும்
  பொங்கிய நீர்த்திரை,
பூண்ட புத்தாடை
  எனப் பொலிவுற்றிட
வைகறை மங்கை
  வளர்ந்துசெந் தாமரை
வாசம லர்க்கரம்
  ஏந்தியே மகிழ்ந்தனள் !

உண்மை எனும் எண்ணெய்
  ஊறி உடலிலும்
உள்ளத்திலும் மகிழ்
  துள்ளிடச் செய்திடப்
பெண்மையும் ஆண்மையும்
  பேசிய வாசகம்
பீடையை ஓட்டிடப்
  பிள்ளைகள் கிள்ளைகள்

தண்மழலைச் சுவை
  தந்து மகிழ்ந்திடத்
தழுவும் தீபாவளி
  வழுவை அகற்றிடக்
கண்மகிழ்ந் தின்பக்
  கதைகள் புனைந்துநம்
கண்ணனை ஆனந்தக்
  கண்ணனை வாழ்த்துவோம் !

—தமிழ் ஒளி

தீபாவளி!

தமிழகமெல்லாம் தீப ஒளித் தினத்தன்று புத்தாடையுடன் - புதுக்கோலத்துடன் காட்சி தருகிறது. பலகாரமும், பட்டாசும், பட்டாடைகளும்தான் நமக்குத் தீவாளி! ஆனால் வடநாட்டில் என்றாலோ, முதல் நாள் நரகசதுர்த்தி முதல், அமாவாசை தாண்டிப் பாட்டிமைவரை மூன்று நாளும் இரவெல்லாம் ஜகஜ்ஜோதியாக விளக்கொளியிட்டு, அவரவர் சக்திக்கேற்றபடி தத்தம் வீடுகளை தீபத்தினால் அலங்கரிப்பர். அவர்களுடைய இல்லங்கள் அமைந்திருக்கும்பகுதிமுழுமைக்குமே முழுநிலவின் குளிர்ச்சியையும் ஒளியையும் ஏற்படுத்தி, கண்ணுக்கு விருந்தளிக்கிறார்கள். வீண் தீண்டியும், வீண் தீபாவளிச் சீர்ச் சச்சரவும் ஏற்படுவதில்லை! 'எந்நாட்டவருக்கும் இறைவாபோற்றி' என்றபடி பட்டாசு வெடிகளையும், விளக்கு ஒளிகளையும் அன்று மிக அதிகமாகப் பிரபலப்படுத்தும் ஒப்பற்ற திருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள்! இதுவன்றோ திருநாள்?

எ. ஆர். ராஜாமணி, புதுடில்லி.

தீபாவளி....! பல நூற்றாண்டுகளாகக் கொண்டாடிவரும் பண்டிகை. சிந்தனையைக்கொண்டு தீபாவளியின் சிறப்பை உணர்ந்து அனுபவித்துக் கொண்டாட வேண்டும்.

புதிய அறிவு தேவைதான். அதற்காகப் பழைய விழாக்களை விட்டு விடுவது அறிவுடைமை ஆகுமா....?

சமுதாய வளர்ச்சிக்கு பாமரர் முதல் பணக்காரர்வரை கூடி ஒரு தேசத்தில் கொண்டாடப்படும் தீபாவளியும் ஓர் அங்கம்தான்.

தீபாவளி!

உள்ளத்திற்கு உவகை தரும் ஓர் நன்னாள். கண்கவர் தோற்றமளிக்கும் புத்தாடைகள், காதடைக்கும் வண்ணப் பூக்களின் வாரி பிறைக்கும் வாணவகைகள் இவ்வாறாக, ஒவ்வொரு இல்லத்திலும் மங்கல முண்டாக்கி. மகிழ்ச்சியை நிறையச்செய்து, அகமும் முகமும் மலர வாய்ப்பளிக்கும் ஓர் திருநாள் தீபாவளி. **தே. லட்சுமி நரசிம்மன்.**

தீபாவளி ஏன்? யாரோ ஒரு அசுரன் மாண்டானாம். அதற்கு ஒரு நினைவுச் சின்னமா? வேடிக்கை....! பொங்கல் திருநாள்தான் தமிழனின் உரிமை மிகு நன்னாள்! அதுவே எங்கள் பொன்னாள்! அன்றுதான் புத்தாடை, அணிவோம்; புது மகிழ்ச்சி கொண்டு விளங்குவோம். இயற்கையின் திரும்புமுனை எங்களுக்கும் மாற்றம் தரும்; ஏற்றம் கொடுக்கும்.

செ. நலங்கிள்ளி, மதுரை.

தீபாவளிப் பண்டிகை பெண்களின் வாழ்விலே மறக்கக் கூடாத ஒரு அம்சமாகும். தலை தீபாவளி என்றால், அந்த இன்பத்தை அனுபவித்தவர்களுக்கன்றோ தெரியும்? புதுத் துணிமணிகள் நல்கும் புத்துணர்ச்சியைப் பற்றிச் சொல்ல எனக்கு வார்த்தைகள் கிடைத்தால்தானே?...தீபாவளியின் கதை முக்கியமன்று; பொங்கல் போல இதுவும் ஒரு திருவிழாதான். ஏனென்றால், அலைபாயும் உள்ளங்கள் இம்மாதிரி நாட்களிலேதானே அமைதி அடைய முடிகிறது. அதற்காக வேனும் தீபாவளி கொண்டாட்டம் வேண்டாமா?

கோமதி பாலசுப்ரமண்யம், சென்னை-9.



உமா ஜனவரி இதழில்:
'வெண்ணிலவு நீ எனக்கு!'
தொடர்கதை ஆரம்பம்
பூவை எஸ். ஆறுமுகம்



நல்ல நாட்டுக்கு முதலில் வேண்டுவது சிரிப்பு; ஆமாம், சிரிப்பு தான் முதலில் வேண்டும். பிறகுதான் உணவு உடை எல்லாம். சிரிப்பு ஒரு மருந்து; நம் வாழ்க்கைத் துயரத்துக்கெல்லாம் தக்க மருந்து. சிரிப்பு இருக்கிறதே அது, தூய மெல்லிய இதயத்தில் தான் உண்டு; நல்ல இதயத்திலேதான் நல்ல சிரிப்பு உண்டு. மனிதன் உயர்ந்தவன் என்பதற்குக் காரணம், அவனுக்குச் சிரிக்கத் தெரிகிறது என்பதே! பண்பட்ட உள்ளம் பண்பட்ட சிரிப்பைத் தரும்.

—கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

அஞ்சலி

எஸ். விஜயராகவன்

தீபாவளியென்றால், அதனடியில் மறைந்திருக்கும் துயரக் கதைகள்தாம் அதிகமாயிருக்கும்!....நரகாசுரன் வதம் நம் நினைவை விட்டுத் தப்பமுடியாத போது, இக்கதையின் நாயகனை ரத்தினத்தை மாத்திரம் நாம் மறப்போமா? ஆனால், இவன் நல்லவன்!

"என்னங்க....! உங்களைத் தானே....?"

"ம்...ம்....ம்...."

"உம்மினு மோட்டு வளையைப் பார்த்தா ஆயிடுமா? தீபாவளிக்கு இன்னும் முழுசாப் பத்து நாளு கூட இல்லை. புள்ளைகளெல்லாம் புதுத்துணி, பட்டாசின்னு உசிரை எடுக்குது. நம்மைப் பத்திக் கவலையில்லே. ஆனா நாளும் கிழமையுமாகக் குழந்தைகளுக்குக் கூட ஒண்ணுமில்லாமே...."

"அதுக்கு என்னதான் செய்யறது, செவந்தி? இந்த ஆண்டி வயித்திலே பொறந்த புள்ளைகளுக்கு அதுதான் கதி!"

ரத்தினம் அடிவயிற்றிலிருந்து அங்கலாய்த்துக் கொண்டான். அவன் மனசும் ஈரத் துணிபோல் கனத்தது. அவனுக்கு மட்டும் பெற்ற பாசம் இல்லையா? அண்டை வீட்டுக் குழந்தைகள் எல்லாம் தீபாவளியன்று புதுத் துணியும் பட்டாசுமாகக் கும்மாளம் போடுகையில், அவன் குழந்தைகள் மட்டும் என்ன பாவம் செய்தன? ஆனாலும் அவனிடம் இப்போது கையில் அரைக்காசுகூட இல்லை. அன்றாடக் கஞ்சிக்கே மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கும் அவல வாழ்வு அவனுடையது.

"அதென்னமோ, யாருகிட்டே யாச்சும் ஒரு நாலு ரெண்டு கை மாத்தா வாங்க முடியுமா பாருங்க!" என்றாள் செவந்தி, மேலும் விடாமல்.

"நான் கடன் வாங்கத் தயார் தான், செவந்தி! ஆனால் கொடுக்கிறவங்க யாரு?" என்று பிரலாபித்தான் அவன். அதற்குள்—

"ரத்தினத் தண்ணே!"

வாசலிலிருந்து ஒரு குரல்.

தெருப் பக்கம் கழுத்தை ஒடித்துப் பார்த்த ரத்தினம், "யாரு... ராமையனா? வா தம்பி, உக்காரு!" என்று விளித்துரைத்தான்.

உள்ளே வந்த ராமையா' "அண்ணே, இப்ப எனக்குக் குந்த நேரமில்லே. தீவுளி வருதில்லையா? சரக்கு எடுத்துக்கிட்டு ராவைக்கு வலைய பட்டிச் சந்தைக்குப் போறேன். அதுக்குள்ளார ஒரு சேதி காதிலே விழுந்திச்சு; உன்கிட்டே சொல்லலாமின்னு வந்தேன்!" என்றான்; ரத்தினத்தின் குடும்ப நண்பன் அவன்.

"என்ன சேதி ராமையா....?"

"நம்ம வாளவந்திப் பக்கம் யாரோ சர்க்கஸ்காரங்க வந்திருக்காங்களாம் – கொல்லி மலையிலே

ருந்து சிறுத்தை ஏதாச்சும் பிடிக்கிறதுக்காக! மலைப்பாதை தெரிஞ்ச உள்ளூர் ஆளுங்க நாலு பேர் உதவிக்கு வேணுமாம். நீ இப்பவே போனா ஒரு வாரத்துக்கு ஏதாச்சும் வேலை வெட்டி கிடைக்குமின்னு தோணுது!''

''நல்லது தம்பி. இங்கே வெட்டியாகக் குந்தியிருக்கிறதைவிட இப்பவே அங்கிட்டுப் போறேன். ஒரு நாலு காசு கைக்குக் கிடைச்சா தீவுளி பிழைக்குமே! புள்ளைங்க ரோதனை பொறுக்க முடியல்லே!'' என்றான் ரத்தினம்.

பிறகு ராமையா விடைபெற்றுச் சென்றதும், ரத்தினத்திற்கு ஒரு வட்டி நீராகாரத்தைக் கரைத்துக் கொணர்ந்தாள் செவந்தி. அதை அவன் ருசித்துக் குடிக்கையில், ''வர்ற செவ்வாய் தீவாளி; நீங்க ஞாயித்துக் கிளமையே திரும்பிடுங்க. கையிலே நாலு துட்டுக் கிடைச்சா அப்படியே வலையப்பட்டிச் சந்தையிலே புள்ளைகளுக்கு ஏதுனச்சும் துணி மணி எடுத்து வாங்க!'' என்றாள் அவள்.

''சரி....செவந்தி! எல்லாம் அந்தக் கலியபெருமாள் மனசு வைக்கணும்; நம்ம கையிலே என்ன இருக்குது....?'' என்று கூறிய ரத்தினம் துண்டை எடுத்து முண்டாசாகக் கட்டிக் கொண்டு புறப்பட்டான்.

2

நான்கு மைல்கள் தாண்டி வாளவந்தி என்ற ஊரை ரத்தினம் அடைகையில் மாலை மணி நான்கு அடித்து விட்டது. அங்கே விசாரித்ததில், ஊரிலிருந்து பின்னும் இரு மைல்கள் தள்ளிக் கொல்லி மலை அடிவாரத்திலேதான் கூடாரங்கள் அடித்துக் கொண்டு சர்க்கஸ்காரர்கள் தங்கியிருப்பதாகத் தெரிந்தது. உடனே மேலும் நடந்து, அடர்ந்த காடுகளுக்கிடையில் வளைந்தோடும் ஒற்றையடிப் பாதை வழியே முன்னேறினான் ரத்தினம். பாதையும் அவனுக்குப் பழக்கமானதால் சிரமமின்றி இருள் கவியுமுன்னமே மலை அடிவாரத்தையும் நெருங்கி விட்டான்.

அங்கு சர்க்கஸ்காரர்களின் கூடாரங்கள் எங்கிருக்கின்றன வென்று கவலையுடன் தேடுகையில், அடிவாரத்திற்குச் சற்று மேலே 'காடிச் சுனை' என்ற மலைக் கிணற்றுக்குப் பக்கத்தில் ஏதோ வெண்மையாகப் புலப்பட்டது. மகிழ்ச்சியுடன் அத்திசை நோக்கி நடையை எட்டிப் போட்டான் ரத்தினம்.

அவ்விடத்தில், ஒரு பர்லாங்கு இடைவெளியில் சிறிதாக இரு கூடாரங்கள். ரத்தினம் முதல் கூடாரத்தை அடைந்தான். அதன் வாயிலில் சென்றதும், ''யாரப்பா நீ? என்ன வேண்டும்?'' என்றார் அவர்களில் ஒருவர்.

''உங்களுக்கு உதவி ஆள் தேவைன்னு சொன்னாக. எனக்கு இந்த மலைப்பாதையெல்லாம் நல்லா அத்துபடிங்க, ஏதாச்சும் வேலை கிடைக்குமான்னு பார்க்க வந்தேன்!'' என்றான் ரத்தினம்.

''சரி....அதோ தெரிகிறது பார், இன்னொரு கூடாரம்; அங்கே போய் மானேஜர் ஐயாவைப்பாரு. நிச்சயம் ஏதாவது வேலை கொடுப்பார். எங்களுக்கும் நாளைக்கு ஆட்கள் வேண்டுமே!'' என்றார் அவர்.

முதல் கூடாரத்திலிருந்து இரண்டாவதை அடைய ஒரு பர்லாங்கு தூரம் கடக்க வேண்டியிருந்தது. அங்கே கூடார வாயிலில் ஏனோ ஒருவரையும் காணோம். மெள்ள அடிவைத்துக் கூடாரத்திற்குள்ளே நுழைந்து பார்க்க முயன்றான் ரத்தினம். ஆனால் அவனது காலரவம் கேட்டதுமே, ''யாரங்கே?'' என்று உள்ளேயிருந்து உறுமியது ஒரு குரல். மறுகணம் கையில் துப்பாக்கியுடன் ஆஜானுபாகுவான ஒரு மனிதர் வெளியே வந்தார். பாவம், ஏதாவது சிறுத்தையோ, மற்ற காட்டு மிருகமோ வந்து விட்டதாகப் பயந்து போனாரோ, என்னவோ?

அவர் தாம் சர்க்கஸ் மானேஜராக இருக்க வேண்டுமென்ற ஊகத்தில், ''கும்பிடறேனுங்க!'' என்று ஆரம்பித்துத் தனக்கு ஏதாவது வேலை கிடைக்குமா என்று வினவினான் ரத்தினம்.

"உனக்கு மலை வழிகளெல்லாம் நன்கு தெரியுமானால் ஒரு வாரத்திற்கு வேலை தருகிறேன். தினக் கூலி மூன்று ரூபாய். நாங்கள் ஓரிரண்டு சிறுத்தைகள் பிடிக்க வந்திருக்கிறோம்!" என்றார் அவர்.

"சரிங்க....எந்த வேலையும் நான் செய்வேனுங்க!" என்றான் ரத்தினம் மகிழ்ச்சியுடன்.

தினக் கூலி மூன்று என்றால் எவ்வளவு அதிருஷ்டம்! இப்பொழும் ஊரில் கட்டட மேஸ்திரிக்குக் கூட அவ்வளவு கூலியில்லையே......! இந்த வருஷத் தீபாவளி பிழைத்துப் போகும்; செவந்தியும், குழந்தைகளும் எவ்வளவு சந்தோஷப் படுவார்கள்!

"ரைட்....! நீ இரவுக்கு என் கூடாரத்திலேயே படுத்துக்கொள். வாளவந்தி ஹோட்டலிலிருந்து எனக்கு எடுப்புச் சாப்பாடு வந்திருக்கிறது. அதில் உனக்கும் ஏதாவது மிஞ்சும். சாப்பாடானதும் கூடார வாசலில் கொஞ்சம் தீ மூட்டி வை. அப்போதுதான் இந்தப் பக்கம் சிறுத்தை ஒன்றும் வராமலிருக்கும்!" என்றார் மானேஜர்.

"நல்லதுங்க...."

"நாளை முதல்தான் சிறுத்தை பிடிக்கும் வேலை ஆரம்பம். இப்பகுதிலேயே இன்றைக்கு மாதிரிக்காக ஒரு குழி வெட்டி அதில் கூடு வைத்திருக்கிறோம்; காலையில் அதைக் காட்டுகிறேன்," என்ற அவர், ஒரு தீக்குச்சியைக் கொளுத்தித் தன் உதட்டில் நிருத்த மாடிய சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

முகத்தண்டை எரிந்த தீக்குச்சியின் பிரகாசமான கணநேர ஒளியில் மானேசரின் முகம் 'பளிச்' செனத் தெரிந்தது. இதுவரை அந்தி மங்கலில் சரியாக அவருடைய முகத்தைக் கவனிக்காத ரத்தினத்திற்கு இப்போது அதைத் தீக்குச்சியின் வெளிச்சத்தில் நன்கு நோக்குகையில் திடீரென்று அவனுடைய அடி நெஞ்சில் ஏதோ 'திக்' கென்றது. தொடர்ந்து, "அட பாவி! நீயா....?" என்று தனக்குள் பதறினன். ஆயினும் நாவைக் கடித்துக் கொண்டு தன்னைச் சுதாரித்துக் கொண்டான் அவன்.

தணிகாசலத்தை இன்றைக்கு மட்டும் அல்ல, அவன் வாழ்வில்

தண்ணீர் பாலத்தின் கீழே ஓடிக் கொண்டே இருக்கிறது; அதனடியில் தங்கி நிற்பதில்லை. அதுபோல பணமும் பிறர்க்கு உதவும் இயல்புடையோர் கரங்களின் வழியே சென்று விடுகிறது; அவர்கள் அதைச் சேமித்து வைப்பதில்லை.

—ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

என்றுதான் ரத்தினத்தால் மறக்க முடியும்....?

பதினைந்து வருஷங்களுக்கு முன்பு நடந்த கொடூர நாடகம் அது.

அப்போது ரத்தினம் இருபத்தி ஐந்து வயசுக்காளை. அண்மையில்தான் செவந்தியைக் 'கட்டி'க் கொண்டு மண வாழ்வைத் தொடங்கி யிருந்தான். குழந்தை குட்டியென்ற தொந்தரவற்ற அந்த இனிய வாழ்க்கையில் வரும்படிக்குப் பஞ்சமில்லை. சேலத்தில் ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை. மாசச் சம்பளம் இருபது ரூபாய் தானென்றாலும், அந்த நாட்களில் அது அமோகம்!

அதே தொழிற் சாலையில்தான் தணிகாசலம் மானேஜராக இருந்தான். அவனுக்குக் கூட இருந்து பணிகள் புரிவதுதான் ரத்தினத்தின் வேலை. இருவருக்கும் அப்போது சுமுகமான உறவு உண்டு. காசு பணங்களைப் பாங்கியில் கட்டக்கூட ரத்தினத்தை நம்பி அனுப்புவான் தணிகாசலம்.

இந்த நிலையில் திடீரென்று ஒரு நாள் தணிகாசலத்திடம் இருந்த பணப்பையைக் காணவில்லை என்ற திடீர்ச் செய்தி பரவியது.

அதில் வசூலித்து வந்த நிலுவைப் பணம் சுளையாக ஐயாயிரம் இருந்ததாம்! தணிகாசலம் அதை டிராயரில் வைத்து விட்டுப் பக்கத்து அறையில் காப்பி குடித்து விட்டு வருவதற்குள் அது மாய மாய் மறைந்து விட்டதாம்!

ஈவிரக்கமின்றி வரி வசூல் செய்து அரசாங்கத்துக்குப் பொருள் சேர்க்கும் அரசனும், கொடுத்ததைப் போற்றும் மனப்பான்மையில்லாத யாசகனும், நாணமில்லாத குலமகளும், நாணும் இயல்புடைய விலைமகளும் தாஞகவே அழிந்து போவார்கள்.

—ஔவையார்.

போலீசுக்குப் புகார் பறந்து விசாரணை துவங்கியது. ரத்தினத்திற்கு உண்மையில் இக் குற்றத்தில் பங்கு எதுவும் இல்லை. ஆனால் சந்தர்ப்பங்கள் யாவும் அவனுக்கு எதிராகச் சதி செய்தன. குறிப்பிட்ட சமயத்தில் ரத்தினத்தைத் தவிர வேறு யாருமே அந்த அறைப் பக்கம் செல்லவில்லை யென்று யாவரும் ஒருமுகமாகச் சாட்சி சொன்னார்கள்; மானேஜர் தணிகாசலமும் அப்படியே அடித்துக் கூறினர்!

இறுதியில் அவனுக்கு இரண்டு வருஷத் தண்டனை கிடைத்தது! சூலுற்றிருந்த இளம் மனைவி செவந்தியைத் தனியாகத் தவிக்க விட்டுச் சிறை சென்றான் ரத்தினம். அந்த இரண்டு வருஷங்களும், பாவம், அந்த அபலை என்ன பாடு பட்டிருக்கிருள்!

உண்மையில் நினைவுப் பிசகாகத் தணிகாசலம்தான் பணப்பையை வேறெங்கேயோ வைத்திருக்கிருன். ரத்தினம் சிறை சென்ற சில நாட்களுக்கெல்லாமே, வேறு எதையோ தேடுகையில் எதேச்சையாகப் பணப்பை மீண்டும் அவன் கையில் கிடைத்துவிட்டது. உடனே போலீசுக்குத் தகவல் அனுப்பி, உண்மையைக் கூறி ரத்தினத்தை விடுவிக்க வேண்டியதுதானே தணிகாசலத்தின் கடமை?

இச்சமயத்தில்தான் தணிகாசலம் ரத்தினத்திற்குப் பெரும் துரோகம் இழைத்து விட்டான். இவ்வளவு தூரம் ரத்தினத்தின் மீது குற்றம் சாட்டித் தண்டனையும் வாங்கிக் கொடுத்த பிறகு, தனது தவறுதலைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள அவனுக்கு மதிப்புக் குறைவாக இருந்ததாம். தனது சொந்த கௌரவத்திற்குப் பங்கம் வருவதை விரும்பாத அவன், பணத்தைத் தனதாக்கிக் கொண்டு 'கம்'மென்று இருந்து விட்டான்! இது அடுக்குமா?

விடுதலையாகி வந்த ரத்தினத்திற்கு மீண்டும் அதே தொழிற்சாலையில் மட்டு மல்ல, வேறெங்கும்கூட வேலை கிட்டவில்லை. மாஜி கைதியை யார்தான் விரும்பி ஏற்பார்கள்? இந்த ஏமாற்றத்துடன், தணிகாசலம் அவனுக்கிழைத்த தீங்கைப் பற்றியும் மானேஜரின் மற்றொரு சேவகன் மூலம் ரகசியமாக அறிந்து கொண்ட ரத்தினம் வேறு வழியின்றி மனைவியுடன் மனம் நொந்து கிராமத்திற்குத் திரும்பினன்.

கிராமத்தில் வருமானம் குறைந்தது; குடும்பம் மட்டும் விருத்தியாகியது. நல்ல வேலை போய், நலம் கெட்டு வறுமையில் உழல வேண்டிய வாழ்க்கை அவனுடையதாகி விட்டது!

இக்கொடுமைக்கும் காரணம் யார்? இந்த தணிகாசலம்தானே?

4

பதினைந்து வருஷங்களுக்குப் பிறகேயானுலும் இன்று தணிகாசலத்தை மீண்டும் காண்கையில் ரத்தினத்தின் அபராதமற்ற உள்ளம் எரிமலையென வெடித்துக் கொதித்தது. தான் அநுபவித்த கொடுமைகளுக்கு அவனை வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற

ஒரு தீய ஆசையும் அவன் நெஞ்சிலே கனலாகப் பற்றிக் கனியவும் ஆரம்பித்தது. இந்த ரீதியில் சிந்தித்துக் கொண்டே முதல் கூடாரத்தை அடைந்த அவன் கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு திரும்பினான். அப்பெட்டியின் மீது எழுதப்பட்டிருந்த ‘தணிகாசலம்’ என்ற பெயர், ஆளைப் பற்றிய சந்தேகத்தையும் அறவே போக்கியது!

ரத்தினத்திடமிருந்து பெட்டியைப் பெற்றுக் கொண்ட தணிகாசலம் உணவு கொள்ளச் சென்றான். நல்ல வேளையாக அப்போதும் அவன் ரத்தினத்தை அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை யென்றே தோன்றியது. இரண்டு வருடச் சிறை வாசமும், பிறகு தொடர்ந்த வறுமை மிக்க கிராமாந்தர வாழ்வும் தான் அவனை உருத் தெரியாமல் அடித்து விட்டிருக்கிறதே!

தணிகாசலம் சாப்பிட்ட பிறகு எஞ்சிய சோற்றை ரத்தினத்திற்கு அளித்தான். ஆனால் அவனுக்கு இருக்கும் மன வெறுப்பில் அதை எப்படி விரும்பி உண்ணுவான்? ரகசியமாக அதைத் தொலைவில் கொட்டி விட்டு வந்தான் ரத்தினம்.

“சரி...நீ வெளியே தீயை மூட்டி விட்டுக் கூடாரத்தின் முன் பகுதியில் படுத்துக் கொள்; நான் தூங்கப் போகிறேன்!” என்ற தணிகாசலம் பின் பகுதிக்குச் சென்றான். அங்கு சிறிது நேரம் விளக்கொளியில் ஏதோ எழுதிக் கொண்டிருந்த பிறகு, அப்படியே கட்டிலில் படுத்துக் கண்ணயர்ந்து விட்டான். இருவருக்கும் இடையில் ஒரு திரைச் சீலை மட்டுமே இருந்தது.

ரத்தினத்திற்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. வேதனையுடன் வெளியே வந்து நான்கைந்து கட்டைகளை அடுக்கித் தீயை மூட்டினான். பிறகு அவனும் உள்ளே சென்று முடங்கிக் கொண்டான்.

ஆனால் அவனுக்கு உறக்கம் பிடித்தால் தானே? மனம் முழுவதும் ஒரே குமைச்சல். இந்தத் தணிகாசலத்தால் அவனும், செவந்தியும், குழந்தைகளும் அநுபவித்த துன்பங்கள் தாம் அவனுடைய இமைத்திரைகளிடையே விசுவ ரூபத்தில் காட்சிகளாக விரிந்தவண்ண மிருந்தன.

அதன் கொடுமையை அவனால் தாள முடியவில்லை. பற்களை நர நர வென்று கடித்துக் கொண்டு துள்ளி எழுந்து வெளியே வந்தான்

ரத்தினம். அங்கே மலைப் பகுதிகளில் கரியை அப்பினாற் போல் சுக்கில பட்சக் கும்பிருட்டு. அவன் தீயிட்ட பருமனான கட்டைகள்கூட முழுவதும் எரிந்து வெறும் கனலாகத் தானிருந்தன. அப்படியானால் இரவு பன்னிரண்டு மணியாவது இருக்குமே!

'நடு நிசி' என்ற நினைப்பெழுந்ததும் அவனது சிந்தனையின் போக்குக்கூட பயங்கரமாகியது. அவன் தன் நிலை தவறினான். ஏதோ ஒரு உத்வேகம் அவனைப் பிடுத்து உந்தியது. அவனையறியாமல் இடுப்பில் இருந்த கத்தியை எடுத்தது அவனது வலக்கரம். கால்கள் தாமாக தணிகாசலத்தின் கட்டிலை நெருங்கின.

'ஒரே குத்து! போதாதா...? பிறகு ஊரைப் பார்க்க இரவோடு இரவாக ஓடிவிட்டால் யார் அறிய முடியும்?'

ஆனால் கத்தி பிடித்த கை மேலே எழுவதற்குள், "கொலைகாரா! என்ன செய்கிறாய் நீ?" என்றொரு குரல் அவன் உள்ளிருந்து அலறி அவனுக்கு மட்டும் கேட்டது. மறுகணமே உப்புப் பானைபோல் உடலெங்கும் வேர்வைக் கசிவு; கைகள் துவண்டன. 'கொலைகாரன்' என்ற கொடிய பட்டத்தைத் தாள முடியாததுபோல் தத்தளித்தது அவனது மென்மையான உள்ளம்!

அவ்வளவுதான்; போன வேகத்திலேயே திரும்பி வெளியே வந்துவிட்டான் ரத்தினம். ஆனாலும் அவன் உடல் படபடப்பும், நெஞ்சின் துடிதுடிப்பும் ஓயவில்லை. 'என்ன காரியம் செய்ய இருந்தேன்?' என்று நினைக்கையில் ஒரு நெடுமூச்சு அவன் நாசியிலிருந்து அரவுபோல் கழன்று விழுந்தது. மேலும் அங்கேயே நின்றால் என்ன விபரீதம் நிகழ்ந்து விடுமோ என்று அவனுக்கே ஒரு அச்சம்! எனவே விழுந்தடித்துக் கொண்டு வெளியே மலைப் பகுதியில் கால்கள் சென்ற திசையில் பைத்தியம்போல் ஓடினான் ரத்தினம்.

இரண்டு நிமிஷங்கள்கூட அப்படி இருட்டில் ஓடியிருக்க மாட்டான் அவன். அதற்குள் என்ன பயங்கரம்! அவன் கால்களின் கீழிருந்த பூமியே திடீரென்று நழுவி விட்டது! 'பொத்'தென்று எங்கேயோ அதல பாதாளத்தில் விழுந்து விட்டான். பிறகு எப்படியோ மீண்டும் கால்கள் எதன் மீதோ நிலைத்தன. உடலெங்கும் சிராய்த்த காயங்களுடன் இருட்டைக் கைகளால் துழாவினான் ரத்தினம்.

என்ன அதிசயம்! அவன் விழுந்த குழிக்குள் சுற்றிலும் மூங்கிற் சிம்பாலான கூடு. உடனே அவனுக்கு விஷயம் விளங்கி விட்டது; தணிகாசலம் சிறுத்தை பிடிக்க வைத்திருக்கும் கூட்டில் அல்லவா விழுந்திருக்கிறான் அவன்? இதிலிருந்து மீளுவதெப்படி....?

'கொலை புரிய முயன்றாயல்லவா? கைமேல் தண்டனை; சிறைவாசம்!' என்று அவன் மனச்சாட்சி மீண்டும் குரைத்தது.

இந்த மனோ வேதனையையும் பசியால் பிறந்த உடற் சோர்வையும் தாளாத ரத்தினம் அப்படியே கூட்டுக்குள்ளேயே மயங்கி விழுந்து விட்டான்!

5

ரத்தினம் மறுபடி கண் விழித்தபோது யாரோ இருவர் அவனைத் தாங்கிக் கொண்டிருப்பது புரிந்தது. அத்துடன் பொழுதும் அல்லவா விடிந்து விட்டது? கண்களைக் கசக்கிக் கூர்ந்து நோக்கினான். அவர்கள் முதல் கூடாரத்திலிருந்த சர்க்கஸ்காரர்கள் என்றும் புரிந்தது.

"எப்படியப்பா நீ இக்கூண்டில் சிக்கிக் கொண்டாய்?" என்றார் அவர்களில் ஒருவர்.

"இருட்டில் தெரியாமல் விழுந்து விட்டேனுங்க...!" என்று ரத்தினம் மெல்ல எழுந்திருக்க முயன்றான்.

"ஆனால் இந்த விபத்து உனக்கு எவ்வளவு அதிருஷ்டம் தெரியுமா?

நீ கூண்டில் விழுந்தாயோ, இப்போது பிழைத்திருக்கிறாய்! இல்லையெனில் நீயும் இரண்டாவது கூடாரத்தில்தான் படுத்திருப்பாய்; பிறகு பாவம், மானேசர் தணிகாசலத்துக்கு நேர்ந்த கதிதான் உனக்கும்—''

''தணிகாசலத்துக்கு என்னங்க...?'' – தன்னை மறந்து படபடத்தான் ரத்தினம்.

''பாவம்; நேற்றிரவு பிற்பொழுதில் இரண்டு சிறுத்தைகள் வந்து, தூங்கிய அவரைக் கடித்துக் கிழித்து....''

''ஐயோ....!'' என்று அலறிய ரத்தினம் திரும்பவும் மயங்கி விழுந்து விட்டான்.

பிறகு—

மறுபடியும் எப்படியோ வெகு நேரம் கழித்துத்தான் கண்களை விழித்தான் ரத்தினம். தொடர்ந்து மற்றவர்கள் உதவியுடன் மேலே வந்தான். இறுதியில் அன்று மாலைக்குள் சிறிது தெம்பு பெற்று வீட்டுக்குத் திரும்பலானான் அவன். தணிகாசலத்தின் உடலைக் காரில் எடுத்துக் கொண்டு சர்க்கஸ்காரர்களும் போய் விட்டதால் அவனுக்கு வேலையும் கிடைக்காமல் போயிற்று!

சம்பாத்தியமின்றி வெறுங்கையுடன் திரும்பியதால், ரத்தினத்தின் வீட்டில் அதே வறுமை; செவந்தியின் தீபாவளிப் பிரச்சினை முடிவின்றித் தீராமலேயே இருந்து வந்தது....!

6

நாட்கள் சில நகர்ந்தன.

விடிந்தால் தீபாவளித் திருநாள்!

ஊரெங்கிலும் வீட்டுக்கு வீடு தீப ஒளி சுடர் விட்டுப் பிரகாசிக்கையில், ரத்தினத்தின் குடிலில் மட்டும் இருள்தான் மண்டியிருந்தது. அத்துடன் அவனுடைய உடற்காயங்கள் ஆறி விட்டாலும், உள்ளத்திலே மட்டும் சொல்ல முடியாத ஒரே சூன்யம்!

இந்தத் துன்ப நிலையில்தான், திடீரென்று தீபாவளிக்கு முதல்

'' என்ன செட்டியார்வாள்! தீபாவளிக்கு வெண்ணெய் வியாபாரமெல்லாம் எப்படி இருந்தது?....''

'' தீபாவளி வந்தாலும் வந்திச்சு!....நான் அப்படியே உருகிப் போயிட்டேனுங்க ஐயா!''

நாள் மற்றுமொரு அதிசயம் நிகழ்ந்தது. அதாவது சர்க்கஸ் காரர்களில் ஒருவர் அவனது வீட்டைத் தேடி வந்தார். ரத்தினம் அவரை வியப்புடன் வரவேற்றான்.

'' ரத்தினம், தணிகாசலம் இறந்தது தான் உனக்குத் தெரியும்; அவர் இறந்த தினத்தில் வழக்கம் போல் தன் 'டைரி'யை எழுதி விட்டுத்தான் படுக்கப் போயிருக்கிறார். ஆனால் அவர் அன்று என்ன எழுதியிருக்கிறார், தெரியுமா?''

'' தெரியாதுங்க—''

வந்தவர் சட்டைப் பையிலிருந்து ஒரு 'டைரி'யை எடுத்துப் படித்தார்: '' இன்று யதேச்சையாக ரத்தினம் என்னிடம் வேலை கேட்க வந்தான். எனக்கு ஒரே திகைப்பு! இருப்பினும், கடந்த பதினைந்து வருஷங்களாக என் மனத்தை அரித்து வந்த தீராத ஒரு வேதனைக்கு நல்ல முடிவு நேர்ந்துவிட்ட மாதிரி எனக்கு ஆனந்தமாக இருக்கிறது. ரத்தினம் என்னை அடையாளம் தெரிந்து கொள்ளவில்லையென்றே நினைக்கிறேன். இருப்பினும், அவன் போகும் போது, அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுடன், அவன் கையில் தீபாவளிப் பரிசாக ரூபாய் ஐயாயிரம் பணமும் கொடுத்தனுப்ப வேண்டும்!''

ரத்தினத்திற்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. நெஞ்சம் நெகிழ்ந்து, தணிகாசலத்தை எண்ணிக் கண்ணீர் வடித்த அவன் அடித்த சிலையெனச் சமைந்துவிட்டான் ஒரு கணம். தன்னைத் தணிகாசலம் எப்படிப் புரிந்து கொண்டான் என்ற வியப்பு ஒரு புறமும், தன் செய்கைக்கு வருந்தும் அவனைக் கொல்ல முயன்றதைப் பற்றிய வேதனை ஒரு புறமுமாக அவன் சிந்தனை அவனை வியூகமிட்டு வளைத்தது.

அதற்குள் வந்த மனிதர் தொடர்ந்தார்: '' இந்த டைரியைப் பார்த்த தணிகாசலத்தின் மனைவி, இறந்தவருடைய கடைசிச் செய்தியை நிறைவேற்றவே என்னை இங்கு அனுப்பியிருக்கிறாள். இந்தா......ரூபாய் ஐயாயிரம்!''

நடுங்கும் கைகளால் மௌனமாகப் பணப் பையை வாங்கிக் கொண்டான் ரத்தினம். பிறகும் கூடப் பேச நா எழாது, மௌனமாகவே வந்தவரையும் வழியனுப்பினான் அவன், கண்களில் நீர் மல்க.

மறுநாள் ரத்தினத்தின் வீட்டில் தீபாவளி கொண்டாடப் பட்ட விமரிசையை விவரிக்க இயலாது. செவந்திக்குப் பட்டுப் புடவையும், குழந்தைகளுக்குப் புத்தாடைகளும், பட்டாசுகளுமாக ஒரே கோலாகலம்!

ஆனால் ரத்தினம் மட்டும் அன்று முழுவதும் பற்களில் நீர் படாமல் உபவாசமிருந்து தணிகாசலத்தின் ஆத்மாவுக்குத் தூய்மை மிகுந்த அஞ்சலி செய்தான்! ★

தீபாவளி நாளிலே இன்பம் நிறைந்த சம்பவங்களைப் போல துன்பமான நிகழ்ச்சிகளும்தான் தென்படுகின்றன. இதுதான் வாழ்க்கையின் புதிர்...!

★ ★ ★

காற்றைக் கிழித்து நெருப்பை உமிழ்ந்துகொண்டு மேகமண்டலத்தை எட்டிப் பிடிப்பதுபோல விரைந்து செல்லும் விமானவெடி; வர்ண ஜாலங்களை வாரித்தெளிக்கும் புஸ்வாணம்; கஜேந்திரனுக்கு அபயமளித்த பெருமையைச் சொல்லி பூரிப்போடு சுழலும் விஷ்ணுசக்கரம்; கம்பி மத்தாப்பு, சீனப்பட்டாசு; சரவெடி, அணுகுண்டு — தீபாவளியென்றால் சிறுவர்களுக்கு கேட்கவேண்டுமா?-சிகநகரை இரண்டு படுத்தி விளாசித் தள்ளிக் கொண்டிருந்தனர்.

சிகநகர்ப் பெரிய பண்ணை ஸ்ரீமான் அனவரதம் வெளித்திண்ணையில் போடப்பட்டிருந்த நாற்காலியில் சாய்ந்த வண்ணம் தெருவிலே நிகழும் திருவிழாக் கேளிக்கைகளையும் வாண வேடிக்கைகளையும் ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்தார். வாய்க்கு ருசியான தீபாவளிப் பட்சணங்களைச் சற்று அதிகமாகவே வயிற்றுக்குள் செலுத்தி விட்டிருந்தார் அவர். நல்லபடியாக ஜீரணித்துத் தொல்லைகள் ஏதும் தராமல் இருக்க வேண்டுமே என்ற கவலையும் இல்லாமல் இல்லை!

"எசமான்!.............."

"யாரப்பா, அது?...." கோபத்தோடு திரும்பிப் பார்த்த பண்ணையாரின் கண்களுக்குக் கையைக் கட்டிக் கொண்டு பக்தியோடு நின்றிருந்த உருவம் தென்பட்டது.

"ஏண்டா, நான்தான் நேற்றே சொல்லிவிட்டேனே! இந்தவருஷம் விளைச்சல் ஒண்ணும் சரியில்லே... அதனால் வேட்டி, துணி மணியெல்லாம் இடையாது!....நீ மறுபடியும் வந்து கழுத்தை அறுத்தால் என்ன பிரயோஜனம்? ஒரு தடவை சொன்னாலும் அதுதான்; ஒன்பது தடவை சொன்னாலும் அதுதான்!.........."

"இப்போ நான் வந்தது அதுக்கில்லே எசமான்......வந்து......." செவத்தானுடைய குரல் தயங்கித் தயங்கி ஒலித்தது.

"சொல்றதைச் சிக்கிரமாத் தான்சொல்லித்தொலையேண்டா!"

"......காயலாகக் கிடந்த எம் மவ சின்னம்மா சாமத்திலே செத்துப் போச்சுங்க!........விசேஷ வகைக்குக் கையிலே காசில்லேங்க!...ஏதாகிலும் பணம்..."

செவத்தான் வார்த்தையை முடிக்கு முன்னரே சீறி எழுந்தார் பண்ணையார். அவன்மேல் எரிந்து விழுந்தார்.

"தீபாவளியும் திருநாளுமா எழவு சொல்லி நிக்கிறயே!.......

மண்டையிலே ஏதாச்சும் இருக்குதாடா உனக்கு?......போடா, அந்தண்டை!........பணமு மில்லே.......ஒண்ணுமில்லே!............''

''வேறே எங்கே போவேன் முதலாளி?........வருஷம் பூராவும் உங்களுக்கு ஊழியம் செய்யறேன்........நீங்கதானே ஆதரவு! பத்தே பத்து ரூபா கொடுங்க, போதும்!....கூலியிலே பிடிச்சுக்கிடுங்க!.......''

''ஒரு சல்லிகூடப் பெயராது! நல்ல நாள் பொழுதிலே இரும்புப் பெட்டியைத் திறக்கிறதில்லேன்னு உனக்குத் தெரியாது?.....போடா, போ! வேறே எங்கேயாவது போய் வாங்கி எழவு பண்ணித்தொலே!...வீணு இங்கே நிக்கிறதுலே பயனில்லே!''

''எங்கேயும் கிடைக்கலே, எசமான்; நீங்கதான் காப்பாத்தணும்!.......வேறே வழியில்லே; தயவு பண்ணுங்க!'' கண்ணீர் வழியக் காலில் விழுந்து கெஞ்சிய செவத்தானை உதறித்தள்ளினுர்.

புருஷனுடன் சேர்ந்து கொண்டு, செவத்தானைச் சிறைக்கு அனுப்புவதாகப் பயங் காட்டினுள், மனைவி.

''அட, பாவி!...நீயும் ஒரு மனுசனு?......வாய் கூசாமச் சொல்றியே!........உருப்பிடுவியா? ஏம்மா, உங்களுக்குக் கூடவா இதயம் இல்லே?'' ஏழை நெஞ்சம் குமுறியது.

''எங்களையே எதிர்த்துப் பேசறியா?....யாரங்கே!...நாலு உதை கொடுத்து அனுப்புங்கடா, கழுதைக்கு!...'' பெரிய பண்ணை வார்த்தைக்காக இல்லா விட்டாலும் அவருடைய பணத்துக்காவது மதிப்பு இல்லாமற் போகுமா? செவத்தான் அடித்துத் துரத்தப்பட்டான். நல்ல பிரதிபலன்!

பெரிய பண்ணை அனவரதம் மீசையில் கைபோட்டு முறுக்கிவிட்டுக்கொண்டார். 'திருநாளேங்கிற நினைப்பு இல்லாம சாவுசொல்லிப் பணம்வேறே கேட்டு வந்துட்டானே!....இந்த மாதிரிப் பசங்களையெல்லாம் வேலைக்கு வச்சுக்கிறது முட்டாள்தனம்!....இருக்கட்டும், அந்தப்பயலைச் சொல்றேன்!'

தரையில் இருந்த பத்திரிகையின் வரிகள் தெரிந்தன.

''சார், தந்தி!...''

நடுங்கும் கரங்களால் தந்தியை வாங்கிப் பிரித்தார். திருச்சிக் கல்



'பரணி'

லூரியிலிருந்து தந்தி வந்திருந்தது.

''தங்கள் மகன் இன்று காலை காவேரியில் மூழ்கிவிட்டான். இன்னும் சடலம் கிடைக்கவில்லை. உடனே புறப்பட்டு வரவும்!....'

அலறித் துடித்த பெரிய பண்ணையார் கண்களைத் திறந்தார். அவர் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. நல்ல நாளும் பொழுதுமாக இரும்புப் பெட்டியைத்திறந்து பணத்தை எடுத்துக்கொண்டு வாசலுக்கு விரைந்தார். கைதட்டிக் கூப்பிட்டு, செவத்தானிடம் பத்து ரூபாய்க்குப் இருபது ரூபாயாகக் கொடுத்தனுப்பினுர். ★

மனம்பற்றி வாழ்மின்!

பரம்பொருள் என்னும் தத்துவத்தை உணர்ந்து, இன்பம் அடைவதற்கு வழி எது? இந்த வினாவுக்கு விடை தரும் வகையில் அமைந்தது திருஞானசம்பந்தரின் பாட்டு. அறிவு விஞ்சிய 'மூளைக் கொழுப்'பிலே அளவு கடந்து ஆராய வேண்டாம் என்று விலக்கினார்; மேலும், எங்கும் சுடர் விட்டு விளங்கும் சோதியனை மனம் பற்றி வாழுங்கள் என்று வழி காட்டினார். மனம் பற்றி வாழ்வாருக்குத் துயரம் இராது; இன்பம் கிட்டும் என்பது திருஞான சம்பந்தரின் தீர்ப்பு. இது கடவுள் தத்துவத்திலே இன்பம் காணும் வழி.

இதே வழியில் இலக்கியத்திலும் இன்பம் காணலாம். மனம் பற்றிய முறையிலே இலக்கிய மன்றத்திலே புகுந்தால் எங்கும் எப்போதும் இன்பம் காணலாம். மனம் பற்றி வாழ்மின் என்று சொல்லிய வாக்கின் குறிப்பினை நன்றாகக் குறிக்கொள்ள வேண்டும். 'மனம் போல வாழ்மின்' என்று சொல்லவில்லை. இலக்கியத்தில் இன்பம் காண விரும்புகிறவர்களுக்கும் இந்தக் குறிப்பு வேண்டும். தங்கள் மனம் போன போக்கிலேயே இலக்கியத்தைக் கையிலெடுத்தால் இலக்கியம் இன்பக் களஞ்சியமாய்த் தோன்றாது; எந்த இடத்திலும் இயல்பு மாறியிருப்பதாகவே அவர்கட்குத் தோன்றும்.

மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம். ஆம், அது நம்மை எங்கெங்கோ இழுக்கும். உணர்ச்சியின் பிறப்பிடம் மனம். மனம் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் இடம் கொடுத்தால், உணர்ச்சி வெள்ளத்திலே சுழியிடும் சுழலிலே சிக்கிக் கொள்வோம். வெள்ளத்தின் பெருக்கிலே கொலுவிருக்கும் நிறைந்த பேரழகைக் காண முடியாது. அம்மட்டோ? அழகைக் காணும் வாய்ப்பை இழப்பதோடு சுழியில் சிக்கித் தடுமாறும் அல்லலுக்கும் ஆளாக நேரிடும்.

இலக்கியத்தை எடுத்துப் பயில்கின்ற ஒருவன் தன் மனம் போன போக்கிலே தோய்வானாயின், இலக்கிய இன்பத்தைத் துய்க்க முடியாது; இலக்கிய இன்பமாகிய பெரு வெள்ளத்தில் எங்கெங்கோ சுழலிட்டு குழியிட்டு இலங்குகின்ற சிக்கல்களிலே அகப்பட்டுத் துன்பப்படத்தான் நேரிடும்.

வெள்ளம் இன்பம் தருவதுதான்—காணும் முறையிலே கண்டால். கரையிலிருந்து காணலாம்; ஓரளவு இன்பம் உண்டு. நீச்சலடித்துக் காணலாம்—நெஞ்சு உரமும் நீச்சல் திறமும் இருந்தால். படகிலோ ஓடத்திலோ ஏறிக் காணலாம் – இது பிறர் உதவி கொண்டு வெள்ளத்தை அனுப

அற்புதத் திறம் கொண்டு சமைக்கப் பெறும் 'இலக்கியச் சுவை' கட்டுரைத் தொடரின் இன்பம் இதழுக்கு இதழ் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. 'மண்டையரும் மதலையரும்'; 'தேனுக்குள் இன்பம்'; 'கடவுளும் கவிதையும்' ஆகிய மூன்று கட்டுரைகள் இதுவரை அச்சு இயற்றப் பெற்றிருக்கின்றன.

விக்கும் முயற்சி. வெள்ளத்தை அணையிட்டு மின்சாரம் உற்பத்தி செய்யுமிடத்தில் காணலாம்; அங்கே அதன் ஆற்றலின் பெருக்கத்தை உணரலாம்.

இலக்கிய இன்பமும் வெள்ளம் தான். இலக்கியச் சாரலில்—அறிஞரின் கூட்டுறவில்—இன்பம் காண்பது ஒரு வகை. இலக்கியப் பெருக்கிலே துணிந்து இறங்கி இங்குமங்கும் நாட்டம் செலுத்தி, முக்குளித்து முக்குளித்து மூழ்கித் திளைக்கலாம்; இத்தகைய இன்பத்திற்கு முறையான பயிற்சியும் சுழிப்பட்டுத் தடுமாறாத எச்சரிக்கையும் வேண்டும். உரையாசிரியர்கள், பேராசிரியர்களின் நூல்கள் வாயிலாக – படகிலேறி இன்பம் காண்பது போல – இலக்கிய இன்பம் காணலாம்.

இங்கே சொல்லிய எவ்வகையைப் பின்பற்றினாலும் இன்பம் காண முடியும். இவற்றில் எந்த வழியும் வேண்டாமென்று புறக்கணித்து, மனம்போன போக்கிலே இலக்கிய வெள்ளத்திலே இறங்கினால், துன்பம்தான் கிட்டும். 'குன்று முட்டிய குருவி போல' என்பார்கள்; பேராற்றல் கொண்ட இலக்கியத்தோடு தகாத முறையில் உறவாட நினைத்தால் 'மூளை' சிதறும்.

மனம் என்பது உணர்ச்சிகளின் பிறப்பிடம். இலக்கியமோ உணர்ச்சிகளின் களஞ்சியம். எனவே, மனம்போன போக்கிலே இலக்கியத் துறையிலே ஈடுபட்டால், இன்பமன்றோ பெருகவேண்டும்? மனம்போன போக்கிலே துன்பம் எப்படி உண்டாக முடியும்? — நல்ல கேள்வி.

உயிர்களை யெல்லாம் இயக்கும் ஆற்றல்கள் மூன்று என்பார்கள். இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்று இம் மூன்றையும் சமய நூலார் குறிப்பிடுவர். ஆசையும் அறிவும் தூண்டுதலால் செயல் உருவாகின்றது. எனவே மேலே குறித்த மூன்றை இரண்டில் அடக்கலாம். ஆசையும் அறிவுமே உயிர்களின் செயல்களுக்கும் சிறப்புகளுக்கும் காரணம் ஆகின்றன. உணர்ச்சி என்னும் தத்துவம் ஒரு குறிப்பிட்ட வழியில் உருவாகும் போது தான் ஆசை என்பது உருப்பெறுகின்றது. எனவே, இந்த இரண்டு அடிப்படையான தத்துவங்களை — உயிர்களை இயக்கும் சக்திகளை—உணர்ச்சி என்றும் அறிவு என்றும் வகைப்படுத்திக் கூறலாம்.

இந்த இரண்டு சக்திகளும் ஒருங்கே இயைந்து தொழிற்படுவதில் தான் உலகத்தின் ஒழுங்கான இயக்கம் உள்ளது. சில இடங்களில் உணர்ச்சி மிகுதியாக இருக்கலாம்; அறிவுக்கூறு குறைவாக இருக்கலாம். வேறு சில இடங்களில் அறிவு நிலை முனைப்புற்று ஓங்கியிருக்கலாம்; உணர்ச்சி சற்று அடங்கி முடங்

தமிழ்ப் பேராசிரியர்
ம. ரா. போ. குருசாமி

கித் தோன்றலாம். எப்படியும் எங்கும் எவரிடத்தும் இரண்டு தத்துவங்களும் இணைந்தே இருக்கும்; இருக்கவும் வேண்டும். இரண்டினுள் ஏதேனும் ஒன்றை அடியோடு நசுக்கிவிட்டு மற்ருென்றுக்கே ஆதிக்கம் தருவதற்கு முயன்ருல் வெறிதான் விளையும். உணர்ச்சியை நசுக்கும் அறிவும் வெறியாக முடியும்; அறிவை ஒடுக்கும் உணர்ச்சியும் வெறியாகவே முடியும்.

இந்த இருமைத் திருவிளையாடலில் மற்ருெரு வியப்பும் உண்டு. உணர்ச்சி வயப்பட்டுப் போகின்ற நிலையில் — ஒருவன் தன்னை அறியாமல் அறிவின் சந்நிதியிலே செயலற்றுப் போகிருன்; அறிவின் கைப்பாவை ஆகிருன். அதுபோலவே அறிவை மட்டும் வளர்த்து உணர்ச்சியை நசிக்கச் செய்யும் ஒருவன் தன்னை அறியாமலே உணர்ச்சியின் கொந்தளிப்பிலே தன்னை இழக்கின்ருன்; உணர்ச்சியின் ஈர்ப்புக்கு இரையாகின்ருன்.

உணர்ச்சிக்கெல்லாம் பிறப்பிடமாயும் பண்ணையாயும் இருப்பது மனம்தான். அந்த மனத்துக்கு ஒருவன் அடிமையாகிவிட்டால், உணர்ச்சியின் கொந்தளிப்பில் சிக்கித் தவித்து, எல்லாம் குழம்பி, எதிலும் ஐயமே கொள்வான். அறிவைமட்டும் வளர்ப்பதற்குரியவன் கேட்கும் கேள்விகளைப் போலவே உணர்ச்சியடிமையும் கேட்கத் தொடங்குவான். எதைப் பார்த்தாலும் அவனுக்கு ஐயத்திற்கு உரியதாகவும், திரிபுக்கு உரியதாகவுமே காட்சி யளிக்கும்.

இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்க முயல்வேன். தாய் என்று ஒருத்தியையும் தந்தை என்று ஒருவனையும் சொல்லுகிருன் ஒருவன். அவன் சொல்வது உண்மைதான் என்று திட்டமாகச் சொல்லமுடியுமா? ஏதோ ஒரு நம்பிக்கை — பல செயல்களாலும் கேள்விகளாலும் உருவான ஒரு நம்பிக்கை அவனிடம் தோன்றியது. அந்த நம்பிக்கையைப் பற்றிக்கொண்ட அவன், ஒருத்தியைத் தாய் என்கிருன்; ஒருவனைத் தந்தை என்கிருன். உணர்ச்சிக் கொந்தளிப்பிலே — தாய்பற்றியோ, தந்தை பற்றியோ அல்லது, தன்னைப் பற்றியோ ஏற்படக்கூடிய சிக்கல் நிறைந்த ஒரு கொந்தளிப்பிலே — அவன் உள்ளத்தில் ஒரு கேள்வி எழக்கூடும்: 'ஆம், இவளைத்தான் தாய் என்று நான் ஏன் நம்பினேன்? அல்லது இவன்தான் தந்தை என்று ஏன் கொள்ளவேண்டும்?' பொதுவாக இப்படி ஒரு கேள்வி எழுந்திடுவதில்லை. எனினும், உணர்ச்சியைமட்டும் வெறியாக வளர்த்துவிட்டவன் இதுபோலத்தான் கேள்விகளை எழுப்பிக்கொண்டு திண்டாடுவான். தானும் வாழான்; பிறரையும் வாழவிடான். இந்தத் தத்துவத்தின் உருவகமாகத்தான் ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் உலவுகிருன்.

அறிவை மட்டும் வளர்த்து வெறிக்கு இரையாகின்றவன் கதையும் இதுவேதான்.

மனம்போலவாழ்கின்றவனுக்கு எதிலும் பிடிப்பு ஏற்படாது-அறிவு மட்டும் வளர்ப்பவனுக்கும் எதிலும் பிடிப்பு ஏற்படாது. மனம் என்பது எல்லையற்ற எண்ணங்களை எழுப்பவல்லது. ஆகையால் அதற்கு ஒரு முடிவே கிடையாது. எனவே, மனம்போல வாழத் தொடங்குபவனுக்கு எதிலும் நிலைத்த பிடிப்புஏற்பட வழியில்லை.

மனம்போன போக்கிலே இழுபட்டு இலக்கியத்தைப் படிப்பவன் கதியும் இதுதான். '**அவள் முகம் ஒரு சிரிக்கும் தாமரை**' என்று ஒரு வாக்கியம் வருகிறது என்று வைத்துக்கொள்வோம். மனம் போன போக்கிலே போகிறவனுக்கு இதைப் படித்தவுடன் பல கேள்விகள் எழும். அந்தக் கேள்விகள் பல தரமாகவும் இருக்கலாம். ஒருவன், 'தாமரைபோல முகம்' என்று சொன்னல் போகிறது என்று விடலாம். அது எப்படி முகத்தையே தாமரை என்று சொல்லலாம்?' என்றுகேட்பான். இன்னொருவன், 'அதுதான் கிடக்கிறது. அவள் முகம் ஒரு சிரிக்கும் தாமரை என்று சொன்னனே;

தாமரை எங்காவது சிரிக்குமா? சுத்த அறிவீனம்!' என்று நினைக்கலாம். வேறொருவன் 'ஐயா, அவள் முகம் சிரிக்கும் தாமரை என்கிறீர்களே, அவள் முகத்தில் இதழ் இதழாக ஏதேனும் தொங்குகிறதா? அல்லது தாமரைப் பூவைப்போல ஓரம் சிவந்தும் நடுவே வெளிறியும் காணப்படுகிறதா அவள் முகம்?' என்று தடை சொல்லக்கூடும்.

இந்தக் கேள்விகளெல்லாம் உணர்ச்சியின் முருகிய நிலையில் எழுகின்ற பொருந்தாக் கேள்விகள். அறிவால் விளைந்த கேள்விகளல்ல இவை. அறிவுப் போலியான வினாக்களே இவை. அறிவார்ந்த கேள்விகளின் அமைப்பு வேறு மாதிரியாக இருக்கும். இதே உதாரணத்தை அறிவுவாதி ஒருவன் படிக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவள் முகம் ஒரு சிரிக்கும் தாமரை என்று சொல்லிய கவிஞன் இதனை உருவகமாக எண்ணினானா, அல்லது இல்பொருள் உவமையாக நினைத்தானா? தாமரையின் மலர்ச்சியை எண்ணினானா, அன்றி அதன் நிறச் செவ்வியைக் கருதினானா? கதிரவனைக் கண்டு மலரும் தாமரையை நினைத்துக் காதலனைக் கண்டு, 'முறுவலிக்கும் காதலியை நினைத்தானா?' — இப்படி எழும் அறிவு வினாக்கள்.

அறிவுவாதியின் வினாக்கள் வளர வளர உணர்ச்சிப் போலியும், உணர்ச்சி வாதியின் வினாக்கள் வளர வளர அறிவுப் போலியும் இடம் பெறுவதை உணரலாம். உணர்ச்சிப் போலியோ அறிவுப் போலியோ இடம் பெறுமானால் அங்கே உண்மைக் காட்சி இருக்க முடியாது.

இலக்கியத்தைப் படிக்கின்ற நாம், அதிலுள்ள உண்மையை உணர்வதையே பெரும் பேறாகக் கருதவேண்டும். உண்மையைக் காண விரும்பும் நாம், உணர்ச்சிப் போலிக்கு இடம் தருகின்ற அறிவு வீக்கத்தையோ, அறிவுப் போலிக்கு இடம் தருகின்ற உணர்ச்சிக் கொந்தளிப்பையோ நம்மில் வளர விடைக்கூடாது. இது சற்று அரிய சாதனைதான்.

உணர்ச்சியையும் அறிவையும் அவ்வவற்றுக்கு உரிய எல்லையில் நிறுத்திவைக்கவேண்டும். அறிவும் உணர்ச்சியும் அளவோடு இருந்தால்தான், போலி உணர்ச்சியும் போலி அறிவும் நம்மை இரை கொள்ளாமல் இருக்கும்.

காவியம், ஓவியம் போன்ற துறைகளில் ஈடுபடும்போது உணர்ச்சிக்குச் சற்று மிகுதியாக இடம் கொடுங்கள்! இலக்கணம், சாத்திரம்போன்ற துறைகளில் ஈடுபடும்போது அறிவுக்குச் சற்று ஓங்கிய மதிப்பளியுங்கள். உணர்ச்சி நிலையில் உருவாவது கலை; அறிவு நிலையில் உருவாவது சாத்திரம். ஆகவே, தலைமைக் கூறுக்கு உரிய சக்திகளும் மாறுபடுகின்றன.

அறிவின் தலைமை ஒருபால் இருக்கட்டும். நாம் இங்கே ஆராய எடுத்துக்கொண்டது இலக்கியத் துறை; உணர்ச்சிக்கு மதிப்புத் தரவேண்டிய துறை. இதுவரை நாம் கண்ட கருத்துக்களிலிருந்து, உணச்சிக்குத் தலைமை தந்து இலக்கியத்தைப் படிக்கவேண்டும் என்பதை உணர்ந்துள்ளோம். ஆனால், அறிவைப் புறக்கணிப்பதும் கூடாது. அறிவை அடியோடு புறக்கணித்து விட்டால், உணர்ச்சிக் கொந்தளிப்பிலே சிக்கித் தவிக்க நேரிடும்.

இலக்கியத் துறையில் நாம் விளக்கிய இந்தக் கருத்தையே திருஞானசம்பந்தர் சமயத் துறையில் சுட்டினார். 'மிக்குச் சோதிக்க வேண்டா' என்று குறித்தபொழுது அறிவுக்கு ஓரளவு மதிப்பளித்தார்; 'மனம்பற்றி வாழ்மின்' என்று குறித்தபொழுது உணர்ச்சியோடு ஒன்றி நின்று காண்பதையே சுட்டினார். உரிய உணர்ச்சியைப் பற்றி நோக்கினால், இறைவனை உணரலாம்.

கவிஞன் காட்டும் காட்சியை மனத்தால் உணரவேண்டுமாயின், அக் காட்சிக்கு உரிய மனநிலையை நாம் பெறவேண்டும்; அந்தக் கவிஞனின் உணர்ச்சியை நாம் பற்றவேண்டும். எப்படி அது முடியும்? ★


நான்கு நன்மணிகள்
ZAMA INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
Z.A.M.A RUB
ஜாமா றப்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
அமர்கோஸ்
அசல் குளுகோஸ் பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
தபால் பெட்டி 518 — சென்னை-3
போன் 2182
தந்தி "ஜாமா"

ஒரு கோடை!



எஸ்.என். பழனிச்சாமி

என்னுடைய அறையில் மாட்டப்பட்டிருந்த சுவர்க் கடிகாரம் இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு பனிரெண்டு தடவை அலறி ஓய்ந்தது. அப்போதும் என்னுடைய சிந்தனை ஓயவில்லை. என்னென்னவோ எண்ணியபடியே தூக்கம் பிடிக்காமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். அப்போது பக்கத்து அறையில் படுத்துக் கொண்டிருந்த ஊமைப் பெண் என்னவோ முனகிக் கொண்டு லேசாகப் புரண்டு படுத்த சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து 'பே' என்ற அவளுடைய குரல் கேட்டது.

எனக்கு மட்டும் கேட்கும்படி ஊமைச்சி மெதுவாகக் கூப்பிட்டாள். ஆனால் காற்றுட என்னுடைய அறைக்கு முன்னால் ஹாலில் படுத்திருந்த என்னுடைய அம்மாவுக்கும் அது கேட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால், ''ராமு! அன்னம் என்னவோ கேட்கிறாள். கொஞ்சம் எட்டிப் பார்!'', என்று சொல்லுவார்களா?

என்னுடைய அம்மாவின் குரலைக் கேட்டதும், எழுந்து உடனே ஊமைச்சியிடம் செல்லுவதற்கு எனக்குத் தயக்கம்; ஏதாவது தவறாக அம்மா எண்ணிக் கொள்வார்களோ என்ற பயம். ஆகவே அம்மாவின் குரலுக்குக் கொஞ்ச நேரம் வேண்டுமென்றே பதில் பேசாமல் இருந்தேன். பிறகு மெதுவாக எழுந்து பக்கத்து அறைக்குச் சென்றேன்.

அம்மாவுக்குக் கீல் வாதம். இரவு படுத்தாய் விட்டதென்றால் எழுந்திருப்பது கொஞ்சம் சிரமம். அதனால்தான் ஊமைப் பெண்ணைக் கவனிக்கும்படி அம்மா என்னை எழுப்பினார்கள்.

மருந்துச் சீசாக்களுக்குப் பக்கத்தில் ஊமை உலர்ந்த கொடியாகப் படுக்கையில் துவண்டு கிடந்தாள். அழகுப் பிம்பமாக – சௌந்தர்ய தேவதையாக இருந்த ஊமைச்சி – ஆம்; அன்னக்கொடி இந்த ஒரு வாரத்தில் எப்படி உரு மாறிவிட்டாள்! இதை நினைத்த போது எனக்குத் துக்கத்தால்

தொண்டையை அடைத்துக் கொண்டது.

அவளுடைய படுக்கைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து தலைமாட்டி லிருந்த படுக்கையறை விளக்கை லேசாகத் தூண்டினேன். வெளிச்சம் அதிகரிக்கவும் ஊமைச்சி லேசாகக் கண்விழித்தாள். ஆனால் எண்ணெய் தீர்ந்துவிட்டதால் தூண்டப்பட்ட விளக்கு லேசாகக் கண் மூட ஆரம்பித்தது.

மங்கலான அந்த விளக்கு வெளிச்சம் அவளுடைய முகத்துக்கு ஒரு சோபையை அளித்தது. ஆனால் அவளுடைய உதட்டிலே துடிப்பு! கண்களிலே கண்ணீர்! ஒரு வேளை என்னுடைய கண்ணீரை அவள் முதலில் பார்த்து விட்டாளோ?

நடுங்கும் என் கைகளை லேசாக அவளுடைய நெற்றியில் வைத்தேன். ஏனோ அசாதாரணமாக அப்போது காய்ச்சல் விட்டிருந்தது. தன் நெற்றிமீதிருந்த என் கைகளை விடாமல் பிடித்தபடியே ஏதோ வேண்டும் பாவனையாக என்னை பார்த்தாள் அன்னம். அவளுடைய பார்வை எனக்கா புரியாது? ஆகவே 'என்ன வேண்டும்?' என்று சைகை செய்தேன். உடனே அவள் தன்னுடைய வலது கையை என்னிடம் நீட்டினாள்.

எனக்கு அந்த நிலையில் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவளுக்குச் சத்தியம் செய்து கொடுப்பதா வேண்டாமா என்று என்னால் உடனே தீர்மானிக்க முடியாமல் திணறினேன். நான் ஒரு தீர்மானத்துக்கு வருவதற்குள் அவளுடைய நீட்டிய கை திடீரென்று என் கழுத்தை வளைத்தது.

அவளுடைய இந்தத் திடீர்ச் செய்கையைக் கண்டு நான் திடுக்கிட்டேன். இந் நிலையில் அம்மா பார்த்து விட்டால் நிலைமை விரசமாகப் போய்விடுமென்று எண்ணி என்னை அவளுடைய பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள முயன்றேன். ஆனால் விநாடிக்கு விநாடி அவளுடைய பிடி இறுகியது. இந்தச் சமயத்தில் "ஊமைக்கு என்ன வேண்டுமாம்?" என்று கேட்டபடியே அம்மா வேறு படுக்கையை விட்டு எழுந்தார்கள். எனக்கு ஒரே பயமாகப் போய்விட்டது. இத்தனை நாளைக்குப் பிறகு இன்று கையும் களவுமாக அம்மாவிடம் பிடிபடப் போவதை எண்ணும் போது, எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இந்த நிலையில் விளக்கு மேலும் மங்கலாகி விட்டது.

2

நான் உள்ளூர் உயர்நிலைப் பள்ளியில் ஆறும் படிவத்தில் படித்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் இந்த ஊமைப் பெண் எங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். தாய் தகப்பனை இழந்த இந்தப் பெண் சுற்றி வளைத்து எங்களுக்கு எப்படியோ சொந்தமாம்.

இவளுடைய அழகும் புத்திசாலித்தனமும் சுறு சுறுப்பும் என் தாயை வெகுவாகக் கவர்ந்து விட்டன. ஆகவே என்னுடைய அம்மாவுக்கு இவள் மீது மிகுந்த பிரியம். இவளுடைய அழகைக்

உமா

சந்தா விவரம்

இந்தியா, சிலோன்

ஓர் ஆண்டிற்கு ரூ. 3-00
ஆறு மாதத்திற்கு ரூ. 1-50

வெளிநாடுகளுக்கு

ஓர் ஆண்டிற்கு ரூ. 4-00
ஆறு மாதத்திற்கு ரூ. 2-00

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. வி. பி. பி. மூலம் இதழ்கள் அனுப்பப்படமாட்டா.

தனிப்பிரதி 25 நயாபைசா

'உமா' :: சென்னை-1.

கண்டு என் தாயார் அடிக்கடி சொல்லுவார்: "இவளுக்கென்று ஒருவன் எங்கே பிறந்திருக்கிறானோ?", என்று. ஆனால் அந்த ஒருவன் நான்தான் என்பது என் தாய்க்குத் தெரியவில்லை. ஏன், எனக்கே வெகு நாள் அது தெரியவில்லை.

நாட்கள் சென்றன. நான் எஸ். எஸ். எல். ஸியை முடித்துவிட்டு மேல் படிப்புக்குத் திருச்சி சென்றேன். விடுமுறை நாட்களில் ஊருக்குச் சென்று வருவேன். அப்போதெல்லாம் ஊமைச்சி ஒரு புதிர் போலக் காணப்பட ஆரம்பித்தாள். என்னைக் கண்டதும் மலரும் அவளுடைய அழகிய முகத்தைக் காணும்போதெல்லாம் எனக்கு அவள் மீது ஓர் அனுதாப உணர்ச்சிதான் உண்டாகும் — இவ்வளவு அழகான பெண்ணுக்கு 'வாய்' இல்லையேயென்று.

நான்கு ஆண்டுகளில் என்னுடைய பட்டப் படிப்பும் முடிந்தது. அன்னக்கொடி........! — இப்போது என்னைக் கலக்கும் எழிலுருவம். அம்மாவுக்குக் கலியாணத்தைப் பற்றிக் கவலையளிக்கும் ஒரு கன்னி. அத்துடன் இப்போது அவள் எனக்கு மிக மிகத் தேவையான வேலைக்காரி. நானும் இப்போது ஒரு வேலைக்காரன்தான் — உள்ளூர்ப் பள்ளியில் ஓர் ஆசிரியர்.

பள்ளியிலிருந்து களைத்துப் போய் மாலையில் வீட்டுக்கு வருவேன். அப்போது இளமை ததும்பும் அழகிய முகம் ஆவலுடன் என்னை வரவேற்கும். அதைக் கண்டதும் என் களைப்பெல்லாம் உடனே பறந்து போகும். சூடான காப்பியும் குளிர்ந்த முகமும் என் அறையை நோக்கிப் பறந்து வரும். காப்பியுடன் அவளுடைய அழகையும் சேர்த்துப் பருகுவேன். அவளுடைய அழகிய உருவத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக என்னுடைய உள்ளத்தில் குடியேற்றுவேன். இந்த நிலையில்தான் ஒரு நாள் அந்தப் பொல்லாத பௌர்ணமி இரவும் வந்தது.

இனாம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கறுத்து, எப்பொழுதுமே கறுமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1-94. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம் பெற்ற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Jullundur City.

3

அன்று இரவு திரௌபதி அம்மன் கோவிலில் நடந்து கொண்டிருந்த பிரசங்கத்துக்கு எதிர் வீட்டுப் பாட்டியுடன் அம்மா சென்று விட்டார். ஆகவே வீட்டில் நாங்கள் இருவர் மட்டும்தான் அன்று இருந்தோம்.

அரையாண்டுத் தேர்வு ஆங்கில விடைத்தாள்கள் என் மேஜை மீது குவிந்து கிடந்தன. தப்பும் தவறுமாக எழுதப் பட்டிருக்கும் அந்த விடைத்தாள்களையெல்லாம் இன்னும் நான்கு நாட்களில் நான் திருத்தியாக வேண்டும். ஆகவே பென்சிலும் கையுமாக வேலையை ஆரம்பித்தேன். ஒரு பத்து விடைத்தாள்களைத் திருத்தியிருப்பேன். அப்போது திடீரென்று என் அறை முழுதும் 'கம்'மென்று மல்லிகைப் பூ மணம் வீசியது.

நான் திரும்பிப் பார்த்தேன். மல்லிகைப் பூ மணக்க ஊமை

மோகினி என்றுமில்லா அழகுடன் புன்னகை தவழ எனக்குப் பின்னல் நின்று கொண்டிருந்தாள். நான் உள்ளம் தடுமாற அவளையே பார்ப்பதையறிந்த அவள் வெட்கத்துடன் முகத்தைத் தாழ்த்திய படி என்னைச் சாப்பிட வரும்படி சைகை செய்தாள்.

நான் சாப்பிடும் போது அவள் ஏனோ காரணமில்லாமல் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் இன்பம் இழைந்தது. நாணமும் கலந்து குழைந்தது. அவள் அப்படிச் சிரித்தபோது அவள் வாய் மட்டும் சிரிக்கவில்லை; அவளுடைய தலையில் ஏறி அழகு பெற்ற மல்லிகைச் சரம் மட்டும் சிரிக்கவில்லை; அவளுடைய ஒவ்வொரு அங்கமும் என்னைப் பார்த்துச் சிரிப்பாய்ச் சிரித்தது.

சாப்பாடு முடிந்ததும் என் அறைக்கு வந்து ஒரு நாவலை எடுத்துப் புரட்டினேன். ஆனல் மனம் நாவலில் பதியாமல், நிலை கொள்ளாமல் தவித்தது; ஒவ்வொரு விநாடியும் ஊமையின் வரவை எதிர் பார்த்து எதிர் பார்த்து ஏமாந்தது. ஆனல் வெகு நேரம் அவள் என்னுடைய அறைக்கு வருவதற்கான அறிகுறியையே காணோம்.

கடைசியில் வளைக் கரம் ஒலித்தது. பால் டம்ளர் மேஜை மீது வைக்கப்படும் 'டக்'கென்ற ஒலியும் கேட்டது. அப்போது என் கள்ள மனம் கனவேகமாக அடித்துக் கொண்டது. உடம்பு முழுதும் ஒரே நடுக்கம்.

மெதுவாக எழுந்தேன். நடுங்கும் என் கரங்களால் ஊமைச்சியைப் பற்ற முயன்றேன். ஆனல் அவள் ஒரு வினோதமான 'பே' என்ற ஒலியை எழுப்பியபடி விலகி நின்ருள்.

தனிமை துணை புரிய, உறவு முறை ஊக்கமளிக்க, அழகும் இளமையும் போட்டியிட, மனத்தை மயங்க வைக்கும் மோகனமான

அந்த இரவின் சூழ் நிலையில் நாங்கள் இளமையின் துடிப்புக்கு அடி பணிந்திருப்போம் — அப்போது கோவிலிலிருந்து திரும்பிய என் அம்மாவின் குரல் கேட்காமலிருந்திருந்தால்!

4

இந்த நிகழ்ச்சி நடந்த மறுநாளே பெரிய பண்ணையாரின் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டால் எனக்கு வரக்கூடிய நன்மைகளையெல்லாம் எடுத்தோத ஆரம்பித்தார் அன்னை. தாயாரின் எண்ணத்துக்குப் பிடிவாதமாக நான் மறுத்து விட்டாலும் 'நான் ஊமைப் பெண்ணைத்தான் கலியாணம் செய்து

கொள்வேன்' என்று கூற எனக்குத் தைரியமில்லை. அந்தக் கோழைத்தனத்துக்கு 'வெட்கம்' என்று கூறி எனக்கு நானே சமாதானம் செய்து கொண்டேன்.

சென்ற வாரத்தில் ஒரு நாள் என்னைப் பெரிய பண்ணையாரின் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளச் செய்யும்படி ஊமைச்சியிடம் அம்மா வருத்தத்துடன் சொல்லிக் கொண்டிருந்ததை நான் கேட்க நேரிட்டது.

ஊமைச்சிக்கு அதை என்னிடம் வந்து சொல்ல எவ்வளவு கஷ்டமாக இருந்ததோ? — கடைசியில் அவள் என்னிடம் தயங்கித் தயங்கி வந்து 'அம்மாவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வது என்

கடமை' என்று ஊமை பாஷையில் எனக்கு உபதேசம் செய்தாள்.

நான் சிரித்துக் கொண்டே, 'அவளைக் கலியாணம் செய்து கொண்டால் உன்னை நான் என்ன செய்வதாம்?' என்றேன். அதற்கு அவள் 'நான் கலியாணமே செய்து கொள்ளப்போவதில்லை!' என்று தெரிவித்தாள். அப்போது அவளுடைய ஆசைகள் ஏமாற்றமெனும் நெருப்பில் எப்படிப் பொசுங்கிக்கொண்டிருந்தனவோ!

'தான் இருக்கும் வரை அம்மாவின் விருப்பத்துக்கு நான் இணங்க மாட்டேன்' என்ற எண்ணம் அன்னத்துக்குத் தோன்றியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு காரணமுமில்லாமல் இரண்டு நாட்களுக்குள் அவளுக்கு உடம்புக்கு வரக் காரணமேயில்லை!

5

"என்ன ராமு, விளக்கு அணைந்து விட்டதா? தீப்பெட்டி எங்கே?", என்று கேட்டபடியே விளக்குக்குப் பக்கத்திலிருந்த தீப்பெட்டியை எடுத்து விளக்கைப் பொருத்திய அம்மா, எங்கள் நிலையைக் கண்டு அப்படியே திடுக்கிட்டு விட்டார்.

"அம்மா! அன்னத்துக்கு என்னவோ தெரியவில்லையே!", என்று நான் குளறினேன்.

அம்மா பதறிப்போய் "ஏண்டா ராமு, நீ இப்படீன்னு சொல்லியிருந்தால் நான வேண்டாமென்று சொல்லியிருப்பேன்?", என்று கேட்டபடியே அன்னத்தின் உடம்பைத் தொட்டுப் பார்த்தார். உடனே "ஐயோ ராமு, அன்னம் மோசம் பண்ணி விட்டாளடா!" என்று அலறினர்.

அப்போது "நீ ஒரு கோழை! கோழை!" என்று கதறிக் கொண்டே என்னுடைய மனம் உள்ளுக்குள் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது! ★

பொம்மைப் பெண்

எம். சீனி

மாரியம்மன் திருவிழா முடிந்து ஊர் திரும்பி வரும் வழியில் பட்டிக் காட்டுக் கூட்டமொன்று பட்டணத்தில் இறங்கி விட்டது.

ஒரு துணிக் கடையின் முன் வந்ததும், சுடலியும் செல்லாயியும் அப்படியே நின்று விட்டனர். அடடா! கண்ணைக் கவரும் எத்தனை வர்ணத்துணிகள்? பட்டுப் பட்டாடைகள்? காற்றுப்போல சலசலக்கும் சருகு வாயில்கள்? இவைகளா அவர்களைக் கவர்ந்தவை? ஊஹூம்!

கடை வாசலில் ஒய்யாரமாய் நின்று கொண்டிருந்த அந்தப் பெண் அவர்களைக் கவர்ந்தாள்!

காறித்துப்பினுள் சுடலி: 'சேலை உடுக்கத் தெரியாதவ, வெட்கங் கெட்டவள்!'

கடையுள்ளிருந்து வெளிவந்த சில நவ நாரீக யுவதிகள் இதைக் கண்டு வேடிக்கையாகச் சிரித்து நின்றனர்.

சுடலியும் செல்லியும் சும்மா விடவில்லை.

'இப்படியா நிற்பா பொம்பளை அசிங்கமாய்...நாலுபேர் முன்னாலே? மானமில்லை: தட்டுவாணி?'—பார்த்து நின்ற நாரீமணிகளுக்குச் சிரிப்போடு கோபமும் வந்துவிட்டது.

'ஏய்....ஏய்....பட்டிக்காடு! அது பொம்பளையில்லை, பொம்மை. விளம்பரத்திற்கு வைச்சிருக்கு, தெரியுமா? கண்ணிருக்கா உங்களுக்கு: அறிவு கெட்டதுகளே?'

கடிந்து கொண்டனர் அலட்சியமாக.

"இல்லாமயென்ன? இருக்கிற கண்ணையும் மூடிக்கலாம் போலிருக்கு: இப்படியா நிற்பா பொம்பளை ஆம்பளைங்க போற வார வழியிலே?....சீ....சீ! ஒங்களுக்கு அந்தப் பொம்மைப் பொம்பளைங்களே தேவலையே!" என்றுள் ஒருத்தி ஆத்திரத்துடன்.

"பாவம் பட்டிக்காடு!" என்று வியாக்யானம் செய்து கொண்டே நாகரிகப் பெண்கள் மெல்ல நழுவினர். ★

HEWLETT'S
MIXTURE

ஹியூலெட்ஸ்

மிக்ஸர்

80 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஔஷதம் அஜீர்ணம், வயிற்றுக் கோளாறுகள், நெஞ் செரிச்சல், வாயு பொருமல் புளிப்பு, குடல் வியாதிகள் இவற்றிற்கு முக்கிய பரிகார மாக உலக முற்றிலும் பெயர் பெற்று விளங்கி வ்ருகிறது. அபினி சேர்த்தும், அல்லாம லும் 4 அவுன்ஸ், 10 அவுன்ஸ் அளவுகளில் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

C. J. HEWLETT & SON
(INDIA) PRIVATE LTD.,
MADRAS-3.

விரும்பியதை அடையுங்கள்

மாய மோதிரம்

நீங்கள் காதலித்தவர்கள், இந்த மாய மோதிரத்தை அணிந்தால், உங்கள் காலடியில் அவர்கள் விழுவார்கள். எவ்வளவு கல் மனத்தினர்களானாலும், தூரத்தில் இருந்தாலும், அவர்களது மனம் இளகி, உங்கள் கட்டளைப்படி நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவையைப் பெறலாம். நீங்கள் விரும்பியவர்களை மணந்து, பெரும் பொருளுடன், மக்கட் பேறையும் அடையலாம். வியாபாரத் துறையிலும், பரீட்சையிலும் வெற்றியை காணலாம். உங்கள் ராசி நல்ல திருப்பத்தை அடைந்து, அதிர்ஷ்ட முள்ளவர்களாக இருக்கலாம். திருப்திகரமான சுக வாழ்வையும் பெறலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1-94 பைசா. ஒரு பிரத்தியோகமானது 3-94 பைசா.

இது நல்ல தருணத்தில் தயாரித்தது. அற்புத பலனை தரும். திருப்தியடையவில்லை யெனில், பணம் வாபஸ் பெறலாம். ஒரு முறை பரீட்சை செய்தால் பலனை அடையலாம்.

Principal:

THE BENGAL MESMERISM HOUSE

(U. M.) NAKODAR, (P. B)

நிலவு பகலாகக் காய்ந்தது. இரவு முன்னேரந்தான்; எட்டு எட்டரை மணி இருக்கும். சிந்துமந்துறைப் பாலத்தை ஒட்டித் தாமிர பரணி ஆற்று மணலில், மாலைப் பொழுதில் கூடும் கூட்டம் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைத்து விட்டன. சிட்டாட வந்திருந்த கோஷ்டிகள், அரட்டையடிக்க வந்திருந்த கல்லூரி மாணவர் குழு, பலின் சடுகுடு விளையாடவந்திருந்த சிறுவர் குழாம், தாமிர பரணி ஊராய்ந்துநீரில் வரும்மூலிகைக் காற்றைச் சுவாசிக்க வந்திருந்த முதியோர் கும்பல், அதன் புனித நீரில் நீராடி மாலைக் கடன்களைக் கழிக்க வந்திருந்த ஆஸ்திகக் கூட்டம், சிந்துமந்துறைக்கசத்தில்போட்டிபோட்டுக் கொண்டு நீந்த வந்திருந்த இளவட்டங்களின் படை எல்லாம் ஒன்றென்ருகக் கலைத்து விட்டன. அங்கொன்றும் இங்கொன்றுமாக, கடை-கண்ணிகளில்வேலை செய்துவிட்டு விடு திரும்புகையில் ஆற்றில் நீராடி விட்டுச் செல்ல வந்து போய்க் கொண்டிருந்த சில சிப்பந்திகளைத் தவிர, துறைவட்டாரம் வெறிச்சோடி விட்டது.

ஆனல் அங்கேயிருந்த ஒரு மின்சார ராந்தல் கம்பத்தருகில் மணலில் உட்கார்ந்திருந்த இரண்டு உருவங்கள் மாத்திரம் இன்னும் எழுந்திருக்கவில்லை. அவர்களுக்குப் பொழுது போய்விட்டதோ, துறையில் கலகலப்பு அடங்கி விட்டதோ, எதுவும் தெரியாதது போல் தோன்றிற்று. ஆம்; அவர்களுக்குத் தெரியாதுதான். அவர்கள் அச்சமயம் இந்த உலகையே மறந்தவர்களாக இருந்தார்கள். மிக முக்கியமான விஷயம் ஒன்றைப் பற்றிய விவாதத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தால், அவர்களுக்குப் புற நிலையில் ஏற்பட்ட மாறுதல் தெரியவில்லை.

வாடா விளக்கு

அத்தியாயம் – 24

காதலெனும் காளான்

அவ்விருவரும் வேறு யாருமல்ல. ஒருவன் திருமலை; மற்றவள் காந்திமதி.

காந்திமதியா அவள்? அவளா இவ்வளவு மாறிப்போய்விட்டாள்? நாகரிகத்தின் வாடை தட்டாத கூண்டுப் பறவையைப் போலிருந்த அந்தக் கிராமியப் பெண்ணா, இன்று ஒரு கல்லூரி மங்கை மாதிரித் தோற்றமளிக்கிருள்?

ஆமாம்; அவளேதான். அந்தப் பட்டிக்காட்டுக் காந்திமதிதான் இன்று பட்டணக் கரைப் பாவையாக விளங்குகிறாள். எல்லாம் ஒரே ஒரு வருஷம் அவளை இப்படி அடியோடு மாற்றி விட்டிருந்தது.

'ஊரோடு ஒத்து வாழ்' என்பது பழமொழி. ஆனால் பெரும்பாலும், நாம் ஒத்து வாழ விசேஷ முயற்சி எதுவும் செய்யவேண்டி இருப்பதே யில்லை. ஊர்ப் பழக்க வழக்கங்கள் தாமாகவே நம்மைப் பற்றிக் கொண்டு விடுகின்றன. பச்சோந்தி இருக்கிறதல்லவா? சூழ்நிலைக்கொப்ப அதன் நிறம் தானாகமாறிக் கொண்டே இருக்குமாம். மரத்தின் தளிர்களிடையே இருந்தால் அதன் நிறம் பச்சையாகவும், கிளைகளில் இருந்தால் அக்கிளைகளின் நிறமாகவும், மலர்களிடையே சென்றால் மலர் நிறமாகவும் மாறி விடுமாம். மனிதர்களாகிய நாமும் ஒருவகையில் பச்சோந்திக்கு ஒப்பானவர்கள்தாம். சூழ்நிலைக்கொப்ப நம்முடைய போக்கும், அலங்காரங்களும் நாம் உணராமலேயே மாற்றம் பெற்று விடுகின்றன.

காந்திமதியும் அவ்வாறுதான் மாறியிருந்தாள். தென்காசியும், திருநெல்வேலியும் வடதுருவம், தென்துருவமல்ல. முப்பதுக்கும் குறைவான மைல் கற்களே அவற்றைப் பிரித்து வைத்திருந்தன. ஆனால் அந்த முப்பது மைல் தூரத்துக்குள் எத்தனை வித்தியாசம்! எவ்வளவு மாறுபாடு! அதிலும் நாகரிகத்தைப் பொறுத்தவரை, அன்றும் இன்றும், தென்காசிக்கும் திருநெல்வேலிக்கும் இடையே ஏணி வைத்தாலும் எட்ட முடியாது; அவ்வளவு வேறுபாடு இருந்தது. ஜனத்தொகை பெருகப் பெருக, ஊரும், ஊரின் நாகரிகமும் பெருகத்தான் பெருகுகின்றன. ஆகையால்தான் ஜனத்தொகை குறைந்த ஊர்கள் நாகரிகம் வளராத பட்டிக்காடுகளாகவும், ஜனத்தொகை கூடிய ஊர்கள் நாகரிகம் பெருத்த நகரங்களாகவும் விளங்குகின்றன. பட்டிக்காட்டு வாசி ஒருவன் நகரத்தில் குடியேறிவிட்டால், நகர நாகரிகம் தானாகவே அவனைச் சூழ்ந்து கொள்ளுகிறது. அதிலும் பெண்களை நாகரிகம் பற்றிக் கொள்ளும் வேகத்துக்கு இணையாகத் தொற்று நோய்கள்கூட ஒருவரைப் பற்றிக் கொள்ளுவதில்லை. காந்திமதி தென்காசியில் இருந்தவரை, தென்காசி நாகரிகத்துடன் விளங்கினாள். திருநெல்வேலிக்கு வந்ததும் அந்த நாகரிகம் அவளைச் சடுதியில் பற்றிக் கொண்டு விட்டது.

அவள் மாத்திரம் தென்காசியில் இருந்தது போல், விட்டை விட்டு வெளியே வராத பெண்ணாக இருந்திருந்தால், நாகரிகம் இவ்வளவு விரைவில் அவளைப் பற்றிக்கொண்டிருக்குமா என்பது சந்தேகமே. ஆனால் அவள் இப்போது நாகரிக மங்கையரிடையே தன் பொழுதில் பெரும் பங்கைத் தள்ளவேண்டியிருந்தது: படிக்க வேண்டியிருந்தது. ஆகையால், அவர்களைப்போல் தானும் இருக்க வேண்டும் என்ற ஆவலில் அவள் இப்படி ஒரே வருஷத்தில் அடியோடு மாறி விட்டாள்.

ஆம்; அவள் படித்து வந்த டிரெயினிங் பள்ளி பெண்களுக்கானது. அங்கே பல தரப்பட்ட பெண்கள் படித்துக் கொண்டிருந்தனரென்றாலும், கிறிஸ்தவப் பெண்கள்தாம் அதிகம். கிறிஸ்தவப் பெண்கள் இதர ஹிந்து அல்லது முஸ்லிம் பெண்களைப்போல், படி தாண்டாப் பாவைகளாகவோ, அடுப்பங்கரை அட்டைகளாகவோ இருக்கவில்லை. அவர்கள் ஆண்களோடு சரிசமமாகப் பழகினார்கள்; படித்தார்கள்; பணி செய்தார்கள். ஆகவே அவர்களோடு பழகி வந்த இதர மதப் பெண்களுக்கும், அவர்களைப் போல் சுதந்திரமாகவும், சுயேச்சையாகவும்இருக்கவேண்டுமென்ற ஆவல் எழுந்தது. இந்த ஆவல், பாளையங்கோட்டை டீச்சர்ஸ் டிரெயினிங் பள்ளியில் பயிற்சி பெற்று வந்த பெண்கள் எல்லோருக்குமே ஏற்பட்டிருந்ததென்றால், காந்திமதிக்கு மட்டும் ஏற்படாமல் இருக்குமா?

காந்திமதியின் தோற்றத்தில் மாறுதல் ஏற்பட்டிருந்தது என்பதில்லை. அவளுடைய மனசும் இப்பொழுது மாறி விட்டிருந்தது. தென்காசியில் இருந்தவரை அவள், தனது வாழ்க்கை சூனியம் நிறைந்த வாழ்க்கை, துயரளிக்கும் வாழ்க்கை, எவர்க்கும் எதற்கும் பயன்படாத வாழ்க்கை என்ற மனப்பாங்கு கொண்டிருந்தாள். அன்று ஓராண்டுக்கு முன்பு, நெல்லையப்பன் தன்னை இப்பள்ளியில் சேர்த்து விட்டுச் சென்றபொழுது, 'நாம் அடியோடு ஒழித்துக் கட்டப்பட்டு விட்டோம்; இனி இந்த உலகில் நாம் ஏகாங்கி' என்ற எண்ணந்தான் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது அவள் அப்படி எண்ணவில்லை. 'நாம் வாழப் பிறந்திருக்கிறோம்; வாழப் போகிறோம்; வாழும் வகையை நாமே வகுத்துக் கொள்ள வேண்டும்' என்ற எண்ணத்துடன் இருந்து வந்தாள். அதிலும் வாழ்க்கை என்றால், வெறுமே வயிற்றை நிரப்பிக் கொள்ளும் வாழ்க்கையல்ல; அவள் விரும்பியது வளம் நிறைந்த வாழ்க்கை. எந்த இன்பப் பூஞ்சோலையில் சுற்றித் திரியப் போகிறோம் என்று இளமைப் பிராயம் முதல் கனவு

கண்டு வந்தாளோ, அதே இன்பப் பூஞ்சோலையைத் தானே தேடி அடைந்து கொள்ளத்தான் அவள் துணிந்திருந்தாள்.

முன்பு இருந்த மனநிலையில்' தன்னைக் காத்தருளும் கடவுளாகத் தோற்றமளித்து வந்தான். ஆனால் இன்றைய மனநிலையில், அவன் ஓர் கையாலாகாத கபோதியாகவே அவளுக்குத் தோன்றினான். அவள் இன்னுங்கூட அவன் காக்காய் வலிப்புடையவன் என்றுதான் கருதியிருந்தாள். ஆனால் அதைப் பொருட்படுத்தாமல், தான் வாயிழந்து, வெட்கத்தைவிட்டு, 'என்னைக் கட்டிக்கொள்ளுங்கள்' என்று கேட்ட பிறகும், அவன் அதற்கு இணங்காமல் தட்டிக் கழித்து விட்டதைக் கண்டபோது அவள் உள்ளம் அவனுக்குக் 'கோழை' என்ற பட்டத்தைக் கூசாமல் சூட்டிற்று. அதோடு, அவனால் தன் வாழ்வு மலராது; அவன் மனம் மாறித் தன்னை மணந்து கொள்ளுவானென்றோ, அல்லது எப்பொழுதாவது தன்னை வேறு யாருக்காவது மணம் செய்து கொடுத்து வாழ்வை மலரச் செய்வானென்றோ நம்பிப் பயனில்லை என்ற முடிவுக்கும் வந்து விட்டது. ஆகையால், அவளுள்ளே கிளர்ந்த பருவத்துடிப்பு, வாலிபப் பிராயத்தின் ஏக்கம், இளமையின் கனவு எல்லாம் சேர்ந்து 'இனி உனக்கு நீயே வகை செய்து கொண்டால் தான் உண்டு' என்று அச்சுறுத்தின. சூழ்நிலையும் இவற்றுக்கெல்லாம் இடமளித்தது; வளர்த்தது. ஆம்; டிரெயினிங் பள்ளியில் முழுக்க முழுக்க இளமைக் கனவு காணும் அவளையொத்த பெண்கள்; எப்பொழுது பார்த்தாலும் இன்ப நினைவுகளைக் கிளறும் பேச்சு; நாகரிகமும், சுயேச்சையும் நிறைந்த நடை உடை பாவனைகள். இம்மாதிரிச் சூழ்நிலையில் இருந்தால், உணர்ச்சியற்ற உள்ளங்கூடக் கிளர்ந்து எழுந்து விடாதா? டிரெயினிங் பள்ளியில் சேர்ந்து ஓரிரு மாதங்கள் ஆவதற்குள்ளாகவே அந்தத் தீர்மானமான முடிவுக்கு வந்து விட்டாள் காந்திமதி! — பயிற்சி முடிக்க வேண்டியது; எங்கேயாவது ஓர் பள்ளியில் சேர்ந்துவிட வேண்டியது!

ஆனால் இந்த முடிவுக்கிடையிலும் அவளிடம் ஓர் சஞ்சலம் தோன்றாமல் இல்லை. தனது பழைய திருமணத் தோல்வி, அந்த அசந்தர்ப்பம், இந்த முயற்சியின் வெற்றிக்குக் குறுக்கிடுமோவென அவள் ஐயமுற்றாள். இருந்தாலும் அவள் மனதைத் தேற்றிக் கொண்டாள். 'நாம் முன்பு இருந்த கட்டுப்பட்டிக் காந்திமதியல்ல; நவ நாகரிக மங்கை. ஆகையால் நமது உள்ளம் இனிக் கட்டுப்பட்டிகளிடம் ஈடுபடாது; நாகரிக வாலிபர்களையே நாடும், நாகரிக வாலிபர்களென்றால், அந்த அர்த்தமற்ற அசந்தர்ப்பத்துக்காக உள்ளன்போடு காதலிக்கும் ஓர் மங்கையைப் புறக்கணித்துவிட மாட்டார்கள்!' இந்த ஆறுதல் அவள் ஊக்கத்தைப் பெருக்கப் பெரிதும் உதவிற்று. ஆனால்—

நெல்லையப்பன், காந்திமதியை டிரெயினிங் பள்ளியில் சேர்த்ததும் சந்திர விலாஸ் ஹோட்டலில் இருப்பு – சாப்பாடு வைத்துக் கொண்டிருந்த தம்பி திருமலையை அங்கிருந்து கிளப்பி, வண்ணார்ப் பேட்டையில் ஓர் தனி வீட்டை வாடகைக்கு அமர்த்தி, அவனும், காந்திமதியும் சேர்ந்து வசிக்க ஏற்பாடுகள் செய்துவிட்டுப் போயிருந்தான். வண்ணார்பேட்டையின் ஆரம்பத்தில், கண் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் இருந்தது, நெல்லையப்பன் அவர்களுக்காக அமர்த்தியிருந்த வீடு. வீட்டில். அவர்களுக்குச் சமையல் செய்து போடுவதற்காகத் தவசிப் பிள்ளை ஒருவர் இருந்தார். ஆகையால் காந்திமதிக்கும் திருமலைக்கும் சாப்பாட்டுக் கவலையோ, வேறு விதமான கவலைகளோ இருக்கவில்லை. காலையில் எழுந்ததும், இருவரும் பல் விளக்கி, காப்பி சாப்பிட்டு விட்டு, தாமிரபரணிக்குச் சென்று நீராடி வருவார்கள். உடை மாற்றிக்கொண்டு

சாப்பிடுவார்கள். பத்து மணி சுமாருக்கு, திருமலை மேற்கே ஹிந்து காலேஜை நோக்கிச் செல்வான். காந்திமதி கிழக்கே பாளையங்கோட்டைக்கு பஸ் ஏறுவாள். மாலையில் காந்திமதி நான்கு மணிக்கே வீடு திரும்பி விடுவாள். திருமலை காலேஜ் விட்டதும் 'புட்பால்' விளையாடிவிட்டு இருட்டும் போதுதான் வருவான். அவன் வந்த பிறகு இருவரும், காலாரச் சிறிது தூரம் நடந்துவிட்டு, தாமிரபரணி ஆற்று மணலில் வந்து அமர்ந்து பொழுது போக்கிவிட்டு, எட்டு, எட்டரை மணிக்குத்தான் வீடு திரும்புவார்கள்.

காந்திமதிக்குப் பகல் பொழுது, டிரெயினிங் பள்ளியில் உல்லாசமாகக் கழிந்து கொண்டிருந்தது. ஆனால் பள்ளியிலிருந்து திரும்பிய பிறகு, திருமலை வரும் வரையுள்ள இரண்டு மணி நேரத்தைப் போக்குவதுதான் மிகச் சங்கடமாக இருந்தது. அந்த வேளையில் தவசிப்பிள்ளையும் ஏதாவது சாக்கு வைத்துக்கொண்டு வெளியே போய்விடுவார். அவள் தனியாகத்தான் வீட்டில் இருக்க வேண்டியிருந்தது. அது பல ஜாதி மக்கள் கலந்து வசித்த தெரு. ஆகையால், காந்திமதிக்கு உற்ற தோழிகள் யாரும் அங்கே கிடைக்கவில்லை. அவள், வீட்டுக் கதவை உட்புறம் தாழிட்டுக்கொண்டு மொட்டை மாடிக்குப் போய் நின்று கொள்ளுவாள். அடுத்த கட்டடந்தான் கண் ஆஸ்பத்திரி. அங்கே வந்து போகிறவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பாள்; அல்லது ஆஸ்பத்திரியை அடுத்து இருந்த திருநெல்வேலி–பாளையங்கோட்டை ரஸ்தா. அங்கே நெறிபடும் வாகனங்களையும், ஜன சமுத்திரத்தையும் பார்த்துக்கொண்டு பொழுதைத் தள்ளுவாள். இது அவள் வீட்டுக்கு வந்த நாள் தொட்டு வழக்கமாகி விட்டிருந்தது.

அவ்வீட்டுக்கு வந்து இரண்டு–மூன்று மாதங்களான பிறகு ஒரு நாள், தான் நின்று கொண்டிருந்த மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவருக்கு நேர் கீழே யதேச்சையாகப் பார்வையைச் செலுத்தினாள் காந்திமதி. அங்கே, கண் ஆஸ்பத்திரியின் கம்பவுண்டர் அறை இருந்தது. அந்த அறைக்கு இவர்கள் வீட்டை நோக்கி ஓர் ஜன்னல் உண்டு. அந்த ஜன்னல் வழியே யாரோ ஒருவன் தன்னையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பதை அவள் கண்டாள். காந்திமதி அவனைப் பார்த்ததும், அவன் லேசாக முறுவலித்தான். ஆனால் அவள் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு அப்பால் போய் விட்டாள். அவன் பார்வையோ, அவன் முறுவலோ, அன்று அவள் உள்ளத்தில் எவ்விதச் சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. 'மருந்து வாங்க வந்தவன் யாரோ போலிருக்கிறது; அழகிய பெண் ஒருத்தி நிற்பதைப் பார்த்து விட்டுப் பல்லை இளித்திருக்கிறான். இந்த ஆண் வர்க்கமே இப்படித்தானே!' என்று அவள் சாதாரணமாக நினைத்துக் கொண்டாள்.

ஆனால் மறுநாள் மாலையிலும் அதே சம்பவம் மீண்டும் நிகழ்ந்தது. அதோடு அன்று காந்திமதி அந்த ஆள் யார் என்பதையும் தெரிந்து கொண்டாள். அவன் தன்னை விழுங்கி விடுவது போல் பார்த்து பல்லை இளித்துக் கொண்டிருந்த போது, அந்த அறைக்குள்ளே கண் டாக்டர் வந்தார். "என்ன கனகசபை? எங்கே வெளியே பார்த்துக் கொண்டிருக்கிறாய்? கூப்பிட்டது காதில் விழவில்லையா? ஆர்ஸினால் பாட்டிலை எடுத்துக் கொண்டு வா என்று அரை மணி நேரமாகக் கத்திக் கொண்டிருக்கிறேன்; நீ காதில் விழாதது போல் உட்கார்ந்து இருக்கிறாயே!" என்று கூறிக்கொண்டு ஜன்னலருகில் வந்த டாக்டர் எதிர் மாடியில் நின்று கொண்டிருந்த காந்திமதியைப் பார்த்து விட்டு, "ஓஹோ! அப்படியா விஷயம்? இந்தா அப்பா; கல்யாண ஆசை பிறந்து விட்டால், அப்பாவிடம் சொல்லி ஒழுங்காக ஏதாவது ஏற்பாடு செய்யச் சொல். இந்தக் காதல் நாடகமெல்லாம் வேண்டாம். உன் மாதிரி உயர் குடும்

பத்துப்பிள்ளைமார்களுக்கு இதெல்லாம் லாயக்கில்லை, கனகசபை. தவிர, இது நம் ஆஸ்பத்திரியின் பெயரையே கெடுத்து விடப் போகிறது!" என்றார்.

அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் காந்திமதிக்குத் தெளி

கொண்டாள். ஆனால், சிறிது நேரத்திற்குப் பிறகு இந்த வேகம் அடங்கி விட்டது. 'டாக்டர் தான் இன்று கண்டித்திருக்கிறாரே? நாளைக்கு மீண்டும் அவன் அப்படிச் செய்வானானால் திருமலையிடம் சொல்லிக் கொண்டால் போதும்' என்று அவள் இருந்து விட்டாள்.

வாகக் கேட்டது. முதலில் அவளுக்கு அந்தக் கம்பவுண்டர் மீது கட்டுக் கடங்காத கோபமும், வெறுப்பும் தான் ஏற்பட்டன. திருமலை வந்ததும் விஷயத்தைச் சொல்லி, கம்பவுண்டரை வெருட்டி விட்டு வரச் செய்ய வேண்டுமென்று அவள் நினைத்துக்

மறுநாள் இதற்காகவே, அவள் மாடிச் சுவரருகில் நின்று கம்பவுண்டர் அறை ஜன்னலையே பார்த்துக் கொண்டிருந்தாள். கம்பவுண்டர் கனகசபை உள்ளே தான் இருந்தான். ஆனால் அவன் இந்தப் பக்கம் தலையைத் திருப்பவேயில்லை. நேரம் இருட்டி விட்டது. கம்பவுண்

டர் அறையில் விளக்குக் கூட எரிய ஆரம்பித்தது. வீட்டில் விளக்கேற்ற வேண்டியதை அப்பால் செய்து கொள்ளலாமென்று காந்திமதி அங்கேயே நின்று அவன் மறைவாகவேனும் தன்னைக் கண்டுணோட்டம் விடுகிருனு என்பதைக் கவனித்தாள். ஹூம்! கனகசபை தன் வேலையில் கவனமாக இருந்தானேயன்றி, கடைசி வரை காந்திமதி இருந்த பக்கம் பார்க்கவேயில்லை.

அன்றிரவு, ஏனோ தெரியாது, காந்திமதிக்கு தூக்கமே வரவில்லை. எதையோ இழந்து விட்டது போன்றதொரு தோற்றம் அவள் உள்ளத்தில் சிறிது சிறிதாகப் படர ஆரம்பித்தது. எது அது? எதை நாம் இழந்து விட்டோம்? ஏன் நம் மனசு இவ்வாறு குறைப் படுகிறது? இவற்றைப் பற்றிய ஆலோசனையில் அவள் மூழ்கி விட்டாள்! அவளுடைய மனக்கண் முன், முன்னுள் மாலையில், டாக்டரிடமிருந்து 'டோஸ்' வாங்கிக் கொண்ட போது கனகசபை முகம் போன போக்கு வந்து நின்றது. அப்பொழுது அந்த முகத்தில் கலவரம், பயம், தவிப்பு முதலியன தோன்றியதை அவள் நினைத்துப் பார்த்ததும், திடீரென்று அவளுக்கு தன்னையறியாலேயே கம்பவுண்டரிடம் அனுதாபம் ஏற்பட்டது. அவன், டாக்டரின் ஒரே வார்த்தையில் அடங்கி ஒடுங்கித் திருந்தி விட்டது அவளுக்கு அவன் மீது ஏற்பட்டிருந்த வெறுப்பு அனைத்தையும் விரட்டி விட்டது. 'அவன் நல்லவன்; அதனுல் தான் இன்று நான் இருந்த பக்கம் திரும்பக் கூட இல்லை. கயவாளியாக இருந்திருந்தால், இந்த இரண்டு மணி நேரத்தில், திருட்டுத்தனமாகவாவது நான் வந்திருக்கிறேனு என்பதைப் பார்க்க முயன்றிருக்க மாட்டானு?' என்று எண்ணிக் கொண்டாள் அவள்.

இந்த எண்ணத்தை தொடர்ந்து, முன்னுள் அவள் தன்னை நோக்கி முறுவலித்த போது எப்படித் தோன்றினுள் என்பதை மனத்திரையில் கொண்டு வந்து பார்க்கும் ஆவல் அவளுக்கு ஏற்பட்டது. அப்படி எண்ணிப் பார்த்தபோது, அந்த முகத்தில் அவள் ஓர் கவர்ச்சியைக் கண்டாள். "அளகானவருதான்!" என்ற வார்த்தை கனவில் ஏற்படும் புலம்பலைப் போல் அவளிடமிருந்து சற்று உரக்கவே வெளி வந்து விட்டது.

காந்திமதி சட்டென படுக்கையிலிருந்து எழுந்து பார்த்தாள். தனது கட்டிலுக்கு அருகில் தரையில் ஓர் பாயை விரித்துப் படுத்துக் கொண்டிருந்த தவசிப் பிள்ளையோ அல்லது அடுத்தாற் போல் மற்றோர் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த திருமலையோ விழித்துக் கொண்டிருந்து தனது புலம்பலைக் கேட்டிருப்பார்களோ என்று அச்சத்துடன் நோக்கினுள். ஆனுல் அவர்கள் இருவரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருததைத் தான் விடி விளக்கின் வெளிச்சம் அவளுக்குக் காட்டிற்று.

தன்னை மறந்து இப்படிப் புலம்பி விட்டதை நினைத்த போது அவளுக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. 'எனக்கு என்ன வந்திரிச்சு இன்னைக்கு? ஏன் மனசு என்னத்தினுலே இன்னிக்கி இப்பிடியெல்லாம் போய்க்கிட்டிருக்குது?' என்று அவள் தனது பொங்கும் உள்ளத்தை அமுக்க முயன்ருள். ஆனுல் 'ஸ்பிரிங்'கை அமுக்க அமுக்க அது இன்னும் வேகமாகத் துள்ளுமே, அதுபோல் அவளுடைய உள்ளம் இன்னும் அதிகமாக கம்பவுண்டரைப் பற்றியே நினைக்கலாயிற்று. அவளுடைய நினைவுக்கு முன்னுள் டாக்டர் அவனைக் கடிந்து கொண்ட போது வெளியான சில தகவல்கள் உரமூட்டின. கனகசபை கல்யாணமாகாதவன்! அவன் தங்கள் இனம்! நல்ல குடும்பத்துப் பிள்ளை! இவற்ருேடு அவன் ஒரு கண்ணியமான உத்தியோகத்திலும் இருக்கிருன் என்ற நினைவும் கூடிய போது......? கதையை வளர்த்துவானேன்? காந்திமதிக்குக் கனகசபையின் மீது காதல் ஏற்பட்டு விட்டது!

பெண்ணுக்கு ஒருவன் மீது காதல் ஏற்பட்டு விட்டால், பிறகு கேட்கவா வேண்டும்? அதிலும் அதற்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த காந்திமதிக்கு ஏற்பட்டு விட்டதென்றால், அதன் வேகத்தைச் சொற்களில் அடக்க முடியுமா? எப்படித்தான் அவள் சந்தித்தாளோ? எப்படித் தன் காதலை வெளியிட்டாளோ? தெரியாது. அடுத்த ஒரு வாரத்துக்குள்ளாகக் கனகசபையின் பெற்றோர் காந்திமதியைப் பெண் கேட்கத் தென் காசிக்குப் புறப்பட்டுச் சென்று விட்டனர்.

காதல் பிறந்த வேகத்திலும், அதைக் கல்யாணத்தின் மூலம் உறுதிப்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள் வேகத்திலும் காரியமும் முடிந்திருந்தால், இன்று இந்த எட்டரை மணிப் பொழுதில் காந்திமதி சிந்துமந்துறைப் பாலத்தடியில் திருமலையோடு அமர்ந்திருக்க மாட்டாள். ஜங்ஷன், மீனாட்சிபுரத்திலிருக்கும் கனகசபையின் வீட்டில், அவள் வருகையை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டு இருந்திருப்பாள்.

ஆனால், அந்தப் பாக்கியத்தை அவளுக்குக்கிட்டவிடாமல் செய்து விட்டது விதி. ஆமாம்; நெல்லையப்பனைச் சந்தித்து. காந்திமதியைப் பெண் கேட்க புறப்பட்டுச் சென்ற கனகசபையின் பெற்றோரை, அவனைச் சந்திக்காமலே திரும்பச் செய்து விட்டது, அவளுடைய முந்தைய கல்யாண முயற்சி அடைந்த கதியைப் பற்றி அவர்கள் அறிந்து கொண்ட தகவல்.

காந்திமதி நாகரீக மக்களை எது பாதியாது என்று கருதினளோ, அதுவே அவர்களைப் பாதித்து விட்டது. ஆமாம்; கனகசபையின் தந்தை ஒரு பீ.ஏ.,பீ.எல்., வக்கிலாக இருந்தும், அவரைக் கூட அந்தச் செய்தி அரளச் செய்து விட்டதென்றால் அது மாத்திரமா? பெற்றோரை விட அதிகமாகப் பீதியடைந்து விட்டான் போலிருக்கிறது அவளைக் காதலித்த கனகசபை. இல்லாவிட்டால், அவன் ஏன் கம்பவுண்டர் வேலையைக் கூட ராஜீநாமாச் செய்து விட்டு, காந்திமதி இருந்த பக்கமே தலை வைத்துப் படுக்கப் பயந்தவன் போல் தலை மறைந்து விடுகிறன்?

காந்திமதியின் காதல் மீண்டும் ஒரு தடவை தோல்வியைக் கண்டது.

ஆனல் முன்பு தனது காதல் தோல்வியுற்றதும் அவள் மனமுடைந்து போனளே, அதுபோல் இப்பொழுது மனமுடைந்து போகவில்லை. இப்பொழுது அவளிடம் வேகம் இன்னும் அதிகமாகத்தான் ஆயிற்று. தன்னை இரு தடவை தோல்வியுறச் செய்த விதிக்கு ஓர் சவால் விடுத்து, அடுத்த தடவை தன் காதலை வெற்றி பெறச் செய்ய வேண்டும். எப்படியாவது, யாருக்காவது ஒரே ஒரு நாளேனும், உரிமையுள்ள, நேர்மையான, முறையான மனைவியாக வாழ்ந்து விதியின் முகத்தில் கரியைப் பூச வேண்டும் என்று அவள் துணிந்து விட்டாள்.

துணிந்து விட்டாள் எளிதாக; ஆனல் அது நிறைவேற வேண்டுமே? படித்து நாகரிகம் தெரிந்த மனிதர்கள் தன் மீது சுமத்தப் பட்டிருந்த அர்த்தமற்ற குறைபாட்டைச் சட்டை செய்ய மாட்டார்கள் என்று அவள் கருதினள். ஆனல் இம்மாதிரி விஷயத்தில், நாகரிக மக்களும், நாகரிகமற்ற பட்டிக்காட்டு மக்களுக்கு ஒப்பானவர்கள் தாம் என்பதைக் கனகசபையும் அவள் பெற்றோரும் நிரூபித்து விட்டனர். ஆகையால், இனி எப்படி அவள் தன் சவாலை நிறைவேற்றிக் கொள்ளப் போகிறள்?

இந்தப் பிரச்னைக்கு, காந்திமதியுடன் படித்து வந்த கிறிஸ்தவ மாணவி ஒருத்தி வழி காட்டினள். "பேசாமல் ஞானஸ்னனம் செய்து எங்கள் மதத்தில் சேர்ந்து விடு. முற்போக்குக் கொள்கைகளை உடைய எங்கள் மதத்தவர்களுக்கு இம்மாதிரி அசட்டு நம்பிக்கைகள் அறவே கிடையாது." என்று அவள் ஓதினள்.

> உயிர்த் தோழனால் ஒருவன் அடையும் ஆறுதலை, தாய், மனைவி, உடன்பிறந்தார், மக்கள் ஆகிய யாராலும் அடைவதில்லை.
>
> —பஞ்சதந்திரம்.

காந்திமதி மதம் மாற நிச்சயித்து விட்டாள்.

'இந்த வியவஸ்தையற்ற இந்து சமயத்தில், வாழ வகையின்றித் தத்தளிப்பதை விட, மதம் மாறி வாழ வகை செய்து கொள்ளுவது எவ்வளவோ மேல்' என்று அவள் தீர்மானித்து விட்டாள். அவளுடைய பயிற்சி முடிய இன்னும் சில மாதங்களே இருந்தன. அதற்கிடையில் இந்தக் குழப்பத்தைக் கிளப்ப வேண்டாம்; பயிற்சியை முடித்துக் கொண்டதும், யார் தடுத்தாலும் நிற்காமல் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி, தனக்கு விமோசனம் தேடிக்கொள்ளுவது என்று திட்டமிட்டு வைத்திருந்தாள்.

ஆனால் சர்வ வல்லபமுள்ள விதியானது இடையே வேறொரு விளையாட்டு விளையாடி விட்டது. மனிதர்களை, அவர்கள் போக்குப்படி செல்ல விட்டு விடுமா அது?

ஒருநாள் திருமலை படித்து வந்த ஹிந்து காலேஜில், ஓய்வு வேளையில் அவன் வகுப்பு மாணவர்கள் 'ரெக்ரியேஷன்' அறையில் அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய பேச்சு எங்கு எங்கெல்லாமோ சுற்றி விட்டு, நம்நாட்டின் பல்வேறு மதங்களைப் பற்றிய விஷயத்துக்கு வந்தது. அங்கே இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் ஆகிய மூன்று மதத்தவரும் இருந்தனர். இந்து மதந்தான் மற்றெல்லா மதங்களையும் விடப் புராதனமானது என்று அங்கிருந்த இந்து மாணவர்கள் கூறினர். ''இருக்கலாம்; அது புராதன மதமாக இருப்பதால்தான் காலத்துக்கு ஒவ்வாத புராதனக் கொள்கைகள் பல அதில் இருக்கின்றன'' என்றனர் இதர மத மாணவர்கள். ''அவை பிற மதத்தவருக்குப் புராதனமான கொள்கைகளாகப் பட்டாலும், எங்களைப் பொருத்தவரை நன்மையே பயக்கின்றன'' என்றான் இந்து மாணவன் இன்னொருவன். ''உங்களுக்கு, அதாவது ஆண்களுக்கு அவை நன்மை பயக்கலாம்; ஆனால் பெண்களுக்கு உங்கள் மதத்தின் கொள்கைகளில் பல எவ்வளவு கொடுமைகளை இழைக்கின்றன, தெரியுமா?'' என்று கேட்டான் ரிச்சர்டு என்ற ஓர் கிறிஸ்தவ மாணவன். ''ஆமாம்; பெண்கள் கணவனை இழந்து விட்டால் மறுமணம் செய்துகொள்ளக் கூடாது; ஆண்களானால், தாரமிருக்கத் தாரம் கொண்டாலும் தவறில்லை என்ற கொள்கையை அநுசரிக்கும் மதந்தானே உங்கள் இந்து மதம்!'' என்றான் பீர் முகமது என்ற முஸ்லிம் மாணவன். ''விதவா விவாகம் தடை செய்யப்பட்டிருப்பது ஒரு புறம் இருக்கட்டும்; இந்த அநியாயத்தைக் கேளுங்கள்'' என்று ஆரம்பித்தான் ஆல்பர்ட் என்ற மாணவன்: ''என் சகோதரி பாளையங்கோட்டை டீச்சர்ஸ் டிரெயினிங் பள்ளியில் படிக்கிறாள். அவளுடன் உள்ள இந்துப் பெண்ணின் பரிதாபக் கதையைக் கேளுங்கள். அந்தப் பெண்ணுக்குச் சிலவருஷங்களுக்கு முன்பு கல்யாணம் நிச்சயிக்கப் பட்டதாம். கல்யாணத்துக்கு முன்னாள் ஆற்றிலோ, குளத்திலோ நீந்தப் போய் மரணமடைந்து விட்டானாம் நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை. இப்படி அசம்பாவிதமாக இறந்து விட்ட காரணத்துக்காக, அந்தப் பெண்ணை வேறு யாரும் மணந்து கொள்ள முன் வரமாட்டேன் என்கிறார்களாம். எப்படியிருக்கின்றன, இந்து மதக்காரர்கள் உள்ளத்தில் ஊறியிருக்கும் பைத்தியக்காரக் கொள்கைகள்? பாவம்; அந்தப் பெண் என் தங்கையிடம் வந்து கண்ணீர் விட்டுக் கதறியிருக்கிறாள்.

'நீ பேசாமல் எங்கள் மதத்தில் சேர்ந்து விடு. உன் குணத்துக்கும், அழகுக்கும் ஆயிரம் பேர் உன்னை மணந்து கொள்ள அடி பிடி போட்டுக் கொண்டு வருவார்கள்' என்று என் சகோதரி கூறியிருக்கிறாள். அந்தப் பெண்ணும் அதற்கு இசைந்திருக்கிறாள். இம்மாதிரி அர்த்தமற்ற பழக்க வழக்கங்கள் நிறைந்த.......''

திருமலையால் அவள் மேலே பேசியதைக் கேட்க முடியவில்லை. ஆல்பர்ட் குறிப்பிட்ட பெண் யார் என்பதை உணர்ந்து கொள்ள அவனுக்கு அதிக நேரமாகவில்லை. ''காந்திமதியா மதம் மாறத் தீர்மானித்து விட்டாள்?''—அதிர்ச்சி நிறைந்த இந்தக் கேள்விக்கு அவனுடைய உள் மனம் உடனே விடையும் தந்தது: ''மதம் மாறாவிட்டால் அவளுக்கு விமோசனம் ஏது, தம்பீ...?''

''ஆமாம்; விமோசனம் இல்லைதான்!'' என்று திருமலை ஒப்புக் கொள்ள வேண்டியே இருந்தது. ஏனென்றால் ஆல்பர்ட் கூறியது முற்றிலும் உண்மை என்பது அவனுக்கு ஏற்கனவே நிரூபணம் ஆகியிருந்தது. திடீரென்று ஒரு நாள் தன் அண்ணன் காந்திமதியுடன் திருநெல்வேலிக்கு வந்து, அவளைப் பாளையங்கோட்டை டீச்சர்ஸ் டிரெயினிங் ஸ்கூலில் சேர்க்கப் போவதாக அறிவித்ததும் திருமலை திகைப்படைந்தது மாத்திரமல்ல; திடுக்கிட்டுப் போனான். அண்ணனைத் தனியே கூட்டிச் சென்று, ''ஏன் அண்ணே? எதுக்காக நம்ம குடும்பத்திலே இல்லாத வளமையா இப்படிச் செய்யப் போகுதே?'' என்று அவன் கேட்டான்.

''ஆமாம், திருமலை; நானும் வருசக் கணக்கா இவளை வச்சுக்கிட்டிருந்து பார்த்துட்டேன். அந்தப் பாவூர் மாப்பிள்ளை செல்லானாலும் செல்லானாக; அது சாக்கா ஒரு பய கூட இவளைக் கட்டிக்கிட வரமாட்டேன் என்கிறானே!'' என்ற பதில் வந்தது. மறுகணம், எதையோ யோசிப்பவன் போன்று அப்படியே நின்று விட்டான் நெல்லையப்பன்!

(தொடரும்)

எங்கும் புகழ்பெற்றது!

விஜயகர்

மணிலா சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி

18. அண்ணா பிள்ளை தெரு, சென்னை. 1.

தயாரிப்பு:
பூவை எஸ். ஆறுமுகம்

சந்தித்தோம்;

ஒப்பனைக்குச் சொல்வது என்னுடைய பழக்கம் இல்லை. நான் எழுத வேண்டுமென்று பல நாட்களாகத் திட்டமிட்டிருந்தேன். சந்தர்ப்பத்துக்குக் காத்திருந்தேன்; மனம் திறந்து பேசினேன். இதயம் திறந்து என் பேனாவுக்குப் போற்றுதல் தெரிவித்திருக்கிறார்கள் பலர். இரண்டொருவர், பேட்டிக் கட்டுரைகளில் ஆசிரியர்களின் குறைகளையும் குறிப்பிடவேண்டும் என்று மறு முறையும் 'அடம்' பிடித்திருக்கிறார்கள். என்வரை இனி இது பழங் கதை.

புதுக்கதை சொல்லப் போகிறேன். எழுத்தாளன் ஒரு விசித்திரப் பிறவி. இருவகை உலகங்களிலே சஞ்சரிக்கக் கடமைப்பட்டவன் அவன். வயிற்றுப் பிழைப்பு, பொழுது போக்கு ஆகிய இரண்டு வெவ்வேறு புள்ளிகளில் அவன் இயங்க வேண்டியவனாகின்றான். என்னைப் போன்றவர்களுக்கு இரு லோகங்களும் ஒன்று தான் — ஏன், ஏதோ ஈரேழு பதினாலு லோகங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்களே, அவை கூட ஒன்றுதான்!

நண்பர் ஆர்வி 'கண்ணன்' ஆசிரியர். அன்பர் அழ. வள்ளியப்பா நாணயம் புழங்கும் இடத்தை விட்டு, தற்சமயம் தென்மொழிப் புத்தக நிறுவனத்தில் (Southern Languages Book Trust) பணி புரிகிறார்.

நண்பர் எல். ராமநாதனை — உங்களுக்குப் புரியாது — திரு தமிழ்வாணன் அவர்களை முன்னைய ஆண்டில் சந்தித்துக் கேள்வி கேட்டுப் பதில் வாங்கிக் கட்டுரை ஒன்று எழுதி யிருந்தேன். பாபுராவ் படேலுடைய துணிச்சலைப் போற்றி விட்டு, பிறகு 'கல்கண்டு' ஆசிரியரையும் தொட்டுக் காட்டியிருந்தேன். 'அவரது பதில் பலருக்குப் பிடிக்கும்; சிலருக்குப் பிடிக்காது':—நான் எழுதிய வாசகம் இதுவேதான்.

அவருடைய பெரும்பாலான பதில்களை அனுபவித்த, ஒப்புக்கொண்ட நான் அந்தப் பலரிலிருந்து விலகும்படியாகி, சிலருள் அங்கம் பெறவேண்டியவனாக ஆகி விட்டேன். இதற்குப் பொறுப்பு, ஊஹூம், நான் அல்ல!—நண்பர்.

'கல்கி'யின் 'பெரிய' நாவல்களைப்பற்றி அண்மையில் இவர் அளித்திருந்த பதில் எழுத்தாளர் பலரின் பொறுமையை அழித்தது. பலர் சிறினார்கள். தலையணைக்குப் பதிலாக உபயோகப்படுத்தப் பயன்படும் என்னும் பொருள் தொனிக்கக் குறித்திருந்தார் அவர். இங்கு சொல்லிய பலருடனும் நான் சேர்த்தி.

'பேராசிரியர் கல்கி' எங்கே? 'நாம்' எங்கே...?

'கல்கண்டு' உள்ளடக்கிக் காட்டும் 'என்னைக் கேளுங்கள்'



ஆர்வி

சிந்தித்தோம்!

ஆர். வெங்கட்ராமன்
அழ. வள்ளியப்பா

பகுதியின் சில கேள்வி – பதில்கள், அச்சாகியிருக்கும் சில கேலிச் சித்திரங்கள் பலரது மனங்களைப் புண்படுத்துகின்றன. ‘இப்பகுதியில் நகைச்சுவைக்காகச் சொல்லப்பட்டிருக்கும் பதில்கள் எவருடைய மனதையும் புண்படுத்துவதற்கோ, கட்சிகளின் கொள்கைகளைக் கேலிசெய்வதற்கோ சொல்லப்பட்டவை அல்ல; நகைச்சுவைக்காகவே சொல்லப்பட்டவை’ என்ற இக் குறிப்பிற்காக வேண்டுமானால் சிரிக்கலாம்.

மேலைநாட்டுக்கவி வேர்ட்ஸ்வர்த் என்றுதான் நினைவு–குழந்தை, மனிதனின் சிறு பிம்பம் என்கிறார். குழந்தைகள் உலகம் மறக்கமுடியாத பத்திரிகாசிரியர்கள் குறைவு. ‘கண்ணன்’ ஆசிரியர், முன்னாள் ‘பூஞ்சோலை’ ஆசிரியர், இப்போதைய ‘கல்கண்டு’ ஆசிரியர் ஆகியோர்தாம் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். ‘அணில்’ அறிமுகப்படுத்திய திரு தமிழ்வாணன் தான் இன்றைக்கு அதிக விற்பனையாகமுள்ள மாணவர் பத்திரிகைக்கு, அல்ல, இளைஞர் பத்திரிகைக்கு ஆசிரியராக யிருக்கிறார்.



அழ. வள்ளியப்பா

நண்பர் த. வா. எழுதியிருக்கின்ற – எழுதிக் கொண்டிருக்கிற அறிவு நூல்களின் திசைநோக்கி வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் குழந்தைகள், மாணவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் எல்லோரும்.

‘இனிய தமிழ்ப்பாட்டால் உள்ளத்தை அள்ளும் கவித்திறம் வாய்ந்தவர் திரு வள்ளியப்பா. பிஞ்சு மனத்திற்கு உகந்த செஞ்சொற் கவிஞர் அவர்.’

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் அணிந்துரையின் சிறு பகுதி இது.

எளிய நடை, இனிய சொற்கள், ஆழ்ந்த உயர்ந்த கருத்துக்கள் — மலரும் உள்ளத்துக்குத் தேவைப்பட்ட இப்பாடல்கள்குழந்தைகளுக்குரிய கவிஞருடையவை. ‘கன்னல், செந்தேன், முக்கனிகள் கலந்த இனியசுவையைக்காணலாம்’ என்கிறார் கவிமணி. மத்திய, மாகாண ஆட்சியாளர்களின் பரிசுகளைப் பெற்ற கவிதைத் தொகுப்பு நூல் ‘மலரும் உள்ளம்.’ ‘நல்ல நண்பர்கள்’ என்ற கதைப் புத்தகம் சென்னை ஆட்சியினரின் ஐந்நூறு ரூபாய்ப் பரிசைப் பெற்றது.

தம்முடைய பதின்மூன்றாவது வயதிலேயே கவிபுனைய ஆரம்பித்தார்; குழந்தைப் புத்தகக் காட்சி, குழந்தைகள் நாடகவிழா போன்ற நிகழ்ச்சிகளுக்கு இவரே காரணம்.

‘குழந்தைகள் இன்பமே எனது இன்பம். அவர்களுக்குத் தொண்டு செய்வதே என் முக்கிய குறிக்கோள்.’— ஆசிரியரின் முன்னுரை தந்த பின்னுரை வரிகள்.

'பர்மாரமணி' திருவள்ளியப்பாவின் உயர்ந்த கதைநூல். உலகப் பெரியார்களைச் சின்னஞ்சிறுர்களாக ஆக்கி அவர்களுடைய வாழ்வில் நடந்த சம்பவங்களையும் கவிஞர் எழுதியிருக்கிருர். நண்பர் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றிய 'பூஞ்சோலை' இதழ்கள் குழந்தைகட்கு நல்ல பணி புரிந்துள்ளன. ஆனால் தமிழ் மண் சோலையைக் காடுமாற்றி விட்டது.

'ஆர்வி' என்ற இரண்டு எழுத்துக்கள் 'குங்குமச் சிமிழ்' என்னும் கதைத் தொகுதிக்காக சென்னை அரசினரின் பரிசைப் பெற்றன. பெரியவர்கள் நூல் அது. இந்து — குந்தளம் சகோதரிகளின் கதை இது. இவர் எழுதிய நவினங்கள் பல. 'அணையா விளக்கு' எனக்குப் பிடித்திருந்தது.

'உயர் வரிசையில் நிற்கிற நாவல் அணையா விளக்கு' என்கிருர், மதிப்பிற்குகந்த என் நண்பர் தி. ஜானகிராமன் அவர்கள்.

குழந்தைகளின் பத்திரிகை ஆசிரியரை இனிக் கவனிக்கவேண்டும். 'ஜனு' என்ற மாற்றுப் பெயரில் 'சந்திரகிரிக் கோட்டை'யைச் சமைத்திருக்கிருர் இவர். வீரத்தையும் தீரத்தையும் வளர்த்த கோட்டை இது. சரித்திரத் தொடர்புக்குள்தான் கோட்டையின் கேந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. படிக்க இனிக்கிறது. ஏனென்று கேட்க மாட்டீர்களா? ஒரே முகூர்த்தத்திலே இந்துமதி — அமலாதித்தன், குந்தவி — விமலாதித்தன் ஜோடிகளுக்குத் திருமணம் நடைபெறுகிறது! 'அசட்டுப் பிச்சு' — பாத்திரங்கள் நம்மைச் சிரிக்க வைக்கும். 'ஜம்பு', திகைப்பும் வியப்பும் நல்கும் நெடுங்கதை. மிருகங்கள் கூட எட்டி எட்டிப் பார்க்கின்றனவே!

திரு ஆர்வியின் சில பதில்கள் மாறுபட்ட அபிப்பிராயங்களை எழச் செய்யவல்லன. வள்ளியப்பாவும் ஓரிரு இடங்களில் துணிந்து சொல்லியிருக்கிருர்!

இன்றுள்ள பிரபலமான எழுத்தாளர்கள் பலர் பாப்பாக்களுக்குக் கதை கவிதைகள் தயாரிக்காமல் இல்லை. பழைய சரித்திரமும் இம் முடிவில்தான் நிற்கிறது. ஆனால், குழந்தைகள் என்ற அளவில் அவர்கட்குரிய வயது அளவுக்கு ஏற்றவாறு உபயோகமாக எழுதும் இவ் விருவருக்கும் குழந்தைகள் உலகம் நன்றி சொல்லவேண்டும்.

பூவை

சில பத்திரிகைளில் வெளியாகும் கேள்வி - பதில்கள் வாசகர்களுக்குப் படிக்க ஆர்வத்தை உண்டாக்குகின்றன. ஆனால் ஒன்றிரண்டு கேள்விகள் சொந்த விருப்பு—வெறுப்பின் காரணமாக அமைக்கப்படுகின்றனவே?

ஆர்வி

பத்திரிகைகளில் உள்ள இந்தப் பகுதிக்கு வரும் கேள்விகளும் சரி, பதில்களும் சரி, வெறும் அக்கப்போர் விஷயங்கள். அவை படிக்க ஆர்வத்தை உண்டாக்கு கின்றன என்பது சரியானது அல்ல என்பதே என் கருத்து. பெரும்பாலான வாசகர்கள் தங்கள் பெயர்கள் பத்திரிகைகளில் வெளிவரும் என்று இச்சைப்பட்டே கேள்வி கேட்கிருர்கள். அதைப்போலவே பதில் தருகிறவர்களும் தங்கள் சூரத்தனத்துக்கும் சொந்தவிருப்பு வெறுப்புக்களுக்கும் இடம் தரக்கூடிய கேள்விகளாகவே எதிர்பார்க்கிருர்கள். வாசகர்களின் பலவினத்தைப் பயன்படுத்தி. குறுக்குவழியில் புகழ்தேடப் பார்க்கிருர்கள் பதில்தருகின்ற ஆசிரியர்கள். தங்களை நாயாகவும் கழுதையாகவும் பன்றியாகவும் படம் போட்டுக்கொண்டு கோணங்கித்தனம் செய்வது சர்க்கஸில் இடைவேளைகளில் நடத்தும் கோமாளிக் கூத்துப்போன்றது. களைப்பை மாற்றுவதற்காக நடத்தும் அந்தக் கோமாளித்தனம் உண்மை ஹாஸ்யமும் அல்ல; அரிய வித்தையும் ஆகாது. சர்க்கஸ் வித்தைபோல் சேஷ்டை செய்து காசாக்கும் முயற்சி. சொந்த விருப்பு வெறுப்

பின் காரணமாக எழும் கேள்விகளும் சரி, தருகின்ற பதில்களும் சரி, வாயிலே விரலை விட்டுக் கொண்டு எடுக்கிற வாந்தியைப் போன்றது. உடனே துடைக்காவிட்டால் ஈக்கள் மொய்க்கும். நாற்றம் குடலைப் புரட்டும். வேறு பயன் கிடையாது.

அழ. வள்ளியப்பா

பணம் கொடுத்துப் பத்திரிகை வாங்கும் வாசகரிடம், தமது சொந்த விருப்பு – வெறுப்பை வெளியிடுவது ஆசிரியருக்கு அழகல்ல; மேலும், விருப்பு – வெறுப்பின் காரணமாக அமையும் பதில்களில் உண்மை ஒளியைக் காண முடியாது. சில பத்திரிகைகளில், 'இந்தப் பகுதியில் கூறப்படும் பதில்களெல்லாம் ஹாஸ்ய நோக்குடனே கூறப்படுகின்றன; எவர் மனத்தையும் புண்படுத்துவதற்காக அல்ல' என்று குறிப்பிட்டுவிட்டு, தமக்கு வேண்டாதவர்களின் மனத்தைப் புண்படுத்தும் முறையிலே பதில்கள் அளிக்கப்படுகின்றன. இன்னும் சில பத்திரிகைகளில், தங்களுக்கு வேண்டாதவர்களைத் தாக்குவதற்காக, ஆசிரியர்களே கேள்விகளையும் சிருஷ்டித்துக் கொள்ளுகிறார்களோ என்று கூட எண்ண இடம் ஏற்படுகிறது. சிரிப்பூட்டவேண்டும் என்ற நோக்கத்தில் உண்மையைப் பலியிட்டு விடக்கூடாது.

1945-க்குப் பிறகு, தமிழில் சிறுகதை அல்லது நாவல் வளர்ச்சியடையவில்லையென்று ஒரு சாரார் கூறுகிறார்கள். இந்தக் கருத்து சரியா?

ஆர்வி

இந்தக் கருத்து சரியல்ல; இதை நான் தவறான கருத்து என்று தகுந்த ஆதாரத்துடன் கூறமுடியும். ஒரு சிலர் — அதாவது இரண்டு மூன்று பேர் இப்படியே திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் வருகின்றார்கள். இதைக்கொண்டு, இப்படி நம்மிடையே ஒரு சாரார் கருதுவதாக நாம் கவலையே படவேண்டாம். 1945-க்கு முன்பு சிறுகதை, நாவல் இவற்றிற்கு வளப்பமான காலம் என்றும் பிறகு தேக்கமான காலம் என்றும் கூறுவது வெறும் பிடிவாதமான கூற்று. அதற்கு முன்பு எழுதியவர்கள் இன்னும் இருக்கிறார்கள், இரண்டுபேர் தவிர. மற்றவர்கள் இப்பொழுது சரியாக எழுதவில்லை என்று மறைமுகமாகச் சொல்வதற்கும், புதிதாக எழுதுகிறவர்களை மறைமுகமாக மட்டம் தட்டுவதற்கும் இந்தமாதிரிப் பேச்சு பயன்படுகிறது. அப்பொழுது பத்திரிகைகளும் குறைவு. அதனால் வளப்பமான கதைகள் மலிந்திருந்ததாகத் தோன்றுகிறது. இப்பொழுது பத்திரிகைகள் அதிகம்; எழுதுகிறவர்களும் அதிகம். இவ்வளவு பரவலாகிவிட்ட பிறகு உண்மையான சிறந்தகதைகள் அதிகமாக இல்லாததுபோல் தோன்றினால் அது யாருடைய தவறும் அல்ல. எத்தனையோ நல்ல கதைகளை 1945க்கு முன் எழுதியவர்கள் சென்ற பாதையிலேயே சென்று வெகுதூரம் இன்னும் முன்னேறிவிட்ட எழுத்தாளர்கள் படைத்துக்கொடுத்திருக்கிறார்கள் என்று நிச்சயமாகக் கூறமுடியும். குறைந்தது இருபது சிறந்த எழுத்தாளர்கள் இன்று எந்த வளப்பமான காலத்துக் கதைகளையும்விட அருமையான கதைகளைப் படைத்திருக்கிறார்கள் என்று நான் சொல்வேன். இப்படிச் சொல்வதால் பொதுவாக இன்று கருத்து உயர்ந்த கதைகள் ஏராளமாக உருவாகி வருகின்றன என்று கொள்ளக்கூடாது. பயனற்றகதைகள் பல பல, தினம் தினம் எழுதப்பட்டு வருகின்றன என்பது உண்மைதான். இதனால் நல்ல கதைகள் அடியோடு இல்லை என்று கூறுவது தோல்வி மனப்பான்மை யாகும். சிறுகதை, நாவல் எழுதுகிற தற்கால இலக்கிய கர்த்தாக்களுக்குச் சில எதிரிகள் என்றுமே உண்டு. அந்த எதிரிகள் இன்று ஒத்துப் பேசிக்கொண்டு, மேடையிலும் பத்திரிகையிலும் பேசி எழுதி வருவதுதான் இப்பொழுதுள்ள மாறுதல். பண்டிதர்கள் (இப்பொழுதுள்ள சில சர்வகலாசாலை டாக்டர்கள் போன்றவர்கள்) ஒருபுறம்,

எதைக்கண்டாலும் பொறுக்காத மாஜி எழுத்தாள விமரிசகர்கள் இன்னொருபுறம். எதையும் அரசிய லோடு கலந்து, அரசியல் நோக் குடனே பார்க்கும் சந்தர்ப்பவாதி கள் மறுபுறம்—இவர்களே ஆக்கும் திறன்படைத்த கற்பனை இலக்கி யாசிரியர்களுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறவர்கள். இலக்கிய உணர்ச்சியோ, கலையுள்ளமோ இல்லாத இவர்கள் பக்கம் பக்க மாக சிறுகதைகளுக்கும் நாவல்க ளுக்கும் இலக்கணம் வேண்டு மானால் எழுதிக்கொண் டிருக்கட் டும். புதிய முயற்சிகளை ஜாதி, மத, அரசியல், இன உறவுகளைக் கொண்டு, அல்லது தோல்வி மனப் பான்மைகொண்டு எடைபோட வர வேண்டாம். வருகிறவர்களை யாரும் பொருட்படுத்தவும் வேண் டாம். 1945-க்கு முன் நல்ல கதை கள் – அதாவது சொந்தமாக எழு தியவை அதிகம் வரவில்லை; பின் னர்தான் அதிகமாக வந்துகொண் டிருக்கின்றன. இதுபற்றி ஒரு விவாத அரங்கு அவசியமானால் கூட்டிப் பார்த்துவிடலாம். புதிய எழுத்தாளர்களின் சிறந்த முயற்சி களில் மாஜி அல்லது பழைய எழுத்தாளர்களாகிவிட்ட ஒன் றி ரண்டு பேர்களுக்கு உண்டான அலட்சியமோ—அசூயையோதான் இந்தப்பேச்சு தீவிரமாக அடிபடுவ தற்குக் காரணம். மேல்நாட்டு இலக்கியக் கிறுக்கர்கள் சிலரின் கோணக்கட்சிகளை எங்கேயோ படித்துவிட்டு அதை மேடையில் வந்து சிறுகதை லட்சணம் இது தான் என்று கூறுகிற 'புல்சூட் பண்டிதர்' களுக்கு சிறுகதை அல் லது நாவல்களை எடைபோடவும் தெரியாது; எடைபோடவும் வராமலிருந்தால் ஆக்கத் துறை யில் இன்னும் வளர்ச்சி காணமுடி யும். எந்த அகாடமியானாலும், எந்தக் கமிட்டியானாலும் நான் நான் என்று தன் தகுதி பாராமல் முன்னால் நிற்கிறவர்கள் இலக்கிய எதிரிகள். இதுதான் பொதுவாகப் பிறருடைய கருத்துமாகும்.

அழ. வள்ளியப்பா

அந்த ஒருசாராரின் கருத்து முற்றிலும் தவறு. 1945-க்கு முன்பு வெளிவந்த சிறுகதைகளை யும், நாவல்களையும் நான் படித் திருக்கிறேன்; அதற்குப் பின்பு வந்தனவற்றையும் படித்திருக்கி றேன். சில எழுத்தாளர்கள் 1945 க்கு முன்பும் எழுதியிருக்கிறார்கள்; பின்பும் எழுதியிருக்கிறார்கள். அவற்றையும் படித்திருக்கிறேன். இவ்விரு துறைகளிலும் நாளுக்கு நாள் வளர்ச்சி ஏற்பட்டு வந்திருப்ப தாகவே நான் கருதுகின்றேன். 1945 என்ற வருடத்தை எதற்காக ஒரு மைல் கல்லாக நிறுத்திவைத் திருக்கிறார்களோ, அதுதான் புரிய வில்லை!

ஹிந்தி மொழி அல்லது ஆங்கில மொழி—இந்த இரண்டில் எது தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உரம் கொடுக்கும்? இதை அரசியல் நோக்கோடு பாராமல், இலக்கிய நோக்கோடு கூற முடியுமா?

ஆர்வி

உலக இலக்கியங்கள் யாவுமே இன்று ஆங்கிலத்தின் மூலமாகத் தான் நமக்குக் கிடைக்கின்றன. ஆங்கிலம் என்பது பிரிட்டிஷ்காரர் அல்லது அமெரிக்கர்களுடைய மொழி என்பதை மறந்துவிட்டு, உலகிலுள்ள பொதுமொழி என்று பார்த்தால் நல்லது. இந்தியாவில் ஹிந்தி பேசுபவர்கள் அதிகம்; அத னால் அது தேசப் பொதுமொழி யாகவேண்டும் என்றால், நாமெல் லாம் பின்தங்கி நிற்கவேண்டியது தான். நம்முடைய சந்ததியினர் சிறந்த இலக்கியங்களை இரவல் மொழி மூலம் அறிந்துகொள்ளும் படிதான் ஆகும்! மொழி என் பது கருத்துக்களைக் கூறும் சாத னம். அதில் பெரும்பாலோர் பேசு கிற மொழி, சிறுபாலோர் பேசு கிற மொழி என்று பிரிப்பது என்று வந்துவிட்டால், சிறந்த விஷயங்கள் கொண்ட மொழி, சிறந்த விஷயங்களே இல்லாது பரவியுள்ள வெறும் மொழி என்று பிரித்துப் பார்ப்பதில் என்ன தவறு? இலக்கியக் கண்கொண்டு பார்த்தால் ஆங்கிலத்தை ஒழிப் பது நமக்கு என்ன, எந்தமொழி இலக்கியாசிரியனுக்கும் ஏற்ற தல்ல என்று நிச்சயமாகக் கூற

லாம். நாம் பொதுமொழி என்று ஹிந்தியைப் படிக்க ஆரம்பித்து, ஆங்கிலத்தைக் கைவிட்டால், ஹிந்தி பேசுபவர்கள் தம் மொழியை மட்டுமா படிப்பார்கள்? ஆங்கிலத்தை உபமொழியாகப் படிப்பார்கள். நாம் மட்டும் ஆங்கிலத்தையும் உதறிவிட்டு, ஹிந்தியின் மூலம் வளம் பெறவும் முடியாமல் திண்டாடுவோம். ஆட்சிமொழி பிரதேச மொழியாகவும், பொதுமொழி ஆங்கிலமாகவும் இருப்பதே நல்லது. ஹிந்தியைத் திணிப்போம் என்று சொல்லாமல் இருந்தால், நாம் அதையும் கற்க முன்வருவோம். பல மொழி கற்க நமக்கெல்லாம் ஆசையா இல்லை?

அழ. வள்ளியப்பா

எனக்கு ஹிந்தி தெரியாது. ஆயினும், அது வளம் நிறைந்த மொழியல்ல என்பதை அறிவேன். 'துளஸி ராமாயணம், ரயில்வே வழிகாட்டி இரண்டும்தான் ஹிந்தியில் முக்கியமானவை' என்று ஒரு பேரறிஞர் ஹாஸ்யமாக டில்லிமா நகரில் நடந்த கூட்டத்திலே கூறினராம். ஆங்கிலம் உலகமொழியாக உள்ளது. ஆங்கிலமொழி ஒன்றின் மூலமாகப் பலமொழிகளின் இலக்கியச் சிறப்பை உணர்கிறோம். பல நாட்டு நல்லறிஞர்கள் தந்த இலக்கியச் செல்வங்களைப் படித்து அனுபவிக்கிறோம். நமது இலக்கியங்களை உலகத்துக்கு அம்மொழி மூலம் அறிவித்து மேன்மேலும் பெருமை அடைகிறோம். ஆகையால், இன்றைய நிலையில் நிச்சயம் ஹிந்தியைக் காட்டிலும் ஆங்கில மொழிதான் இலக்கியம் வளம்பெற — உரம்பெற உதவும்.

இலக்கிய வளர்ச்சிக்கு எழுத்தாளர் பேட்டி உதவுமா?

ஆர்வி

இலக்கிய வளர்ச்சிக்கு எழுத்தாளர் பேட்டி அவசியமா என்பது நல்ல கேள்விதான். பேட்டி மிக மிக அவசியம். எழுத்தாளனை அவனுடைய எழுத்துக்களிலிருந்து அறிந்துகொண்டுவிடலாம் என்று கூறுவார்கள். ஆயினும் அவன் எந்தச் சூழ்நிலையிலிருந்து உருவாகி வளர்ந்தான் என்பது பின்னல் வருகிறவர்களுக்கு உதவியாக இருக்கும். கிட்டத்தட்ட ஒரேவிதமான கருத்துக்கொண்ட எழுத்தாளர்களை ஒன்று சேர்க்கவும் இந்த முயற்சி உதவியாக இருக்கும். எனவே மரபுகளும், புதிய கோணங்களும் புரியச் செய்யக் கூடிய பேட்டிகள் அவசியமே.

அழ. வள்ளியப்பா

அவசியம்தான். எப்படியென்றால் இலக்கிய வளர்ச்சிக்கு வேண்டிய ஒரு சூழ்நிலையை, முக்கியமாக எழுத்தாளருக்கும் வாசகருக்கும் இடையே இருக்கவேண்டிய உறவை பேட்டிகள் வளர்க்கும். தங்கள் பத்திரிகை இவ்வகையில் சிறந்த தொண்டாற்றி வருகிறது.

இன்றைய எழுத்தாளர் சங்கம் எழுத்தை வளர்க்க உதவியாக மாத்திரம் இருந்தால் போதுமா? எழுத்தாளர்களின் உரிமைகளையும் கவனிக்க வேண்டாமா?

ஆர்வி

எழுத்தாளர் சங்கம் எழுத்தை வளர்க்க உதவியாக இருக்கமுடியாது என்பதே என் கருத்து. எழுத்து, படைப்பு என்பதெல்லாம் தனிப்பட்ட முயற்சி. இதில் ஊர்கூடித் தேர் இழுக்கிற கதை எல்லாம் வெறும் கதைதான். சங்கம் என்றால் நாலுபேர் சேர்ந்து பொதுவான காரியங்களைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காக அமைப்பதற்குரியது. நாலுபேர் சேர்ந்து எழுதவும் முடியாது. ஒரு கருத்தை ஒப்புக்கொள்ளவும் உருவாக்கவும் முடியாது. சங்கத்தின் ஆதரவில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தலாம்; சர்ச்சைகள், விவாதங்கள் நடத்தலாம். ஆனல் பேசத் தெரிந்தவன் ஜயித்துக்கொண்டு போவதோடுதான் அது முடியும். அதனல் அதிக நன்மை ஏற்பட்டுவிடுமெனகருதுவதற்கில்லை. ஆனல் இலக்கிய மரபைப் போஷிக்கவும், வளர்க்கவும், புதிய முயற்சிகளை ஆராயவும் ஆதரிக்கவும் எழுத்தாளர்க

ளுடைய காப்பிரைட் உரிமை, தனி உரிமை போன்றவற்றைப் பாது காக்கவும் பராமரிக்கவும், எழுத்தாளர்களுடைய சமூக அந்தஸ்தை உயர்த்தவும் பெருக்கவும் சங்கம் உயர்ந்த அளவில் எழுத்தாளர்களுக்குப் பயன்படும். நாலுபேர் சேர்ந்திருந்தாலே ஒரு பலம்தான். அவர்களை யாரும் அலட்சியப் படுத்தி விடுவது லேசல்ல. கூட்டுறவு முறையில் எழுத்தாளனுடைய பொருளாதார அம்சங்களைக் கவனிப்பது சங்கத்தின் கடமை. இதைச் சரிவரச் செய்தாலே போதும். நாலைந்து திசையில் செல்லும் முரணான லட்சியங்கள் நமக்கு இருப்பதைவிட, ஒரே முகமுள்ள லட்சியங்களே உருவான காரியங்களைச் சாதிக்க உதவி செய்யும். அந்நிய நாட்டு உதவி பெற்ற புத்தக சகாய நிதித் திட்டங்கள் மூலம் எழுத்தாளர்களின் வறுமையும் அனுபவமின்மையும் விலைகொடுத்து வாங்கப்படுகிறது. இந்த அரசியல் லட்சியம் மறைமுகமாக, தேசிய சர்க்காரின் ஆதரவைக் கவர்ந்து இழுக்கிற அளவுக்கு ஊடுருவி வருகிறது. எந்த எழுத்தாளர் சங்கமும் இத்தகைய வெளி வேஷ தர்மகர்த்தாக்களை ஆதரிப்பது சுதந்தரமான எழுத்துலகை அரிக்க வைப்பதாகும். பணம் எழுத்தாளனின் சுதந்தர ஆர்வத்தையும் லட்சியத்தையும் முயற்சியையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிடும். எனவே எழுத்தாளர்களுடைய உரிமைகள், நலன்கள் இவற்றைக் கவனிப்பதே, எந்த மொழி எழுத்தாளர் சங்கமாக இருந்தாலும், அதற்கு முதல்வேலையாக இருத்தல் வேண்டும். அது இருந்தால், எழுத்து தானே வளரும். சங்கம் இலக்கியத்தை தானே வளர்த்துவிடாது.

அழ. வள்ளியப்பா

எழுத்தாளர் சங்கம் பொதுவாக எழுத்தாளரின் உரிமைகளைக் காப்பாற்றவும் இயன்றளவு முயற்சி எடுத்தே வருகிறது. உரிமையைக் காப்பாற்றவே 'காப்பிரைட் மசோ'தாவில் செய்யவேண்டிய திருத்தங்களை சங்கம் எடுத்துக் கூறியது; 'பிரஸ் கமிஷன்' கேட்ட கேள்விகளுக்குப் பதில்கள் அளித்தும், ஆலோசனைகள் கூறியும் உதவியது; மகாநாட்டில தீர்மானங்கள்மூலம் உரிமைகளைப் பாதிக்கும் விஷயங்களை எடுத்துக் காட்டி வற்புறுத்தியது; மேலும், சில எழுத்தாளர்கள் தங்கள் உரிமைகளைக் காக்கச் சங்கத்தை அணுகியபோதெல்லாம் சங்கம் தலையிட்டு உதவியிருக்கிறது. இவ்வகையில், இன்னும் செய்ய வேண்டியவை பல உள்ளன. படிப்படியாகத்தானே செய்ய முடியும்?

தமிழ் இலக்கியத்தில் புதுப் பாணிகளையும் புதிய பரீட்சைகளையும் செய்து பார்க்க இடம் இருக்கிறதா? செய்து பார்த்துள்ளவர்கள் இருக்கிறார்களா?

ஆர்வி

தமிழ் இலக்கியத்தின் பழம் பெருமைகளை ஈற்றடிகளை வைத்துக்கொண்டு எத்தனைக்கு எத்தனை பம்பிப் பம்பிப் பேசி பழமை பாடி வருகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அதற்கு மேலும் தமிழில் புதுப்பரீட்சைகள் செய்ய இடம் இருக்கிறது. ஓரளவு செய்யப்பட்டும் வருகிறது. ஆனால் அவற்றைப் புரிந்துகொள்வாரும் பாராட்டுவாரும்தான் அரிதாயிருக்கிறது. புதுப்பாணி என்றால் சந்தேகத்தோடும் சங்கடத்தோடும் பார்க்கிற சில 'சான்றோர்' இருக்கிறார்கள். இவர்கள் மனப்போக்கு முதலில் சிறிது மாறி விசாலமடைய வேண்டும். அப்பொழுதுதான் மேலும் பல பரீட்சைகளைச் செய்து பார்க்கத் தூண்டுதல் இருக்கும். நம்முடைய வாழ்க்கை ஓர் எல்லைக்குள் தேங்கிக் கிடப்பதால் பல புதிய கருத்துக்கள், பிரச்னைகள், விஷயங்கள் இவற்றை எடுத்துக் கையாள நம்மால் முடிவதில்லை. திரும்பத் திரும்பப் படித்து பழகிய விஷயங்களை விட்டு நம்மால் விலகிச் செல்லவும் முடியவில்லை. ஆனால் உலக மாறுதல்களாலும் வெளி நாட்டுக் கலாசாரத் தொடர்புகளினாலும் மாறிவருகிற

நம்முடைய வாழ்க்கையை அடிப்படைத் தத்துவங்களை விட்டுப் பிறழாமல் பார்த்துக்கொள்ளப் பழம் பெருமைகள் பேசுவது போதா; புது முயற்சிகள் தேவை. புது முயற்சிகளுக்கான வரவேற்பும் அதிகமாகத் தேவை. இருப்பது போதாது.

அழ. வள்ளியப்பா

புதுப் பாணிகளும், புதுப் பரிட்சைகளும் இரண்டு வகைப்படும். ஒரு கதையைச் சொல்லுகிற முறை இருக்கிறதே, அதில் பல உத்திகளைக் கையாளுவதுண்டு. கதைகளின் கரு அமைப்பிலே புரட்சியைக் கையாளுவதும் உண்டு. இந்த இருவகைகளிலும் தமிழில் நல்லவளர்ச்சி ஏற்பட்டுள்ளது; ஏற்பட்டு வருகிறது; ஏற்படுவதற்கு வாய்ப்பும் இருக்கிறது. பலர் இவ்விதமான புதுமைகளை நன்ருகச் செய்து காண்பித் திருக்கிருர்கள். உதாரணமாக புதுமைப் பித்தன், டாக்டர் மு. வ., கல்கி, ராஜாஜி. தேவன், சோமு, கு. ப. ரா, விந்தன் போன்ற எழுத்தாளர்கள் (சிலாது பெயரைக் குறிப்பிட மறந்திருக்கலாம்; மன்னிக்கவும்) சரித்திரக் கற்பனைகள், கருத்தாழம் கொண்ட சிந்தனைச் சித்திரங்கள்; உள்ளர்த்தம் அமைந்த நூதனக் கற்பனைகள், சமூகச் சீர்திருத்தச் சித்திரங்கள் ஆகிய பல வடிவங்களில் புதிய புதிய பாணிகளையும் பரிட்சைகளையும் செய்து வெற்றி கண்டிருக்கிருர்கள்.

குழந்தைகள் இலக்கியத்தில் படிப் பிரிவினைகள் (Age - Limits) தேவை என்பதையும், அவற்றிற்குத் தகுந்தமாதிரி இலக்கியம் உருவாகவேண்டு மென்பதையும் சிலர் அவசியமாக கருதுகிருர்கள். தமிழில் அப்படி உருவாக முடியுமா?

ஆர்வி

குழந்தை இலக்கியம், குழந்தை இலக்கியம் என்று தனியாக உருவாக்கவேண்டிய நிலை இப்போது அவசியமாகிவிட்டது. பழங்காலத்தில் இப்படி இருந்ததாகத் தெரியவில்லை. உலக அனுபவங்களும் அறிவும் வளர்ச்சி பெற, குழந்தைகளுக்கு என்று தனியாக ஒருவகை இலக்கியம் அவசியமா என்றுகூட ஒரு கேள்வி எழுகிறது. ஆனல் அது வேறு விஷயம். குழந்தை இலக்கியம் என்ருல் பெரிய எழுத்தில் அச்சான புத்தகம் என்று சிலர் இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கின்ருர்கள். சுவடி பார்த்துப் படித்த குழந்தைகளை விட, சின்ன எழுத்துப் படித்துக் குழந்தைகள் கண்ணைக் குருடாக்கிக்கொண்டு விடுவார்கள் என்பதைக்கூட நான் ஒப்பவில்லை. ஆனல் பெரியவர்களும் இப்பொழுது பலவிதமான ஆபாச விஷயங்களையும் பல குரூரமான விஷயங்களையும் புத்தக வடிவில் படிக்கவேண்டியிருக்கிறது என்று ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டபடியால், அவையெல்லாம் இல்லாத நல்ல விஷயங்களாக அடங்கிய குழந்தை இலக்கியம் வேண்டும் என்று நாம் உணரத் தலைப்பட்டு விட்டோம். ராமாயணம், பாரதக் கதைகள் குழந்தைகளுக்கு ஏற்காதவையா, புரியாதவையா? பஞ்ச தந்திரக் கதை, கோமுட்டிச் செட்டியார் கதை இவையெல்லாம் பெரியவர்களும் படித்து ரசிக்கக் கூடாதவையா? அல்ல. சின்னக் குழந்தைகள், பெரிய குழந்தைகள், குழந்தைகளைப் பெற்றவர்கள் எல்லாருமே ஒரே படியாக ரசிக்கக் கூடிய கதைகளுக்கு இந்த நாட்டில் என்றுமே பஞ்சம் வந்ததில்லை. ஆனல் இப்போது பஞ்சம் வந்து விட்டது. கல்விமுறை மாறிவிட்டது. கற்கும் விஷயங்கள் மாறி விட்டன. நல்ல கதைகளைப் புனைந்து சொல்லக்கூடியவர்கள் எதை எதையோ எழுதுகிருர்கள். நாடோடிக் கதைகளையோ, பழங் கதைகளையோ மீண்டும் தாம் கேட்டபடி எடுத்துச்சொல்வாரும் இல்லை. அதனல்தான் பஞ்சம் வந்துவிட்டது. அதனல்தான் பிரிவினையும் வந்துவிட்டது. குழந்தை இலக்கியம் என்ற பிரிவினை வந்த பிறகு — அதைப் பத்திரிகைகள், புத்தகங்கள் மூலம் வெளியிடுவது என்று ஏற்பட்ட பிறகு — எல்லோருக்கும் ஒரே சமயத்தில், புரியும்

படியாக, ரசிக்கும்படியாக எழுதுவது முடியவில்லை. உடல் வளர்ச்சி வேறு, மன வளர்ச்சி வேறு. ஐந்து வயதுக் குழந்தைக்குச் சொல்பவை பதினைந்து வயதுக் குழந்தைக்கு எடுபடுவதில்லை. வயதுப் படிக்குத் தகுந்தவாறுதான் எதையும் எழுதவோ சொல்லவோ வேண்டியிருக்கிறது. இன்னும் ஊருக்கு ஊர், நகரத்துக்கு நகரம், ராஜ்யத்துக்கு ராஜ்யம் என்று கூடச் சொன்னால்தான் நடக்கும் போலிருக்கிறது. அறிவுப்படிக்கு ஏற்றவாறு சொல்வது அதனால்தான் அவசியமாகிறது. எனவே பல படிகளிலும் 'குழந்தைகள் இலக்கியம்' உருவாகத்தான்வேண்டும்; தமிழில் அப்படி உருவாகிக் கொண்டும் வருகிறது என்றும் சொல்வேன்.

அழ. வள்ளியப்பா

குழந்தை நூல்களில் படிப் பிரிவுகள் மிக மிக அவசியமாகும். 3 வயது முதல் 6, 6முதல் 9, 9முதல் 12, 12 முதல் 15 என நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்ற புத்தகங்கள் எத்தனை வெளிவந்துள்ளன என சமீபத்தில் ஆராய்ந்தோம். முதல் இரு பிரிவுகளுக்கும் ஏற்ற நூல்கள் மிகவும் குறைவாகவே வெளிவந்துள்ளன. ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் புத்தகங்கள் வெளியிடுவதானால், வர்ணப் படங்கள், உறுதியான தாள், கனத்த அட்டை முதலியன அவசியம். செலவு அதிகமாகும். அதனால், விலையும் அதிகமாகத் தோன்றும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்கத் தயங்குவார்கள். அப்படிப்பட்ட புத்தகங்கள் வெளிவரவேண்டுமானால்; ஒவ்வோர் ஆரம்பப் பள்ளியிலும் கட்டாயம் ஒரு நூல் நிலையம் இருக்கவேண்டும். குறைந்தது 5,000 பிரதிகளாவது விற்பனையாகும்போல் தோன்றினால்தான் பதிப்பாளர்கள் தயக்கமின்றி இம்முயற்சியில் ஈடுபடுவர்; எழுத்தாளர்களும் ஊக்கமுடன் பல புதுப் புது நூல்களை எழுதுவார்கள். தக்க சூழ்நிலை இல்லாததால்தான், அப்படிப்பட்ட நூல்கள் தமிழில் அதிகமாக வருவதில்லை.

சிறுவர் சிறுமியர்களுக்குத் துப்பாக்கிக் கதைகள் தேவைதானா?

ஆர்வி

குழந்தைகள் படிப்பதற்கான கதைகள் என்று துப்பாக்கிக்கதைகள் வருவது அத்தனை சரியல்லதான். ஆயினும் எதை எழுதினாலும் அது பச்சிளம் மனத்திலே தீமையைப் பதியவைக்கும் விதத்தில் எழுதக் கூடாது என்றாலே போதுமானது. பூதக் கதைகள், கொடிய மந்திரவாதிக்கிழவிகளின் கொடுஞ்செயல்கள், ராட்சஸர்களைப்பற்றிய பயங்கரக் கதைகள் எல்லாம்கூட அப்படிப் பார்க்கப் போனால் கூடாதுதான். இவ்வாறு விலக்கிக்கொண்டே போனால் கதைக்கு விஷயம்தான் எங்கே கிடைக்கும்? நாயும் பூனையும் பேசுவதை ஒரு குழந்தை எத்தனை வயது வரையில்தான் நம்பும்? ஆகவே துப்பாக்கிக் கதைகள் என்று சொல்வதைவிட, குரூரமான கொலைக் கதைகள், துப்பாக்கியால் டுமீல் என்று சுட்டுத் தள்ளிக்கொண்டேயிருக்கும் கதைகள், மர்மக் கொலைகள் நடைபெறும் கதைகள் — இவையெல்லாம் வெளியிடப்படலாகாதென்று கூறலாம். அக்கிரமம் புரியும் வழிகளையும், திருடனை வீரனாகச் சித்திரிக்கும் வர்ணனைகளையும், அதர்மம்

ரூபாய் 15-ஐக் கொண்டே உங்கள் ரேடியோவைத் தயார் செய்து கொள்ளலாம்; ரேடியோ ரிப்பேர் மின்சாரம் முதலியனவற்றையும் தெரிந்து கொள்ளலாம். 14 பாஷை ஆசிரியர் விலை ரூ 4. ஆசான் இல்லாமல் சைனா, ஜப்பான், பர்மா, பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி, நாட்டு மொழிகளை நீங்கள் கற்றுக் கொள்ள முடியும். புகைப் படப் பயிற்சி நூல் ரூ 5. தையற்கலை நூல் ரூ 5. சோப்பு தயாரிப்புப் புத்தகம் ரூ 3. வாசனைத் திரவியம் தயாரித்தல் நூல் ரூ 3. சங்கீதம், நடனம்: ரூ 3, சித்திரம் ரூ 3. வி. பி. பி. செலவு 75 நயாபைஸா தனி.

Anand Industries, Gopalpuri, Aligarh.

வெல்வதுபோன்ற அநியாயமான நீதிகளையும் வைத்து வெளிவரும் கதைகள் குழந்தைகள் உள்ளத்தைப் பாழடித்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. எதை வெளியிட்டாலும், அது குழந்தை உள்ளத்தில் தீமை விளைவிக்காததாகவும், அவர்களுடைய கற்பனையை நல்ல வழியில் தூண்டுவன வாகவும், அவர்கள் அறிவை வளர்ப்பன வாகவும், நம்பிக்கையைப் போஷிப்பவைகளாகவும், உற்சாகம் ஊட்டுபவைகளாகவும் கட்டாயம் இருக்கிறதா என்று பார்த்தே வெளியிடவேண்டும். அப்படிப் பாராமல், மர்மக்கொலைகளும் சினிமா நடிகை நடிகர்களின் அந்தரங்க விஷயங்களும் சிறுவர் பத்திரிகைகளில் வெளியிடுவது தார்மீகமான குற்றமாகும்.

அழ. வள்ளியப்பா.

துப்பாக்கிக் கதைகள் தமிழ்நாட்டில் தலைகாட்ட ஆரம்பித்த காலத்திலிருந்தே அவற்றை எதிர்த்து வருபவன் நான். இக்கதைகள் பெருகப் பெருக இளம் குற்றவாளிகளின் தொகையும் பெருகி வருகின்றது என்பதைப் பற்பல ஆதாரங்களுடன் பல அமெரிக்க அறிஞர்கள் எழுதியிருக்கின்றார்கள்; தொடர்ந்து எழுதி வருகின்றார்கள். இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளிலும் இக்கதைகளால் நல்ல புத்தகம் படிக்கும் பழக்கமே மறைந்து வருவதாக, நாட்டின் நலனில் அக்கறையுடைய பலர் கூறிக் கவலைப் படுகின்றனர். ஆயினும், பெரும்பாலான சிறுவர்களுக்கு இம்மாதிரிக் கதைகளைப் படிப்பதில் அதிகமான ஆர்வம் இருக்கின்றது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. அதற்காக, அவர்கள் விரும்புவதையெல்லாம் எழுத்தாளர்கள் எழுதுவதா? குழந்தை விரும்புகிறது என்பதற்காக அதன் கையிலே அழகான பொம்மையைக் கொடுக்கலாம்; பள பளக்கும் கத்தியைக் கேட்டால் கொடுக்கலாமா? களங்கமற்ற சிறுவர்களின் பலவீனத்தைப் பயன்படுத்திப் பணமாக்க நினைப்பது வருங்கால சமூகத்துக்குச் செய்யும் [illegible] துரோகமாகும். ★

அடுத்த இதழில்:

இலக்கியச் சுவை
ம. ரா. போ. குருசாமி

*

தம்பிக்கு
ஜி. உமாபதி

*

சந்தித்தோம்—சிந்தித்தோம்
டாக்டர் மு. வ—சாண்டில்யன்

*

நான் படைத்த பாத்திரங்களிலே எனக்குப் பிடித்தது
'ஸ்ரீவத்ஸன்'

*

புத்தகங்கள் வெளியிட்டேன்
சங்கு கணேசன்

*

மனோதத்துவக் கதை:
பொம்மைக் கல்யாணம்
ச. அய்யாப்பிள்ளை

*

கதாசிரியர்கள் — கவிஞர்கள்
கோவி. மணிசேகரன்,
கே. கனகவல்லி, பரணி,
நாக. முத்தையா, பிரம்மம்,
நா. பார்த்தசாரதி,
பாரதி தங்கராஜன்,
கார்த்திகை பாலன்,
அமிர்தம், க. இரத்தினம்.

*

குறுநாவல் தொடர்ச்சி
ஆலமரத்துப் பைங்கிளி
பூவை

முதலாளி

எம். ஏ. வி. பிக்சர்ஸ் முதலாளியை முதலில் நாம் பாராட்டுகின்றோம். பெரும்பாலும் புதிய முகங்கள், புதிய கதாசிரியர், புத்தம் புதிய டைரெக்டர் இவர்களைக் கொண்டு மிகக் குறைந்த கால இடைவெளியில் ஒரு படத்தைத் தயாரித்து வெளியிட்டுள்ள திரு வேணு அவர்களின் துணிச்சலையும் புகழவேண்டும். திரு எஸ். எஸ். ராஜேந்திரன் கதாநாயகனாக நடிக்கும் முதற்படம் இது. ஒன்றிரண்டு நிமிஷங்கள் முகம்காட்டி மறைந்த திருமதி தேவிகா கதாநாயகியாகத் தோன்றும் முதல் கதையும் இதுவேதான்.

'முதலாளி' படம் வெற்றிப் படம்; மற்றப் பட முதலாளிகளுக்கு வழிகாட்டி!

கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றின் முதலாளி அமெரிக்காவுக்குப் பறந்து சென்று ஐந்தாண்டுகளை ஓடவிட்டுத் திரும்புகையில் பம்பாயில் தொழிலாளியின் துயரங்களைக் கேட்கிறான். மேற்படி கஷ்ட நஷ்டங்களை அறியத் துடிக்கிறது அவனது பரந்த மனம்; தொழிலாளியாக மாறுகிறான். சேலம் சென்று அவனுடைய சொந்தத் தொழிற்சாலையிலே தானும் ஒரு சாதாரணத் தொழிலாளியாக மாறிப் பணி புரிகிறான். தொழிலகத்தின் மானேஜரின் அட்டுழியங்களை அறிய முடிகிறது; ஏழை மக்கள் அல்லல்களின் மத்தியில் ஊசலாடும் பரிதாபக் காட்சிகளையும் காணுகிறான். தொழிலாளியின் வேஷம் கலைகிறது; தாய் உள்ளம் அமைதி பெறுகிறது; காதலித்த பெண்ணைக் கரம் பற்றிய தொழிலாளி முதலாளியாகத் தோன்றும் கண்கொள்ளாக் காட்சியுடன் படம் நிறைவு பெறுகிறது.

பண்டை நாட்களில் மன்னர்கள் மாறுவேடம் புனைந்து நகர்ச்சோதனைக்குப் புறப்படுவது உண்டாம். ஆனால் ஏழைமக்களின் துயர்களைத் துடைத்ததாக அமைந்த கதைகள் மிகக் குறைவு. ஆனால் இந்த முதலாளி தனிமனிதன். 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதி வாக்கை சுவரில் படித்த போது, திரு ராஜேந்திரன் முகம் பேசுகிறது; தொழிலாளர் கூட்டத்தில் முதலாளியாக வீற்றிருந்த போது, அவர் பேச்சு கம்பீரமாக ஒலிக்கிறது. தாய் தன்னை ஐயப்படுவது அறிந்து கதறியழுது, 'நான் உங்கள் மகன் தான் அம்மா' என்று விம்மி வெடித்துக் கடைசியில் ஆணை வைத்துப் பேசும் கட்டம் நம் கண்களைக் கண்ணீரில் மிதக்கச் செய்கிறது. சிவாஜிக்குப் 'பராசக்தி' பெயர் சொன்னது போல, எஸ். எஸ். ஆர். பெயருக்கு 'முதலாளி' புகழ்மாலை சூட்டுகிறது. திரு

வேணு அவர்களின் பரந்த மனத்துக்குக் கடப்பாடுடையவரல்லவா இவர்!

திருமதி தேவிகாவைப் பற்றிக் குறை சொல்ல என்ன இருக்கிறது? புது நடிகை, புது நட்சத்திரமாகச் சுடர் விடும் விந்தைக்கு இப்படம் ஓர் அடையாளம். காதல் கட்டங்களில் உணர்ந்து நடிக்கிறார்; கெட்ட நோக்கம் கொண்டிருந்த மானேஜரை எதிர்த்துப் பேசும் கட்டங்களில் வீராவேசமாகப் பேசுகிறார்.

விஜயதசமி தினத்தன்று குமாரி விமலா, பேபி சுமனா இவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சபையின் ஆதரவில் நடைபெற்றது. இவ்விரு மாணவிகளும் ஸ்ரீ பரதகலா நிலையம் தலைவி திருமதி எம். கே. செல்வமணியிடம் சிக்ஷை பெற்றவர்கள். அரங்கேற்றத்திற்கு 'கல்கி' துணை ஆசிரியர் திரு பகீரதன் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், நடனக் கலையின் உயர்வைக் குறிப்பிட்டு விட்டு, நடனமாடிய மாணவிகளின் ஆர்வத்தைப் புகழ்ந்து, அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியை திருமதி எம். கே. செல்வமணியின் பயிற்றுவிக்கும் திறமையையும் வெகுவாகப் பாராட்டினார்.

திரு வெங்கடராமானுஜம் வார்த்தைகளை அளந்து, எடை போட்டு, அறிந்து உணர்ந்து எழுதியிருக்கிறார். சிரிக்க வைக்கிறார் நம்மை — திருமதி முத்துலக்ஷ்மி ஜோடியின் மூலம். சிரிப்பும் சிந்தையும் ஊடும் பாவுமாக இழைந்தோடுகின்றன.

திருமதி எம். என். ராஜத்துக்குரிய கட்டங்கள் குறைவு. அப்பழுக்கு இல்லை. திரு டி. கே. ராமசந்திரன் புதிய வில்லனா என்ன?

கவிஞர் கா. மு. ஷெரீப் அவர்கள் 'பாடி,' திரு சௌந்தரராஜன் 'பாடிய' 'ஏரிக்கரையின்மேலே' பாட்டு இன்னமும் நம் காதுகளில் எதிரொலிக்கிறது.

முதலாளியும் தொழிலாளியும் சேர்ந்து போய்ப் பார்த்து மனம் திருந்த வேண்டிய படம் இது.

சம்பூர்ண ராமாயணத்துக்கு நல்ல சகுனம் 'முதலாளி.'

அம்பிகாபதி

பழங்கதை இது. எதிர்க் கட்சித் தோழர்களுக்குப் பிடிக்காத பரம்பரைப் பெயர் ஆயிற்றே இது! ஆனாலும், கவிஞர் கண்ணதாசன் அவர்களையும் பாடல் புனையச் செய்து விட்டார் அவர் சகோதரர். 'கண்ணிலே இருப்பதென்ன கன்னி இளமானே!' பாட்டு கவிஞருடையது. ஓமாயணப் பாடல் அல்ல; தேன் சொட்டுகிறது–திருமதி பானுமதியின் குரலில். பாட்டுப் பொருளின் மகிமையும் சேர்த்தி!



'வீரபாண்டியக் கட்டபொம்மன்' நாடகத்தையும் திரு கட்டபொம்மன் கணேசனையும் ராஜாஜி புகழ்ந்துரைக்கும் உன்னதமான கட்டம் இது.

அம்பிகாபதி – அமராவதி பாத்திரங்களைத் தமிழகத்துக்கு அறிமுகம் செய்வித்த பணி திரு பாகவதர்–சந்தானலக்ஷ்மி ஜோடிக்கு உரியது. பாகவதர் பட உலகைத் துறந்திருக்கிறார்; அந்த அம்மையார் உலகை விட்டே பிரிந்து விட்டார்.

மறுபடியும் ஏ. எல். எஸ். அவர்கள் கம்பர் மகனை வண்ணமும் வனப்பும் மிகும்படியாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

இவருடைய புத்தி நுட்பம் போற்றற்குரியது. கலைவாணர் கடைசியாக நடித்த சில படங்களில் இதுவும் ஒன்று. அவர் மறைந்த பின் முதலாவதாகத் திரையிடப்படும் சித்திரம் இது. கலைவாணருக்கு நன்றிக் காணிக்கைச் செலுத்தப்படும் கட்டம் மெய்சிலிர்க்கச் செய்கிறது.

அந்த 'அம்பிகாபதி' பாட்டுக்களுக்காகவேதான் ஓடியது, வாரக் கணக்கிலே! ஆனால் இந்த அம்பிகாபதி அருமையாகப் பேசுகிறான்; நடிப்புக்குத்தான் கேட்கவேண்டியதேஇல்லை. பாடத் தெரிந்திருக்கலாகாதா? பின்னணிப் பாடகர்கள் செவ்வனே கடமையாற்றியுள்ளனர். திரு கு. மா. பா–வின் 'மாசிலா நிலவே' பாடலும் திரு கு. சா. கி-யின் தொகையறாவும் சிறப்பாக உள்ளன.

கதைக் குழுவினர் இப்படத்தில்செய்த பணி புலனாகவில்லை. வசன அமைப்பில் அழுத்தம் உள்ளது; ஜீவன் இருக்கிறது.

காதற் கட்டங்களிலே சிவாஜி–பானுமதி ஜோடி அற்புதமாகவே நடித்துள்ளனர். திரு ராதா அமைதியாக நடிக்கிறார். திருமதி ராஜசுலோசனாவுக்குப் புதிய பாத்திரம் அல்ல இது. திரு தங்கவேலு–கருணாநிதி தோன்றும் காட்சிகள் பொறுமையை சோதிக்கின்றன. நாய் வாலை நிமிர்த்தும் கட்டம் ஒன்று போதாதா? திரு நம்பியார், நாகையா–குறை சொல்ல இடம் வைக்கவில்லை!

'அம்பிகாபதி'யின் டைரக்டர் திரு ப. நீலகண்டன்.

'பைரவி' ★

ஆனந்த விகடன்

இராமச் சந்திர மூர்த்தியை ஒரு முறை வைதேகி மல்லிகைப் பூமாலையால் கட்டினளாம். இராம தூதன் இந்த ரகசியத்தைச் சிதாப் பிராட்டியிடம் சொல்கின்றானும்—அசோகா வனத்தில். இக்காட்சியை நாளெல்லாம் பார்த்துக் கொண்டே யிருக்கலாம். 'ஆனந்த விகடன்' தீபாவளி மலர் தாங்கியிருக்கும் அட்டைப்படக் காட்சி இது. ஜகத் குருவின் 'மனமார்ந்த ஆசி'யுடன்தொடங்கப் பெற்றிருக்கின்ற தீபாவளிக் காணிக்கையில் தமிழகம், ஆந்திரம், கேரளம், மைசூர் முதல் மந்திரிகள் கட்டுரைகள் எழுதி யிருக்கிறார்கள். கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு அவர்களின் பாட்டு படிக்கப் படிக்கத் தெவிட்டாதது. மனிதன் படைத்த மதியைப் பற்றிப் பாடுகிறார். திருவாளர்கள் பி. ஸ்ரீ. டாக்டர் மு. வ, தொ. மு. பா, அகிலன், திருமதி குகப்ரியை ஆகியோர் வரைந்த கட்டுரைகளும், திருமதி வசுமதி ராமசாமி, திருவாளர்கள் கி. வா. ஜ. கோபு, கி. ச. பட்டுசாமி, ஜெகசிற்பிய்ன், சாவி, மணியன் போன்றோரது சிறுகதைகளும் சிறப்பாக உள்ளன. பழைய சித்திரமும் புதிய பாத்திரமும் — அற்புதமான தயாரிப்பு. போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய இலக்கிய விருந்து இது.

கல்கி

திரு மணியத்தின் கைவண்ணத்தை நல்லவேளையாக இவ்வாண்டிலும் கல்கி மலர் ஏந்தித் திகழ்கிறது. 'பாற்கடல்' என்ற நாடகம் ராஜாஜியின் உன்னதமான படைப்பு. பேராசிரியர் அ. சி. ரா-வின் நாடகமும் சிறப்பான தயாரிப்பாகும். 'தலைமலைகண்ட தேவர்' 'நாதனுள்ளிருக்கையில்' 'கலைஞன் இதயம்' 'திரிலோக சுந்தரி' ஆகிய சிறுகதைகள் கதைச் சிறப்புடன் எழுதப்பட்டுள்ளன. 'கல்கி' ஆசிரியர் குழாமின் பெரும்பாலான பெயர்கள் ஏனோ காணப்படவில்லை.

கலைமகள்

'கலைமகள்' வெளியிடும் சிறப்பு மலர்களின் இலக்கியத்தரம் தனித்தன்மை கொண்டது. வாடிக்கையாக எழுதும் பலர் மலரை அலங்கரிக்கிறார்கள். புதியவர்கள் சிலரும் இல்லாமல் இல்லை. மொத்தத்தில் மலரின் சுவை மிகுதியாகவே காணப்படுகிறது. திருவாளர்கள் மு. வ, ம. ரா. போ. குருசாமி, சஞ்சீவி, தமிழ் ஒளி., நாணல், ராஜம் கிருஷ்ணன், லா. ச. ரா. ஜெயமணி, நா. பா., பி. வி. ஆர் ஆகியோரின் பெயர்களுக்குக் கீழே வெளியாகியுள்ள படைப்புகள் உயர்வாகச் சிந்திக்கப் பட்டுள்ளன.

அமுத சுரபி

அட்டைச் சித்திரம் இன்னும் உயர்ந்த முறையில் அச்சாக்கப் பட்டிருக்கவேண்டும். கி. வா. ஜ-வின் 'முல்லைமணம்' மலருக்கு அணிகலன். 'குகப்ரியை'யின் சிந்தனை இலக்கியவளம் மிகுந்தது. டாக்டர் அ. சி ; பேராசிரியர் அ. சி. இருவரும் மலருக்குக் காணிக்கை வைத்துள்ளனர்.

காதல்

இலக்கியம் வளரப் பாடு பட்டு வரும் இலக்கியப் பேனுக்கள் உதவியுள்ள கட்டுரைகள் தரம் உயர்ந்துள்ளன. திருமதி ஆர். சூடாமணியின் கதை உள்ளத்தைத் தொடும். கவிஞர் ஷரீப் புனைந்த பாடல் இனிக்கிறது. கதைப்பகுதியில் இன்னும் 'கனம்' சேர்த்திருக்க வேண்டாமா?

சுதேசமித்திரன்

சென்ற ஆண்டு இம் மலர் வந்த சுவட்டில் இலக்கியப்புயல் வீசியது. இம் முறை இலக்கியத் தென்றலின் மென்மையை அனுபவிக்கிறோம். பெரும்பாலான எழுத்தாளர்கள் மலரின் தரத்தை உயர்த்த தத்தம் மூளைக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள்! ★

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

'உமா' தலையங்கம் ஆட்சி புரிவோருக்குப் புத்தி புகட்டும் வகையில் அமைந்துள்ளது. 'பதி'யின் மடல் இன்றைய தமிழ் நாடு காங்கிரசின் இழிந்த நிலையை நன்கு எடுத்துக் காட்டியுள்ளது. இதழ் தவறாமல் 'பூவை'யின் கதையும் வரவேண்டும்.

சீ. வைத்தியநாதன், பழமார்நேரி.

....'தம்பிக்கு' சிந்திக்காத ஒவ்வொரு உயிரையும் சிந்திக்க வைக்கும் மருந்து. 'புரட்சிக் கவிஞர் பாரதி' 'உமா' தந்த மோகனச் சிரிப்புக்களில் ஒன்று.

சி. கிருஷ்ணன், பாலப்பன்பட்டி.

....'வள்ளலார் கலைவாணர்' கச்சிதமான விமரிசனம். 'பதி'யின் கடிதம் காங்கிரஸ் தம்பிகளுக்கு நல்லதொரு வழிகாட்டி! திரு ம. பொ. சி. யின் கட்டுரை பத்திரப் படுத்திப் பலருக்கும் கொடுத்துப் படிக்க வைக்க வேண்டிய தொன்று.

கே. மணி, சென்னை-24.

....ஆசிரியர் பதியின் 'தம்பிக்கு' அமைதியில்லா அரசியலின் உண்மைகளை களங்கமில்லா நீரில் காணும் ஆழ்ந்த பொருட்களைப் போன்று அறிவுறுத்துகிறது.

தமிழ்த்தாசன், திண்டுக்கல்.

....கார்த்திகை பாலனின் பாப்பா உமா கதை நல்ல படிப்பினை. 'அமிர்தம்' எழுதும் 'புதுமைப் பெண்' தெளிந்த நடையில் புதிய சிந்தனையைச் சொல்கிறது. 'சந்தித்தோம் — சிந்தித்தோம்' பகுதியில் பூவையின் முன்னுரை மிகவும் துணிவுடன் எழுதப்பட்டிருக்கிறது.

கோமதி கோவிந்தன், மதுரை.

...திரு கி. ரா. கோபாலன் அவர்களுடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கக் கடமைப்பட்ட பத்திரிகைகள் ஒன்றிரண்டு தவிர. மற்றவை அன்னாரைப் பற்றி எழுதியிருக்கின்றன. நண்பர் திரு கந்தையா சென்ற உமாவில் தன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததை இனியாவது மாற்றிக் கொள்ளுதல் நல்லது.

சி. செல்வநாயகம், பூண்டி.

...'உமா' உலகெங்கும் தன் சக்தியை உணர்த்துகிருள் என்ருல், மூலகாரணஸ்தராகிய உங்களைப் போற்ற ஆயிரம் வாய்கள் வேண்டும்.

சி. எஸ். ராதாகிருஷ்ணன், புது டில்லி.

...அடித்துக் கூறுவேன் — இந்தப் பரிசு 'அன்பின் திருப்பம்' என்ற கதைக்காக அல்ல—அருள் செல்வநாயகம் என்ற பெயருக்குத்தான் என்று.

என். எஸ். சிவசுப்பிரமணியன், பம்பாய்-19.

....'துமிலன் — பி. எக்ஸ். ஆர்' பேட்டி உபயோகமான கருத்துக்களை அடக்கமாகக் கொண்டுப் பரிமளிக்கிறது.

அஞ்சல் நிலையத்து எழுத்தாள நண்பரின் கண்டனத்தையும், பணமிக்க படத்துறை எழுத்தாளரின் குற்றச் சாட்டையும் கண்டு, தமிழன்னைக்கு நெஞ்சாலும், நினைவாலும், செயலாலும் பணியாற்றி அஞ்சலி செய்யும் அருமைத் தமிழ் எழுத்தாளர்களைச் சிறப்பிக்கும் பணியைக் கைவிட்டு விடாதீர்கள்.

ஏ. ஆர். ராஜாமணி, புது டில்லி-5.

உங்களுக்கு எங்கள் நன்றி!

For

QUALITY DIAMONDS

EXQUISITE JEWELLERY

ARTISTIC SILVER WARES



M/s. T. GOVINDARAJULU NAIDU

DIAMOND MERCHANTS & JEWELLERS

28, NETAJI ROAD :: MADRAS-1.

★

Phone: 4818 **T. G. N.** Grams: "ALANKAR"

நறுமணமும் நாடி

உயர்குணமும் நாடி இருப்பவர்கள்

தேடி வாங்குவது

எல்.ஜி. கூட்டுப் பெருங்காயம்

60-க்கு மேலான வருடங்களாக நாடு முழுவதிலும் சிறப்புற்று விளங்குவது. குறி, பெயர் இவைகளைக் கவனித்துக் கொள்ளுதல் நன்று.

லால்ஜி கோது கம்பெனி

சௌகார்பேட்டை : *மதருஸ்-1.*

வீட்டு சினிமா புரொஜக்டர்



உங்கள் வீட்டிலேயே நண்பர்களுடன் நிஜ சினிமாப் பார்த்து மகிழுங்கள். பாட்டரி அல்லது மின்சாரம் (A C அல்லது D C) மூலம் எளிதாக இயக்கலாம். சினிமாவில் உபயோகிக்கும் 35 M M பிலிமையும் போட்டுப் பார்க்கலாம். திரையில் பளிச்சென்று தெரியும். 4'X4' முழு அளவில் வித விதமான வர்ணங்களில் நடிப்பைக் கண்டு களிக்கலாம். 10 கெஜ பிலிம் சுருளும், விளக்கம் படங்களுடன் கூடிய தகவல்களும் புரொஜக்டருடன் இனமாக அனுப்பப்படும்: விலை ரூ. 12–8–0; வி. பி. பி. ரூ. 3; ஸ்பெஷல் (டீலக்ஸ்) ரகம் ரூ. 20; வி. பி. பி. ரூ. 5. எக்ஸ்ட்ரா பிலிம் சுருள் கெஜத்திற்கு அணா 8. திரை ஒன்றுக்கு ரூ. 3. திருப்திக்கு உத்தரவாதம்.

தானகவே ஆறு முறை சுடும் பிஸ்டல்!

(லைசென்ஸ் தேவையில்லை)



ஆறு முறை தானகவே சுடும் அமெரிக்க மாடல் பிஸ்டல். பயங்கரமான சப்தத்தையும், தீப்பொறிகளையும் கிளப்பித் திருடர்களையும், துஷ்ட மிருகங்களையும் விரட்டும். சினிமா, நாடகங்களுக்கு மிகவும் ஏற்ற கருவி. விலை ரூ. 8–8–0; வி.பி.பி. ரூ. 1–12–0. 25 உதிரி ரவைகள் இனம். அதிகப்படி ரவைகள் டஜன் ஒன்றுக்கு ரூ. 1–4–0. பிஸ்டலுக்கு உரிய தோல் பை ரூ. 2–8–0. ரிப்பேர் செய்ய விசேஷ எண்ணெய் ரூ. 1.

எலெக்ட்ரிக் ரேடியோ கைடு

ரூ. 15ல் உங்கள் சொந்த ரேடியோவைத் தயாரித்துக் கொள்ளுங்கள். ரிபேரிங், வயரிங் இதர எலெக்ட்ரிகல் மெகானிசம் எல்லாவற்றையும் விளக்குவது. விலை ரூ 4. வி. பி. பி. சார்ஜ் அணா 12.

பாஷைகளின் ஆசான்

தமிழ், தெலுங்கு, சீனம், ஜப்பான், பிரெஞ்சு, மலையாளம், குஜராத்தி, மராத்தி, முதலிய 14 அந்நிய, இந்திய மொழிகளைக் கற்றுக் கொள்ளுங்கள். விலை ரூ. 5. வி. பி. பி. சார்ஜ் ரூ. 1. டெயிலரிங்—கட்டிங்கலை ரூ. 4. போட்டோ கிராபி கலை ரூ. 3. சோப்புத் தயாரிக்கும் கலை ரூ. 3. வாசனைகள் தயாரித்தல் ரூ. 2. சித்திரம் பெயிண்டிங்கும் ரூ. 3. ஒரே மாதத்தில் ஹிந்தி கற்றுக் கொள்ளுங்கள் ரூ. 4. வி. பி. பி. சார்ஜ் ஒவ்வொன்றுக்கும் அணா 12.

(கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்)

GLOBE-TRADERS (Umio) ALIGARH (City)

'ராதாஸ்'

உயர்தர ரொட்டிகள், பன்கள்,
பிஸ்கட்கள், பேன்ஸி கேக்குகள்,
தினசரி தயாரிப்பவர்கள்.

RADHA BISCUIT FACTORY
BAKERS & CONFECTIONERS
161, MINT STREET, MADRAS-1.

உரிமையாளர்: டி.பி.ஜி.சாமி

ராதா பிஸ்கட் பாக்டரி
பேக்கர்ஸ் & கன்பெக்ஷனர்ஸ்
161, தங்கசாலை தெரு, மதராஸ்-1

M.M.

பெருங்காயம்
சாம்பார் பவுடர்
வாசந்த் பத்திகள்
&
சீயக்காய்த் தூள்

55 & 555 (0–0–3) சீயக்காய்த் தூள்
சிறந்தது.

மயில் மார்க் நிலையம்,

45, திருவொற்றியூர் ஹைரோடு. சென்னை-21.



அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ்,
4|32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன்: 2200.

சென்னை அக்டோபர் 22 முதல்

ஸ்ரீ கிருஷ்ணா, காமதேனு, உமா, மற்றும்

தென்னாடெங்கும்

எம்.ஏ.வீ பிக்சர்ஸ்

முதலாளி

கதை, வசனம்
வேங்கடராமானுஜம் • டைரக்ஷன் V. ஸ்ரீனிவாசன்

ஸ்டூடியோ: ரத்னா, சேலம்.

BHARAT STUDIO